7 - DEC 1963

திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, வடபழநி.

மாலை 6] சோபகிருது-கார்த்திகை-டிசம்பர் 1963 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்

தமிழ்நாடு முதல் அமைச்சர் **திருமிகு M. பக்தவத்சலம் B.A., B.L.** அவர்களுக்குத் தருமபுர ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம்** அவர்கள், **திரிபுவனம்** கும்பாபிஷேகப் பெருவிழாவில் பொன்னுடை போர்த்துச் சிறப்பித் தருளிய காட்சி.

பொருள் அடக்கம்

1. ஆணையர் அவர்கள் உரை
2. அகப் பொருளில் அருட்பொருள்
3. ஒருவனா? ஓருருவனா?
4. தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. அன்பின் என்பு
6. கண்ணுயிருப்பவன் கண்ணன்
7. கூட்டுவழிபாடு
8. திருக்கோயில் வழிபாட்டுமுறை-2.
9. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
10. பன்னிரண்டாம் திருமுறையில் [எங்கும் இன்பம்
11. செய்யூர்க் கல்வெட்டுக்கள்
12. அழகு வழிபாடு
13. சிவஞான போதம்
14. சிறப்புடைய புராணங்கள்
15. செய்திகள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "**திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34**" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையர்களின்** அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது கார்த்திகை-டிசம்பர் 1963 [மணி 3

அறநிலையத்துறை அதிகாரிகள் சார்பாக

சென்னை ராஜ்ய அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர்

திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், B.A.,B.L.,

அவர்கள் நாராயணபுரம் ஆகம சிற்ப பாரத வியாச வித்வத் ஸதஸ்ஸில் ஆற்றிய உரை

ஸ்ரீ ஆசார்யாளுக்கும், புதுப்பெரியவாள் அவர்களுக்கும் முதலில் எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியோர்களே! தாய்மார்களே!!

சென்ற ஆண்டு இளையாத்தகுடியிலே இதைப்போன்ற ஒரு ஸதஸ் நடைபெற்றது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். அந்த ஸதஸ் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு இத்தகைய ஸதஸ் ஏன் நடைபெற வேண்டுமென்று தோன்றுகிறது? என்பதை மக்கள் நன்குக அறிந்து கொண்டிருக்கிறார்கள். நாம் கிராமியக்கலை என்று மதிப்புக் கொடுக்காமல் ஒதுக்கி வைத்திருக்கிற கலைகள் எல்லாம் ஆலய வழிபாட்டுக்காகத்தான் தோன்றின. ஆலயங்களிலே தான் அவை வளர்ச்சி அடைந்தன. ஆனால் ஆலய வழிபாடு குன்றிப் போகவே அக்கலைகளின் சிறப்பும் மக்களால் உணரப்படாமல் மறைந்து போயிற்று, என்ற உண்மையை அவர்கள் அறிந்தார்கள். மீண்டும் புத்துயிர் பெறவேண்டு மென்று அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும்போது சென்றுண்டு ஸதஸ்ஸில் நடைபெறாத ஒரு நிகழ்ச்சியை இந்தாண்டு ஸதஸ்ஸில் சேர்க்கும்படியாக அவர்கள் ஆக்ஞாபித்தார்கள். அதாவது ஆலய நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டு மென்பது. இங்கு நடக்கின்ற சர்ச்சைகளில் அதிகாரிகளும் பங்கு கொள்ள வேண்டும். எதெது ஆலயவழிபாடு என்பதும், என்னென்ன வழிகளில் அவைகள் சிறக்கவேண்டுமோ அந்தந்த வழிகளை எல்லாம் அவர்கள் பின்பற்றவேண்டும் என்பதற்காகவும் இத்தகைய புனிதமான இந்த ஸதஸ்ஸிலே கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அவ்விதம் ஆக்ஞாபித்தார்கள். இதை நாங்களே உணர்ந்து சென்ற ஆண்டிலேயே செய்திருக்கலாம். இத்தகைய உணர்ச்சிகள் எங்களுக்கு வருவதில்லை.

பெரியோர்களிடத்திலே வந்து ஸத் ஸங்கத்திலே இருந்தால்தான் இத்தகைய புனிதமான எண்ணங்கள் தோன்றும். ஆகவே அந்தப் பணியை சிரமேற் கொண்டு இந்த மூன்று (திருச்சி, மதுரை, ராமநாதபுரம்) மாவட்டங்களிலேயுள்ள நிர்வாக அதிகாரிகளாவது இதில்

கலந்து கொள்ளட்டும் என்று அவர்களுக்கு உத்திரவு பிறப்பித்தேன். அவர்களில் அநேகம் பேர் இங்கு வந்திருக்கிறார்கள். ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகள் ஆலய வழிபாடு எப்படி சிறப்பிக்க வேண்டும் என்பதற்கு என்னிடம் சொன்ன கருத்துகள் சுமார் நூறு இருக்கும். ஆனால் அவர்கள் உள்ளத்திலே ஆத்மீகத்துறையிலே இந்த நாடு முன்னேற வேண்டுமானால் ஆலய வழிபாடு சிறக்க வேண்டும். ஆலயம்தான் நமக்குக் கதியைக்கொடுக்கும். மதம் தான் இந்நாட்டைக் காப்பாற்றும் என்ற உறுதியான நம்பிக்கை பதிந்திருப்பதினாலே அந்த ஆலய வழிபாட்டைச் சிறப்பாகச் செய்வதற்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான எண்ணங்கள் அவர்களுடைய உள்ளத்திலே ஒவ்வொரு நிமிஷமும் உதித்துக்கொண்டே இருக்கின்றன.

அவற்றில் சிலவற்றையாவது நாளையதினம் மறுநாள் இந்த இரண்டு நாளிலாவது இந்த நிர்வாக அதிகாரிகளுக்கும் அவர்கள் நமக்கும் எடுத்துரைக்க வேண்டும்என்று விரும்புகிறோம். அவர்கள் சொல்லுவதை நாங்கள் மிகவும் பணிவோடும் விநயத்தோடும் ஆர்வத்தோடும் எங்களால் ஆனவரையில் கடைப்பிடிப்போம் என்ற ஒரு உறுதியை அவர்களுக்கு அர்ப்பணம் செய்து, நாங்கள் இவ்விடம் வந்திருக்கிறோம். அவர்களுடைய சிறந்த உரைகளைக் கேட்பதற்காக நாங்கள் வந்திருக்கிறோம் என்பதைப் பொது மக்களாகிய உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஸதஸ் எப்பொழுதும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று, இதை ஒருசொஸைட்டியாக்க நேற்று சென்னைக்குச் சென்று ரிஜிஸ்டர் செய்தாகிவிட்டது. ஆனால் என்றென்றும் நடக்கும் ஸதஸ், இது ஆஸ்திகர்களாகிய எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்தி என்று ஆசாரிய ஸ்வாமிகள் தெரிவித்தார்கள்.

அதெல்லாம் முடிகிற வரையிலே நித்திய பூஜா விதி, அர்ச்சகர் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகமத்திலிருந்து எடுத்துத் தமிழிலே வேண்டுமானாலும் தமிழாக்கம் செய்து கிரந்தம் முதலிய நாகர (Script) லிபியிலே போடவேண்டும். போட்டு அர்ச்சகர்களுக்கும் ஆலய நிர்வாகிகளுக்கும் கொடுக்க வேண்டும். இதை உடனடியாகச் செய்ய வேண்டும். ஒரு மூன்று நான்கு மாதங்களுக்குள்ளே இந்தப் பிரதிகளை அவர்களிடம் கொடுக்கவேண்டும். கொடுத்து அவர்களுக்கு ஒரு காலம் கொடுக்க வேண்டும். ஒரு ஆறு மாதத்திற்குள்ளே எந்த அர்ச்சகர் இந்த பூஜா விதிகளை நன்றாக மனப்பாடம் செய்து அர்த்தம் தெரிந்து சொல்கிறார்களோ அவர்களுக்கு ஒரு வெகுமதி, நீங்கள் ஆலயத்திலிருந்து கொடுத்தால் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு ஓர் அக்கறை ஏற்படும் என்று சொன்னார்கள். மிகவும் அரிய கருத்து. சிறந்த கருத்து (Practical Suggestion). ஆகையினாலே நான் நிர்வாக அதிகாரிகள் அவர்களும் கலந்து கொண்டிருக்கிற ஸதஸ்ஸிலே சொல்லஆசைப் படுகின்றேன். இந்த மாதிரிப் பிரதிகள் வந்த பிறகு நீங்கள் அந்தந்த ஆலயங்களிலிருக்கும் படியான தர்மகர்த்தாக்களிடம் இந்த ஏற்பாட்டிற்கு ஒரு உருவம் (Shape) கொடுத்து, உங்கள் பிரேரேபணையை அனுப்பி வைத்தால், அவை அவசியம் கவனிக்கப்படும். அது மிகவும்நல்ல யோசனை. இராமேஸ்வரம் தேவஸ்தானத்திலும் இதைப்போல ஸமஸ்கிருத வேதம் இவையெல்லாம் சொல்லிக் கொடுப்பதற்காக ஸ்ரீஆச்சாரிய சுவாமிகள் தெரிவித்த கருத்தின்படி ஒருதிட்டம் (Scheme) தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. இதேபோல மற்ற முக்கியமான பணம் படைத்த தேவாலயங்களில் இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் இந்தப் பிரதிகள் வந்தபிறகு இதற்காக இதைப் படித்தால் கொஞ்சம் உதவித் தொகையைக் கூடுதலாக்கலாம். இது விஷயமாகப் பண்ணக்கூடிய ஒரு யோசனையை அனுப்ப வேண்டுமென்று இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றொன்று:— இதுவும் ஆசாரிய ஸ்வாமிகள் கருத்துதான். கோயில்களில் பரிச்சாரகர்கள் எல்லாம் இந்தக் காலப்போக்கிலே கிராப் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அது நமது முறைக்குக் கொஞ்சம்கூட சம்மதம் ஆகாது. வாஸ்தவம் தான். ஆலயத்திலே ஓதுவார் கிராப் வைத்துக் கொண்டு பாடினால் அது என்னவோ போல இருக்கிறது. நம் ஆலயத் திட்டத்திற்கும் அதற்கும் பொருத்தம் இருப்பதாகத்தெரியவில்லை. பரிச்சாரகர் முக்கியமாக நைவேத்தியம் போடுகிறவர்கள் கிராப் வைத்துக் கொண்டால் அது பொருத்தமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அதற்கு சாஸ்திரத்திலும் இடமில்லை. ஆசாரத்திற்கு விரோதம். அர்ச்சகர்களிலே இருக்கின்றார்களோ என்னவோ தெரிய

வில்லை. அர்ச்சகர் வரைக்கும் கிராப் இல்லை. அது இதோடு போய்விடும். இனிமேல் வளராது. எப்பொழுது இந்த ஸ்தஸ் நிரந்தரமாக வந்து விட்டதோ ஒருவர் இருவர் கூட அதை வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஆகவே அப்படி பரிச்சாரகர்கள் இருந்தால் அவர்கள் முதலிலே குடுமி வைத்துக் கொண்டும் கொஞ்சம் ஆசாரமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவர்களுக்கு ஒரு வெகுமதி கொடுங்கள் என்றார்கள். செய்யலாம். சட்டத்திலே இடமிருக்கிறது. ஆகையினாலே இதையும் அங்கே இருக்கிற டிரஸ்டிகளோடு கலந்து இந்த பரிச்சாரகர்கள் இருந்தால் அவர்களுக்கு கொஞ்சம் உதவித் தொகையில் கூடுதல் என்று அப்படிப் பண்ணினால்தான் வரும். அதுதான் சரியானவழி. இதை ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் கொஞ்சம் யோசனை பண்ணி ஆரம்பித்தால் எப்படி எப்படி இந்த விஷயமெல்லாம் நாம் விஸ்தரித்துக்கொண்டே போகலாமென்று அவர்களுக்குத் தோன்றும். நிச்சயமாக இது தான் (Clue). அதே மாதிரி இந்த ஓதுவார்கள் எல்லாம் சமய தீக்ஷையாவது பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்என்பதுமுக்கியமானகருத்து. அதுமட்டுமல்ல, இந்த சமயத்திலே பொது மக்களும் தெரிந்துக் கொள்ளலாம். தப்பில்லை. அர்ச்சகர்கள்கூட எந்தவித ருத்ராக்ஷம் போட வேண்டு மென்றிருக்கிறது. அதிலே நைஸ் வரைட்டி பார்த்துப் பொறுக்கிப் போட்டுக் கொள்கிறார்கள். அது எதற்காகஎன்று தெரியவில்லை? ருத்ராக்ஷத்தினுடைய மகிமையைப் படித்துப் பார்த்தால் அது எல்லோரும் போட்டுக் கொள்ளலாம். வைஷ்ணவர்கள்கூட போட்டுக்கொள்ளலாம் போலிருக்கிறது. அதில் அவ்வளவு மகிமை இருக்கிறது. ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறது இந்த ருத்ராக்ஷத்தைப் போட்டுக் கொண்டால் காட்டுக்குள் போயிருந்தால்கூட பாம்புகள் கிட்டவே வராதென்று, எவ்வளவோ மகிமை சொல்லி இருக்கின்றதிலே இது ஒன்று. ஆகையால் வைஷ்ணவர்கள் கூட போட்டுக் கொள்ளலாம். ஒவ்வொன்றிலும் ஒரு கருத்து இருக்கத்தான் செய்யும். ஆலய வழிபாட்டிலே பெரிய சமூகத்திலே குறை என்ன வென்றால் ஒவ்வொன்றும் எதற்காக இருக்கிறது ? (Why and What for) அந்தக் கேள்வியே இல்லை நமக்கு. ஏன் இப்படி யிருக்கிறது என்று ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தால் ஆலய வழிபாடு தானாகவே சிறக்கும். எப்படி அது அமைய வேண்டுமோ அப்படி அது அமையும். ஆலய வழிபாடு சிறந்தால் நமது சமுதாயம் சிறக்கும். ஆட்சேபணையே கிடையாது. இன்றைய தினம் இந்தியாவிலே அந்த மதத் துடிப்பு இன்னும் இருக்கிறது என்றால் நமது ஆத்மாவை நாம் இன்னும் இழந்து விடவில்லை. ஸயின்ஸ் படிக்கிறோம். சர்.சி.வி. ராமனைப் போன்ற மேதாவிகளை நாம் உண்டாக்கியிருக்கிறோம். டாக்டர் இராதாகிருஷ்ணனைப் போன்ற பெரிய அறிஞர்களை எல்லாம் உண்டாக்கியிருக்கிறோம். மகாத்மா காந்தியைப் போன்றவர்கள் இந்த நாட்டிலே உண்டாகி யிருக்கின்றார்கள் என்றால் நம் ஆத்மா அப்படியே (Sound) ஆக இருக்கிறது என்று அர்த்தம். விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானத்தைக் கொண்டு சேர்ப்போம். அதுதான் நமக்கு இருக்கிற சிறப்பு.

விஞ்ஞானத்தோடு நின்றால் போதாது, விஞ்ஞானம் காணமுடியாத இன்னும் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற அந்த தார்மீக உணர்வு எல்லாம் இருந்த இடத்திலிருந்து மெய்ஞ்ஞானத்திலே பெரும் பெரும் உண்மைகளை எல்லாம் கண்டு பிடித்த பெரியோர்கள் வாழ்ந்த நாடு இது. அவர்கள் நமக்கு அழியாத செல்வங்களைக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். வேதங்கள் ஆகமங்கள், புராணங்கள், இதிஹாசங்கள் சமயப்பாடல்கள் எல்லாம் கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றார்கள். நமக்குப் பரம்பரை சொத்து மிகவும் (Ancestral Property) ரொம்ப ஜாஸ்தி இருக்கின்றது. இன்னும் விநியோகம்பண்ண நாம் தெரிந்துகொள்ள இல்லை. எங்கே இருக்கிறதென்று தெரிந்து கொள்ளவேண்டும். தேடிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தப் பரிசாரகர்களுக்குக்கூட இந்தமாதிரி செய்தால் கொஞ்சம் ஊதியம் கூடக் கொடுக்கலாம் என அவா. இது இரண்டாவது யோசனை.

முதல் யோசனை அர்ச்சகர்கள் நித்ய பூஜா விதியை மனப்பாடம் செய்து கருத்தோடு அவர்களுக்கு ஒரு டெஸ்டு வைத்து அதில் பாஸ் பண்ணி சர்டிபிகேட் கொண்டுவந்தால் அவர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்கப்படும். ஓதுவார்கள் சமய தீக்ஷையாவது பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் திருமுறை சொல்ல லாயக்கில்லை என்று ஈசான சிவாசாரிய சுவாமிகள் எழுத்து மூலமாக அபிப்பிராயம்

கொடுத்து இருக்கின்றார்கள். அதற்கு மேலே ஆதாரம் வேண்டியதில்லை. ஆகவே குறைந்த பக்ஷம் சமய தீக்ஷையாவது பெற்றுக் கொள்ள வேண்டும், என்று பார்த்து அப்படிப் பட்டவர்களுக்குக் கொஞ்சம் ஊதியம் கூடக் கொடுக்கலாம். இந்த மூன்றோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். இன்னும் எவ்வளவோ யோசனைகளை சுவாமிகள் சொல்லி இருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் நான் சொல்வதைவிட அவர்கள் சொன்னால்தான் சக்தி கூட உண்டு. ஆகவே நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. மற்றும் ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். நான் இவ்வளவு பெரிய சபையிலே பேசுவதற்கு அருகதையற்றவன். உண்மையிலேயே நான் இங்கு நடந்த சர்ச்சைகளில் ஏன் கலந்து கொள்ளவில்லை யென்றால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவேண்டும். தெரிந்து கொண்டுதான் பிறகு பேச வேண்டும். கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து கொண்டு போய் நடுவிலே பேசினால் இங்கே பெரிய பெரிய பண்டிதர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அதிலே போய்நாம் கலந்து கொண்டால் அறியாமை தெரியலாம். அறியாமை என்பது நமக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் விஷயம் தெளிவாகாது என்பதனாலே. என்ன விஷயம் என்றால் நமது ஆலயங்கள் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும். ஒருவர் ஒரு தப்பு கூட சொல்லக் கூடாது. முதலிலே ஆலயத்தைச் சுற்றியிருக்கின்ற பிரதேசம் சுத்தமாக இருக்க வேண்டும். அது நாம்செய்வது இல்லை. ஆலயத்துக்குள்ளே அனேக காரியங்கள் ரொம்ப சர்வ சுத்தியாக இருக்கிறது. அது போதாது. அதைச்சுற்றியிருக்கின்ற பிரதேசம் முதலிலே சர்வ சுத்தமாக இருக்கவேண்டும். நேற்று சுவாமிகள் சொன்னது ஒரு(Clue)க்கு. அதிலிருந்து நாம் எடுத்துக் கொள்ளலாம். அதை மனதிலே வைத்துக்கொண்டால் ஒவ்வொரு சின்ன விஷயத்திலேயும் நாம் எப்படி நடத்துக் கொள்ளவேண்டும். என்று யோசனை தானாகவே புரியும். நாம் எந்தவிதமாக சாப்பாடு சாப்பிட விரும்புவோம். எப்படிப்பட்ட ஆடைகளை நாம் கட்டிக்கொள்ள ஆசைப்படுவோம். அதைவிட ஒருபடி அதிகமாக சுவாமிக்குச் செய்யலாம். அது தான் (Clue Formula). அதை எடுத்துக் கொண்டால் போதும். அனேக இடத்தில் வந்துபார்த்தால் வெறும் அழுக்குத் துணிதான் இருக்கிறது. நல்ல துணியும் இருக்கிறது. அறநிலைய இலாகாவின் பொறுப்பை நிர்வகிக்கும் நான், ஆலயங்களின் குறைகளை இவ்விடத்திலே சொல்வதாக நினைத்துக்கொள்ளக் கூடாது. நல்லதும் இருக்கிறது குறையும் இருக்கிறது. குறை இல்லாதது எங்கே இருக்கிறது. ஆகையினாலே சுவாமிக்குப் போய் அழுக்குத் துணியைப் போடாது துவைக்காத துணி மாதக்கணக்கிலே இருந்தால் அது மகாபாவம் என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நாம் அதைப்போல துணி உடுக்க சட்மதிப்போமா? அப்படி இருக்கும் போது நம்மைப் படைத்த இறைவன் நம்முடைய கர்மத்தில் இருந்து நம்மை விலக்கவேண்டும், என்று பரம காருண்யத்தினாலே ஜன்மாவைக் கொடுத்த பரமனுக்குப்போய் அழுக்குத் துணியைப் போடுகின்றது மகாபெரிய பாவம் என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதேமாதிரி ஆகாரம் சுவாமிக்கு எதை வேண்டுமானாலும் வைக்கலாம், கேட்பாரற்ற சுவாமி என்று சிலர் நினைக்கிறார்கள். உண்மையிலேயே விக்கிரகம் சாதாரண விக்கிரகம் இல்லை. அர்ச்சாவதாரம் என்று வைஷ்ணவ சம்பிரதாயத்திலே ஒரு மிக அழகானகருத்து. அது கடவுள். சாதாரணமாக (Idol Worship). இது ஒரு படி முதலிலே ஒரு உருவத்தை வைத்துக் கொண்டு, பின்பு தான் உருவம் இல்லாத வழிபாடு வரும், என்று இப்படி எல்லாம் சொல்வார்கள். அது ஒரு (Step) என்று சொல்வார்கள்.

எனக்குத் தெரிந்த வரையிலே அர்ச்சாவதாரம் ஒரு அவதாரமே. அவரே மகாபுருஷன். அர்ச்சை சாதாரண விக்ரகமில்லை. துடி துடிப்புள்ள பரமபதத்தில் எப்படி இருப்பாரோ மகாவிஷ்ணு அவர்தான் இவர் என்கின்ற ஆழ்ந்த கருத்து. அவர்களுடைய சம்பிரதாயத்திலே ஒன்றான திருமங்கை ஆழ்வாருடைய பாசுரங்களைப் பார்த்தால் அந்தக் கருத்து நன்றாக விளங்கும். மற்ற ஆழ்வார்களும் பலவிதமாக சொல்லியிருக்கலாம். திருமங்கை ஆழ்வாருடைய பாசுரங்களிலே எனக்கு'எத்தனை பிறவி வேண்டுமானாலும் கொடு, பரமபதம் வேண்டாம், எனக்கு இது வேண்டாம், அது வேண்டாம், உன்னுடைய இந்த அர்ச்சாவதார உருவத்தைத்தான் நான் பார்க்க வேண்டும். அது தான் நான் அடைந்த பிறவிப்பயன்' என்றெல்லாம் அவருடைய பாசுரங்கள் முழுவதிலும் இருக்கின்றது. இதுதான் அடிப்படையான

கருத்து. அதுதான் அர்ச்சாவதாரம். இதற்கு விளக்கம் என்ன? சைவத்தில் இருக்கிறது. வைணவத்தில் இருக்கிறது. சைவத்தில் கண்ணப்ப நாயனார் சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் இடது கண்ணிலிருந்து ரத்தம் சொரிந்ததாகப் படிக்கின்றோம். இது என்ன வெறும் கல்லா. இவனைச் சோதிப்பதற்காக இன்னொரு கண்ணிலிருந்து ரத்தம் வந்தது என்று சொன்னால் அது சாதாரண விக்ரகம் இல்லை. இதைப்போல எவ்வளவோ இருக்கிறது. வைஷ்ணவத்திலே திருமிழிசைஆழ்வார். அவருடைய வாழ்க்கையிலே பார்த்தால் குறைந்தது இரண்டு இடத்திலே இந்த அர்ச்சாவதாரமூர்த்தியினுடைய சிறப்புநமக்கு நன்கு விளங்கும். கும்பகோணத்துக்குப் போகிறார். ஆராவமுதனைப் பர்க்கிறார். நீ ஏன் இப்படிப் படுத்துக்கிடக்கிறாய். உனக்கு என்ன கால் வலிக்கிறதா? எதற்காக இப்படிப் படுத்திருக்கிறாய் என்று அந்த பிரேமை வெள்ளத்திலே அவர் பாடும்போது எனக்கு பதில் சொல்லு வாய்திறந்து என்கின்றார். உடனே அந்த மூர்த்தியானவர் படுத்திருந்தவர் கொஞ்சம் தலையைத் தூக்குகின்றார். போதும் போதும் நான் தொந்தரவு பண்ணிவிட்டேன். வேண்டாம் வேண்டாம் என்கிறார். தலையைக் கொஞ்சம் தூக்கியிருக்கிறார். உத்தான சாயி என்று பெயர். அதற்குத்தான் கொஞ்சம் தலையைத் தூக்கியிருக்கிறார். ஸ்ரீரங்கத்திலே இருக்கிற மாதிரி இருக்காது உத்தானசாயி. சாதாரண கல் விக்ரகமா? எழுந்து இருக்குமா? அதே போல திருவையாறு பக்கத்திலே பெரும்புலியூர் என்று க்ஷேத்திரம். பெரும்புலியூர் க்ஷேத்திரத்துக்கு இவர் போகிறார். போகும் போது அங்கே இருக்கிறவர்கள் உள்ளே விடுவதற்கு இஷ்டமில்லை. அனுமதிக்கவில்லை. சரி என்று கோயிலைச் சுற்றிச்சுற்றி வருகிறார். இவர் எந்தப்பக்கம் சுற்றுகிறாரோ அந்தந்தப் பக்கம் சுவாமி தலை திரும்பிக் கொண்டே வருகிறது. இது திருமிழிசை ஆழ்வாருடைய பாடல்களிலே பார்க்கலாம். சாதாரண கல் விக்ரகமா அது? அதனாலே இதுதான் அர்ச்சாவதார மூர்த்தி என்று நாம் மனதில் வைத்துக்கொண்டால் சிவலிங்கம் சாதாரண கல் அல்ல. மூர்த்தி உயிர்த் துடிப்புள்ள மூர்த்தி என்று நாம் மனதில் வைத்துக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும். அவருக்கு அணிவிக்கும்படியான ஆடை தூய்மையாக இருக்கவேண்டும். அவருக்குப் படைக்கும்படியான நிவேதனப் பொருள் சுத்தமானதாக உயர்தரமானதாக இருக்க வேண்டும். வாசனை என்றால் அதிகமான வாசனை அவருக்குத்தான் இருக்க வேண்டும். நாம் எதை விரும்புவோமோ அதைவிடக் குறைச்சலாக செய்தால் செய்தால் செய்நன்றி கொன்றவர்கள் என்று நேற்று சுவாமிகள் எடுத்துச் சொன்னார்கள். எதற்காகப் படைக்கிறோம். எல்லாவற்றையும் இறைவன் நமக்குப் படைத்துக் கொடுத்தான். உலகத்திலுள்ள சைண்டிஸ்டு, எகானமிஸ்டு எல்லாம் (Can they make a Blade of grass) அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒரு வாழையிலைசெய்யமுடியுமா என்பார்கள். எல்லாவற்றையும் இறைவன் கொடுக்கின்றான். அதற்காக ஒரு செய்நன்றி. இது எனக்காகச் செய்திருக்கின்றார் பரம காருண்யமூர்த்தி. இந்தப் பிறப்பைக் கொடுத்ததே எங்களை இந்த பாபத்தினின்றும் விமோசனம் பெற என்பதற்காகவே கொடுத்திருக்கின்றார் என்ற நமது நன்றியறிதலை எடுத்துச் சொல்வதற்காக இதைச்செய்கிறோம். செய்யும் போது அலட்சியமாகவோ வேறு வேலை இல்லையா என்று நிர்ப்பந்தத்துக்காகவோ செய்யக்கூடாது. செய்வது பொருத்தமல்ல. இந்த அடிப்படைக் கருத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

* * *

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோயில், வடபழனி, சென்னை.	கந்தர்சஷ்டி.
,, சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோயில், திருநெல்வேலி.	திருக்கல்யாணம்.
,, சென்ன மல்லீஸ்வரர் கோயில், சென்னை.	கந்தபுராண விரிவுரை.
,, பூமிநாதர் கோயில், வீரவநல்லூர்.	திருக்கல்யாணம்.
,, பரிமள ரெங்கநாத சுவாமி கோயில், திருஇந்தளூர்.	துலாமஹோற்சவம்.
,, காசி விஸ்வநாத சுவாமி கோயில், தென்காசி.	திருக்கல்யாணம்.
,, சுவாமிநாத சுவாமி தேவஸ்தானம், சுவாமிமலை.	கந்தர்சஷ்டி.

அகப்பொருளில் அருட்பொருள்

முன்னுரை :

இந்நில வுலகின்கண் உள்ள பற்பல நாடு களிலும், எத்துணையோ பல நூற்றுக் கணக் கான மொழிகள் வழங்கி வருகின்றன. சிறு சிறு கிளைமொழிகளைத் தவிர்த்து, உலகில் இது போழ்து வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று மொழி நூற்றுறை யறிஞர்கள் கணக் கெடுத்திருக்கின்றனர் *.

அவைகளுள்ளே, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியானது, பல்லா யிரம் ஆண்டுகளாக, நூல் வழக்கு உலகவழக்கு என்னும் இருதிற வழக்குகளினும் பயின்று, தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி, இளமை யாற்றலோடு வளங்குன்றாது செழித் தோங்கி வழங்கப் பெற்று வரும் ஓர் அரிய இனிய "உயர் தனிச் செம்மொழி" (Classical Language) யாகும்.

தமிழில் இலக்கணம் :

இத்தகைய தமிழ்மொழிக்குத் தனிப்பெருஞ் சிறப்பாக உரிய பலவகைப் பெருமைகள் உண்டு. அவையிற்றுள், அதன் சீரிய இலக் கண அமைப்பும் ஒன்றாகும். இதுபற்றியே,

கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்
பசுந்தமிழ், ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ ?

— திருவிளையாடற் புராணம்

என ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர், தமிழ்மொழி யின் சிறந்த இலக்கண அமைப்புத் திறம் குறித் துப் பாராட்டி யுரைத்து மகிழ்வா ராயினர் !

பொருளிலக்கணம் :

ஏனைய மொழிக ளெல்லாம் பெரும் பாலும் எழுத்து (Orthography), சொல் (Morphology), சொற்றொடர் (Syntax), செய்யுள் (Prosody), அணி (Rhetoric) என்பன போன்றவற்றிற்கு மட்டுமே, ஓரளவு இலக்கணம் உடையனவாக, அவற்றினும் குறிக்கப்படும் பொருளுக்கும் கூட, நம் அருமைத் தமிழ் மொழியில் இலக்கணம் வகுக்கப் பெற்றிருக்கின்றது.

பொருளிலக்கணம் தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பாக உரியதாதல் பற்றியே, பரிபாடல் என் னும் சங்க நூலில் [9:25], "தள்ளாப் பொருளி யல்பில் தண்டமிழ்" எனக் குறிப்பிட்டுக் குன் றம்பூதனார் என்னும் சங்க காலப் புலவர், சிறப் பித்துப் புகழ்ந்து பாடி யிருத்தல் காணலாம்.

மக்கட் பிறப்பு வாய்க்கப் பெற்றோர் அனை வரும், தம் வாழ்க்கையில் இன்றியமையாது எய்தற்பாலன வாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றையும், அவற்றோடு தொடர் புடைய 'காதல்' 'வீரம்' முதலிய பற்பல செய்தி

---

* "Gray's Foundation of Language tentatively places the total number of present-day spoken languages, exclusive of minor dialects at 2796 ... ... "

— Mario A. Pei,
The World's Chief Languages, p. 15.

கலையும் புலநெறி வழக்கம் பற்றி மிகவும் தெளிவும் விரிவும் அமைய விளக்கிக் கூறும் நிலையில், மக்கள் வாழ்க்கையினைத் தமிழ் மொழியின்கண் உள்ள பொருளிலக்கணமானது, அகப்பொருள் புறப்பொருள் என இரண்டு கூறுகளாகப் பகுத்துணர்த்துகின்றது.

அகப்பொருள் :

அவ்விரண்டனுள் அகப்பொருள் எனப்படுவது, "ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாம்" என்பர், உச்சிமேற் புலவர் கொள் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இவ் வகப் பொருளினையே, பண்டைக் காலத்துத் தமிழிலக்கியங்கள் செவ்விதின் எடுத்துச் சிறப்புற விரித்துரைத்து விளக்கியுள்ளன. சங்க காலத்தைச் சார்ந்த எட்டுத்தொகை நூல்களுள், நற்றிணை—நல்ல குறுந்தொகை — ஐங்குறுநூறு—அகநானூறு—கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என்பனவும், பத்துப்பாடல் நூல்களுள் முல்லைப்பாட்டு-நெடுநல்வாடை - குறிஞ்சிப்பாட்டு - பட்டினப்பாலை ஆகியனவும் பிறவுமெல்லாம், அகப் பொருட் செய்திகளையே அழகுற விளக்குவனவாகும்.

புலநெறி வழக்கம் :

சங்க காலத்திற்குப் பிறகு காலப் போக்கினாலும், நாட்டின் பல்வேறு சூழ்நிலை மாறுபாடுகளாலும், அகப்பொருட் பாடல்களின் அருமை பெருமைகள் குன்றித் தரங் குறைய நேர்ந்தன. அதனால் சங்க காலத் தமிழிலக்கியங்களின் உயர்வற உயர்ந்த 'புலநெறி வழக்கம்' மங்கி மாய்ந்து மறையலாகும் இழிதகவு ஏற்படுவதாயிற்று. அந்நிலையில், நம் முன்னைச் சான்றோர்களின் பழந்தமிழ்ச் சங்ககாலப் பண்பாடும், புலநெறி வழக்கமும் மங்கி மறைந்துபோய் விடாமல், மீண்டும் மறுமலர்ச்சியுற்று வளர்ந்தோங்கும் வண்ணம், மாணிக்க வாசகப் பெருமான் அகப்பொருளில் அருட்பொருளையும் அழகுற இணைத் தியைந்து, நமக்கெல்லாம் கலை நலஞ்சான்ற கடவுட்பெருங் கவிதைநூல் எனப் போற்றத் தக்க நிலையிற் பாடி யளித்தருளினார். அதுவே செந்தமிழ்த் தெய்விகநலம் அமைந்தோங்கித் திகழும் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் சிறந்துயர்ந்த திருநூல் ஆகும்!

திருவாசகம் :

'திருவாசகமானது அழகிய இனிய பாடல்களினால் அறியாமை பேரவா முதலிய அடிமைத் தளைகளினின்று விடுபட்டு, அன்பு அறிவு என்பனவற்றின் உரிமை பெற்று, முறை முறையே வளர்ந்து செல்லும் உயிரின் முன்னேற்றப் படிநிலைகளை நன்கினிது விளங்கக் காட்டுகின்றது. உயிரின்கண் முதன் முதலாக உணர்வுக் கண்கள் திறக்கப் பெறுதல், அதனாற் பிறக்கும் உவகை, பெருமிதம், பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உலகியலில்நின்று தடுமாறும் போராட்டம், அமைதியின்மை, இறுதியாக இறைவனை அடைந்தெய்தும் இன்பம், அவனோடு இரண்டறக்கலந்துநிற்கும் பெருமகிழ்ச்சியுணர்வு, என்னும் பலதிற உணர்ச்சிகளும் அதன்கண் பளிங்கென விளங்குகின்றன' எனப் பேரறிஞர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களும், திரு. ஜி. யு. போப் அவர்களும் குறிப்பிட்டிருத்தல் *, திருவாசகத்தின் சிறப்பினையும் இயல்பினையும் புலப்படுத்தும்.

திருக்கோவையார் :

'தேவேந்திரனின் அமராவதி நகரத்தையும், குபேரனின் அளகாபுரி நகரத்தையும் முதற்கண் படைத்துப் பயின்றுகொண்டு, அதனாற் கைவந்த அனுபவத்திறமும் ஆற்றலும் வளர்ந்தோங்கிய பின்னரே, பிரமதேவன் தசரத வேந்தனின் அயோத்திமா நகர்த்தைப் படைத்தான்' என்னும் கருத்தமைய,

"அயில்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்
அளகையும் என்றிவை அயனார்

---

* "Thiruvasagam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and joy of union."

— Dr. S. Radhakrishnan,
Indian Philosophy, vol. II., p. 729

பயினுறவு உற்ற படி பெரும் பான்மை
இப் பெருந் திருநகர் படைத்தான்''

எனக் கம்பர் பாடுவது போல, மாணிக்கவாசகர் திருவாசகம் பாடித் தேர்ந்து கைவரப் பெற்ற சிறந்த சிவஞானத்தெளிவின் முதிர்ச்சியிற் பாடியருளியதே திருச்சிற்றம்பலக் கோவையார் எனின், அதன் அருமை பெருமைகளை யாம் என்னென்பேம்! இறைவன்தானே "பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' எனமாணிக்க வாசகர்பால் வேண்டிப் பெற்ற மாண்புடையது திருச்சிற்றம்பலக் கோவையார்! "யாவையும் பாடிக் கோவை பாடுக'' என வழங்கும் உலகியற் பழமொழியும் ஈண்டு எண்ணி உணர்தற்குரியது.

ஞானப் பனுவல் :

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பல வகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள்ளும் தலையாயது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி, அழியா இன்ப அருங்கலைக் கவிதைப் படைப்பாகக் கவின்மிக்குத் திகழ்தலே யாகும். இங்ஙனம் திருக்கோவையார் அகப்பொருளில் அருட்பொருளையும் இயைத்திணைத்து விளக்கும் சிற்பினை, ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க அருட்பெருங் கவிஞர் ஆகிய குமரகுருபர அடிகளார்,

" கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை,
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற் பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள் எனச் சுட்டிய ஒரு பெருஞ் செல்வ ''

—சிதம்பர மும்மணிக் கோவை.

என வியந்து மொழிந்து புகழ்ந்திருத்தல் காணலாம். தம்முள் ஒன்றினொன்று சாலவும் முரண்பட்ட அகப்பொருளும் அருட்பொருளும் (காமச் சுவையும் ஞானச்செய்தியும்) ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து முதன் முதலாக வியத்தகு முறையிற் பாடிக்காட்டிய சிறப்புடைமை குறித்தே, இதனைக் "காமஞ் சான்ற ஞானப்பனுவல்'' எனக் குமரகுருபர சுவாமிகள் போற்றிப் புகழ்வாராயினர்.

டாக்டர் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர், "பரிணாமக் கொள்கையின்படி உலகியற்கைப் பொருள்களில் முதற்கண் தோன்றிய பொருள்களை விட, நாளடைவில் படிப்படியே தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து சிறந்து திகழக் காண்கின்றோம். ஆனால் இப்பரிணாமக் கொள்கை, இலக்கியங்களைப் பொறுத்த வரையிற் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம், துடுமெனத் தாமே முதலில் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச் சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற் கூட, அவற்றிற்குப் பின்னர்த் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை'' என்று குறிப்பிடுவர்.*

அருட்பொருள் :

அதற்கு ஏற்ப, இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப் பெற்றுள்ளன எனினும், அவைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, மாணிக்க வாசகர் அருளிச் செய்த திருக்கோவையார் ஒன்றே யாகும். இதன்கண்,

குறிஞ்சி—சாக்கிரம்
பாலை—சொப்பனம்
முல்லை—சுழுத்தி
மருதம்—துரியம்
நெய்தல்—துரியாதீதம்
தலைவன்—கடவுள்

* "Here is a very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature, the masterpiece is unprecedented, unique, never challenged or approached henceforth."

—Dr. I. A. Richards

தலைவி—ஆன்மா
தோழி—திருவருள்
தோழன்—ஆன்மபோதம்
செவிலி—திரோதானசத்தி
நற்றாய்—பராசத்தி

என அகப் பொருட் செய்திகள், அருட்பொருட் குறிப்புகள் அமையும் வகையில் பாடப் பெற்றிருத்தலை, ஊன்றிக் கற்பவர் யாவரும் உணரலாம்.

'உலக இலக்கியங்கள் எல்லாவற்றிலும், இங்ஙனமே கவிஞர்கள் தாம் விரும்பும் கடவுளை (இஷ்ட தேவதையை), ஒரு பெண் தன் காதலன்பாற் கொள்ளும் பேரன்பு நிலைக்கு ஒப்புமை தோன்றக் காதலுற்றுப் பாடியிருத்தலைக் காணலாம். விவிலிய நூலிற் பாடல்களுட் பாடல் என்பது, இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும். கடவுள் மணமகனாகவும், உயிர்களெல்லாம் அவனை மணந்து கொள்ளக் காத்திருக்கும் கன்னிப் பெண்களாகவும் ஒப்பிட்டு, இயேசுநாதர் இயம்புகின்றார். இடைக்காலத்தில் விளங்கிய கிறித்தவ சமய அருட்செல்வியர்கள் ஆகிய அர்ச். தெரிசா அம்மையார், அர்ச். கெர்ட்ரூட் அம்மையார் ஆகியோர், தம்மை இயேசுநாதர் தழுவிப் புல்லி மகிழ்வித்த அருளனுபவச் செய்திகளைக் குறித்து வைத்துள்ளனர். இவ்வாறே, அர்ச். கேதரீன் அம்மையார் தாம் இயேசு நாதர்க்குப் பரிசம் இடப் பெற்றதாகவும், அவர் தமக்கு மணமோதிரம் ஒன்றைப் பரிசளித்த தாகவும் மொழிந்துள்ளார்.' இன்னோரன்ன செய்திகள் ஈண்டு நாம் ஒப்புமையாகக் கருதியுணர்தற் குரியன.*

* "Throughout the literatures of the world, the love of man for his **Ishta Devata** is likened to the love of a woman towards her lover and the bliss of communion is likened to the joy of physical union.

The Biblical **'Song of Songs'**, the saying of **Jesus Christ** likening God to the bridegroom and the souls to virgins waiting for their spouse, the recorded experiences of medieval Christian saints like **St. Theresa** and **St. Gertrude** who recounted the caresses bestowed upon them by Christ, the assertion of **St. Catherine** that she was betrothed to Christ and was given a ring by him, are all analogous ...... "

—**Dr. C. P. Ramaswami Aiyar**,
Phases of Religion and Culture, p. 39.

அறிவனூற் பொருளும், உலகநூல் வழக்கும்

கோவைநூல்களி லெல்லாவற்றினும் மிகவும் பழமையும் முதன்மையும் வாய்ந்து சிறந்தொளிர்வதும், பிற்காலத்தில் தோன்றிய கோவை நூல்களுக் கெல்லாம் மேல்வரிச்சட்டமாக அமைந்து வழிவகுத்துக் கொடுத்ததும் ஆவது திருக்கோவையார்! "பெற்றின்ப சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு" தோன்றுமாறு, தம்முள் ஒன்றினொன்று சாலவும் முரண்பட்ட காமச் சுவையும் ஞானப் பொருளும் ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து,

திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர். ஆதலின்
அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்குமென
இருவகைப் பொருளும் நுதலிப் போந்தனர்

என அறிஞர்கள் பாராட்டும்வகையில், அகப்பொருளில் அருட்பொருளும் அமையும் வண்ணம் மாணிக்கவாசகரால், அஃது அருளிச் செய்யப் பெற்றிருக்கும் அருமைப் பாட்டினைத் 'தாலிபுலாக நியாயம்' பற்றி ஈண்டு ஒரு சிறிது உணரமுயல்வோமாக!

உயிர்என வியத்தல்

அகப்பொருள் நூல்களில் "உயிர் என வியத்தல்" என்பது ஒரு துறை. தலைவன் ஒரு பொழிலின்கண் தலைவியைக் கண்டு கூடி, இன்பச்சிறப்பும் பிரியலாகாமையும் கருதி, அவளைத் தன் உயிர் எனப் பாராட்டி மகிழ்வதாகப் பாடப் பெறுவது, அவ் வகத்துறைக் குரிய பொருள் ஆகும்.

'அன்புடன் நேற்று என்னைக் கூடி, பின்னர் என்மனம் வருந்தும்படி பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்தைச் சேர்ந்து, எனக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கேவிளைவித்து, என் நெஞ்சில் நிலைபெற்று விட்ட என் உயிர், இதோ வந்து விட்டது' எனத் தலைவியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த தலைவன், அவளைத் தன் உயிரினும் மேலானவளாகப் புகழ்ந்து மகிழ்ந்து சொல்லுகின்றான்,

நேயத்த தாய், நென்னல் என்னைப்
புணர்ந்து, நெஞ்சம் நெகப்போய்,
ஆயத்த தாய், அமிழ்தாய் அணங்காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தையதாய்த்,
தெரியிற் பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றது, என் மன்னுயிரே !

எனத் தலைவன் கூற்றாகவரும் இச் செய்யுளில், மாணிக்கவாசகர் தமக்கு உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமானின் திருவருட் செயலைப் பற்றிய குறிப்பும் அமையப் பாடியருள்கின்றார் !

"என்பால் அருள்மிகுந்து முன்னர் என்னைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டு,பின்னர் என்நெஞ்சம் கலங்கி வருந்தும்படி 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி அடியவர் திரளுடன் பிரிந்து சென்று, நினைக்குந் தோறும் அமிழ்தம் போல இன்பம் செய்து, கட்புலனாகாது மறைந்து நிற்றலின் துன்பம் செய்து, பொன்னம்பலம் போல ஒளிமிகுந்து, என் சிந்தையிற் பிரிவற நிலைபெற்று, இங்ஙன மெல்லாம் திருவிளையாடல்கள் நிகழ்த்துதலால் மாயத்தன்மை வாய்ந்து, என்னை இயக்கி ஆட்டி வைக்கும் என் உயிர்க்குயிர் (சிவம்) இதோ வந்து தோன்றா நிற்கின்றது"

என வேறொரு சிறந்த பொருளும், இச்செய்யுட்கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

புனல்தரு புணர்ச்சி

அகப்பொருட்குரிய துறைகளில் 'புனல்தரு புணர்ச்சி' என்பது ஒன்று. தலைவி மலைநிலத்துள்ள சுனைப் புனலில் நீராடச் செல்கின்றாள். அங்கு அதன்கண் தவறி வீழ்ந்து, ஆழத்தில் அகப்பட்டுக்கொண்டு துயருற்றுத் தத்தளிக்கின்றாள். அந்நிலையில் அப்போது அங்கு எதிர்பாராவகையிற் போந்த தலைவன், அச்சுனையின் ஆழத்தினின்று அவளை மீட்டுக் காப்பாற்றி உதவி புரிகின்றான். அந்நன்றியை நினைந்து தோழியின்பால் தலைவனின் வேண்டுகோட்கு இசைந்து, அவனையே மணப்பதற்குத் தன் உடன்பாட்டினைத் தலைவி குறிப்பினாற் புலப்படுத்து கின்றாள்.

ஓங்கும் ஒருவிடம் உண்டு, அம்பலத்
தும்பர் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரைவாய்த்,
தழங்கும் அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்து அன்று
அழுங்கப், பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கு, அறியேன்
சிறியேன் சொல்லு வாசகமே

என வரும் அரிய இனிய இவ்வகப் பொருட் பாடலில், மேற்குறித்த 'புனல்தரு புணர்ச்சி' என்னும் அகத்துறைக் குரிய பொருள் மட்டுமேயன்றி, மற்றும் ஒரு பொருளும் மாண்புற அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற் குரியது.

'பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, துன்பம் ஆகிய அலைகள் மோதவும், பெண்ணாசை என்னும் புயற்காற்று வீசவும், காமம் என்னும் கொடிய சுறாமீனின் வாயிலும் அகப்பட்டுக் கொண்டு வருந்தி, ஐந்தெழுத்தாகிய புணையையே நம்பிப் பற்றிக்கொண்டு கிடக்கும் தன்னந் தனியனான என்னை, வீடுபேறு ஆகிய நல்ல கரையிலே சேர்த்துக் காத்தருளினாய்' எனத் தாம் திருவாசகம் திருச்சதகத்தில் [27] பாடிப் போற்றும் சிறந்த கருத்தினையே, மாணிக்கவாசகர் தம் நன்றி யுணர்வு தோன்ற ஈண்டும் அமைத்தருளி யிருக்கின்றார்.

"பிறவியாகிய கடலில் விழுந்து யான் தத்தளிக்குங்கால், என்னைத் தாமே எளிவந்து வலித்தாண்டு கொண்டு, பிடித்தெடுத்துக் காப்பாற்றிப் பேருதவி புரிந்தருளிய தலைவர் ஆகிய இனிய சிவபிரானுக்கு, யான் சொல்லத் தகுந்த நன்றியுரை யாது? என்று, சிறியேன் அறிகின்றிலேன்".

ஊடல் நீட வாடியுரைத்தல் :

இவ்வாறே "ஊடல்நீட வாடியுரைத்தல்" என்பதும் ஓர் அகப்பொருட்டுறை. 'உணலி னும் உண்டது அறல் இனிது; காமம் புணர்த லின் ஊடல் னிது' ஆதலின், தலைவி தலைவ னிடம் ஊடல் கொள்கின்றாள். தலைவியின் ஊட லைத் தணிக்கத் தலைவன் முயல்கின்றான். 'உப்பு அமைந்தற்றாற் புலவி' எனத் திருவள்ளுவர் கூறிய நுட்பம் தெளியாத தலைவி, தனது ஊட லிற் சிறிது நீடிக்கின்றாள். அதனால் வாடிய தலைவன் மிகவும் வருந்தி, 'இவள் முன்பொரு காலத்தில் என்னைக் குறிஞ்சி நிலத்தே ஓர் அழ கிய சோலையிற் கண்டு, இனிய காதற்பார்வைக் குறிப்பைப் புலப்படுத்தி, இன்பம் பெரிதும் பயந்து, நெஞ்சம் நெக்கு உருகும்படி செய்து, அதனைக் கவர்ந்து கொண்டு மகிழ்வித்த பெண் அமிழ்தம் ஆகிய என் காதலியாகத் தோன்ற வில்லை' எனக் கூறி, உள்ளம் நொந்து கொள் கின்றான்.

திருந்தேன் உயநின்ற சிற்றம்
  பலவர், தென் அம்பொதியில்
இருந்தேன் உயவந்து, இணைமலர்க்
  கண்ணின் இன் நோக்கு அருளிப்,
பெருந்தேன் எனநெஞ்சு உகப்பிடித்து
  ஆண்டநம் பெண்அமிழ்தம்,
வருந்தேல்! அதுவன்று, இதுவோ
  வருவதோர் வஞ்சனையே !

இப்பாடலில், மாணிக்கவாசகர் தம்மை ஆட்கொண்டருளிய பெண்ணோடு கூடிய அமிழ் தம் போல்பவர் ஆகிய அர்த்த நாரீசுவரர் (சிவ பெருமான்), முன்பு தமக்குச் செய்தருளிய தலை யளிகளை நினைவு கூர்ந்து, இனிய முறையிற் குறிப்பிட்டு மகிழ்விக்கின்றார்.

" ஒருவாற்றானும் திருந்தாத வனாய்த் தன்னை அடைதல் குறித்து ஒரு முயற்சியும் செய்யாமல் வீணே யுழன்று கொண்டு கிடந்த யான், பிறவித் துன்பத்தினின்றும் தப்பிப் பிழைக்கும் பொருட்டுத்தானே தனது பேரருட் பெருக்கினால் எளிவந்து தோன்றி, தனது இணைமலர்க் கண் களின் இனிய கடைக்கண் நோக்கத் தினை என்பாற் செலுத்தி (நயன தீட்சை செய்து), பெருந்தேனைப் போன்று இனிமை மிக்கு, என் கருங் கல் மனமும் கரைந்துருகும்படி 'வா வா' என்று என்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்."

தூதுகண்டு அழுங்கல் :

அகப்பொருட் குரிய துறைகள் பலவற்றுள் "தூதுகண்டு அழுங்கல்" என்பதும் ஒன்றாகும். தலைவன் பெருவீரன் ஆதலின், அரசனின் விருப்பத்திற்கு இணங்கி, அயல்நாட்டுப் பகை வர்களை அடக்கி வெல்லுதற் பொருட்டுப் போர் புரியச் செல்கின்றான். சிலகாலமாகியும் அவ னிடமிருந்து கடிதமோ செய்தியோ தலைவிக்குக் கிடைத்திலது. ஆனாற் போருக்குச் சென்ற வீரர்கள் பிறரெல்லாம், தத்தம் மனைவியருக்குத் தாம் நலமே இருந்து போர் புரிந்து வரும் செய்தி யினைத் தூதுவர்கள் மூலம் அவ்வப்போது அறி வித்து வருகின்றனர். இந் நிலையில், தனக்குத் தலைவன் ஏதும் செய்தி கூறித் தூது அனுப்பி வைத்திலனே என்று, தலைவி மிகவும் கவலை யுற்று வருந்துகின்றாள்.

வருவன செல்வன தூதுகள்
  ஏதில; வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
  கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்து,எனது ஆவிகொண்டு
  ஏகி,என் நெஞ்சில் தம்மை
இருவின காதலர், ஏதுசெய்வான்
  இன்று இருக்கின்றதே ?

இப்பாடலில், மாணிக்கவாசகர் தம்மைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டருளிய சிவபெருமான், தம்பால் 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி மறைந்து பிரிந்து சென்றதன் பின் னர்ச் சிலகாலம் வரையில், தமக்குக் காட்சி தந்தருளாமலே இருந்துவிட்டதனால் அடைந்த சோகச் சூழ்நிலையினைப் பற்றிக் குறிப் பிட்டருள்கின்றார்.

"தனது மெய்யன்பர்களைப் போல யானும் இன்பம் எய்தும்படி உள்ளம் உருக்கும் கலவிகளை (அருட்செயல்களை) எனக்குச் செய்து, பின்பு என் உயிர் பிரிந்தாற் போலத் தாம் பிரிந்துசென்று, மீட்டும் ஒருஞான்றும் கட்புலனாகாமல் மறைந்து நின்று, யான் தன்னை நினைந்து நினைந்து வருந்தும்படி செய்த என் காதலர் (சிவபெருமான்), என்பால் இன்று யாது செய்யக் கருதி யிருக்கின்றனரோ? அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும் கொண்ட அவர், எனக்கு நன்றே செய்யினும் செய்க! அன்றித் துன்பமே செய்யினும் செய்க! எல்லாவற்றையும் அவர் திருவருள் எனவே கருதி யான் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு அமைவேன்."

முடிவுரை :

இத்தகைய பல அரிய பெரிய நுண்ணிய முறைகளில், அகப்பொருளில் அருட்பொருளையும் அமைத்து ஒருசேரக் குழைத்தளித்து உவப்பினை விளைவிக்கும் உயர்ச்சி மிக்கொளிர்வது திருச்சிற்றம்பலக் கோவையார்! திருவாசகத்தின் மற்றும் ஓர் அரிய இனிய சிறந்த மக்கட்பதிப்பு அமைப்பே (A popular but profound and mystic version) **திருச்சிற்றம்பலக்கோவையார்** எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அத்தகைய இவ் வித்தகப்பாடலை, நாம் அனைவரும் மிக்க பக்தியுணர்வோடு ஓதி, இம்மை மறுமை நலன்களை யெல்லாம் எய்தி மகிழ்வோமாக!.

(வெண்பா)

அகப்பொருளில் தூய அருட்பொருளும் தோற்றி
மிகப்பொலிந்து நன்றே விளங்கித்,—தகப்பெரிதும்
செந்தமிழ்ச்சீர் சான்ற **திருக்கோவை யார்**சிறப்பை,
எந்தவகை யிற்புகழ்கேம் யாம் ?

காதல் உணர்வைக் கடவுள் உணர்ச்சியொடு
தீதறச்சேர்த் துக்கோவை செய்தளித்து,—ஓதுலக
மக்களெலாம் உய்யவைத்த **மாணிக்க வாசகர்**தாள்,
எக்காலும் போற்றியுய்வோம் யாம் !

—ஆசிரியர்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

ஸ்ரீ சிலம்பணி சிதம்பர விநாயகர் கோயில், தேவகோட்டை	சோமவார வழிபாட்டுப் பரிசளிப்பு விழா
குமரகோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், சென்னை	கந்தர் சஷ்டி
ஸ்ரீ நவநீதேஸ்வர சுவாமி கோயில், சிக்கல்	"
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர்	"
ஸ்ரீ வில்வாரண்யேஸ்வர சுவாமி கோயில், திருக்கொள்ளம்புதூர்	ஓடோத்சவம்
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், குமரகோட்டம், காஞ்சீபுரம்	கந்த சஷ்டி
ஸ்ரீ அருணசலேஸ்வரர் சுவாமி கோயில், திருவண்ணமலை	பிரம்மோத்சவம்
ஸ்ரீ குமரக்கட்டளை சுப்பிரமணிய சுவாமி கோயில், மாயூரம்	கந்த சஷ்டி
ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமி கோயில், திருப்புகலூர்	"
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி	"
ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், எட்டிவயல்	லக்ஷார்ச்சனை
ஸ்ரீ பூலாநந்தீஸ்வரர் கோயில், சின்னமனூர்	கந்தர் சஷ்டி
சைவ சித்தாந்த மகாசமாஜம், மயிலாப்பூர்	மெய்கண்டார் விழா

ஒருவனா? ஒருருவனா?

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்.

திருக்கச்சித் திருவேகம்பத்தில் ஓதுவார் தேவாரம் பாடினார். அப்போது அன்னாபிடேகச் சிறப்பு நிகழ்ந்தது. அது திருக்கச்சி மயானத்தில் நடந்தது. அதற்கென்றுள்ள திருத்தாண்டகத்தை ஓதுவதே சாலச் சிறப்பும் பொருத்தமும் ஆதலை எண்ணி, "**மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சிமயானத்தான்**" என முதலுந் திருத்தாண்டகத்தைப் பாடினார், திருமுறைப் பண்ணிசைப் புலவர் திருவாளர் சாரங்கபாணி செட்டியார். அவர் பல்லாண்டுகளாகத் தமக்கு வாய்த்த நல்லிசைக் குரலில் நல்லிசைப் புலமை விளங்கும் வண்ணம் எல்லாரும் இன்புறப் பாடினார். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் திருமடாலயத்தில் அவரை வரச் செய்து உணர்த்திய உண்மையை இக் கட்டுரையில் உலகர் அறிய வேண்டி எழுதலாயிற்று. அறிஞர்கள் இது குறித்துத் தம் உள்ளத்தில் தோன்றுவதை எழுதின், அஃது ஒருக்கம் காட்டி மேலும் சில எழுதத் தூண்டும்.

அத் திருத்தாண்டகத்தில் '**ஒருவன் அல்லன்**' என்று உளது. எல்லாப் பதிப்பிலும் அதுவே காணப்படுகிறது. திருமுறைகளில் ஏடெழுதினோராலும் அச்சிற்பதிப்பித்தோராலும் பலபல பிழைகள் உள்ளன.

சென்னை 'மர்ரே கம்பெனி' முதல்வரிடம் பேசும் போதும் திருவையாற்றில் அருளிய திருவடித்தலம் குறித்த திருப்பதிகத்திற் காணும் பிழைகளைக் காட்டினேம். அப்போது '**கிழித்தன தக்கன்**' என்பது '**இழித்தன தக்கன்**' என்றும் '**வெங்கட் பிணி**' என்பது '**எங்கள் பிணி**' என்றும் உள்ளவற்றைச் சுட்டினேம்.

'தாயவன்காண் உலகிற்கு' என முதலும் திருக்கச்சித் திருவேகம்பத் திருத்தாண்டகத்தில், 'சேயவன் காண் நினைவார்க்கு' என்பது 'சேயவன் காண் நினையார்க்கு என்று இருத்தல் வேண்டும். அதை அடுத்து, 'சித்தமாரத் திருவடியே உள்கி நினைந்தெழு வாருள்ளம் ஏயவன் காண்' என்று வருதலே அது பிழை என்று மெய்ப்பிக்கும், திருநாவுக்கரசர் திருவாக்கில் எப்பிழையும் உளதாகாது. இவை யெல்லாம் ஏடுகளின் எழுத்திலும் தாள்களின் அச்சிலும் ஏற்பட்டவையே. இன்னோரன்னவை திருத்தப்படாமை வருத்தப்படுத்துவன.

திருமுறைப் புலமையும், அத் திருமுறையை வெளியிட வேண்டும் செல்வமும், வெளியிடும் வாய்ப்பும் ஒருங்குவாய்த்தவர்க்கே அத்திருமுறையைப் பிழையில்லாத திருமுறையில் அச்சிடச் செய்ய இயலும்.

"**மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார் சடையான் என்னினல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருருவன் அல்லன்
ஓரூரன் அல்லன் ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே**

என்றிருந்த திருத்தாண்டகம், 'ஒருவன் அல்லன்' என்று பிழையுற்று ஓதப்படுகின்றது. என்னின் நல்லான், என்னின் அல்லால் என வெவ்வேறு கொள்ளப்படுகின்றது.

'ஒருவன்' என்று திருநாவுக்கரசர் தேவாரத்துள் வரும் இடங்கள் மிகப்பல வாகும். அவற்றை முழுதும் எடுத்துக் காட்டல் இவ்வெளியீட்டில் இயலாது. ஆயினும், திருமுறை ஐந்து; திருப்பதிகம் இருபது; திருப்பாட்டு ஒன்று. இவ்வாறே இனிக் குறிக்கப்படும் எண்களை உளங் கொள்க.

ஒருவன், ஒருவர் :—*4-20-9+5-13-5+5-20-1+5-47-9+5-97-11 + 6-32-1 + 6-32-4 + 6-34-1 + 6-83-7 + 6-34-9+6-26-4.*

திருவாசகம் :—*3-43* பா. *72-161-526.*
ஒருத்தன் :-*5-40-5+5-32-7+5-13-10+5-62-1+5-17-7+4-45-6+2-31-5*
திருவாசகம் :—*65-351-459-540.*

இவற்றில் ஒருவன், ஒருத்தன் என்று பாடி யருளிய நாவரசர் அத்தாண்டகத்தில் மட்டும் ஒருவன் அல்லன் என்று பாடி யருள்வாரா? பாடினால், ஒப்பில் அப்பன், ஒப்பிலாதவன், ஒப்பிலாமணி, ஒப்பி லொருத்தன், ஒப்புனக்கில்லா வொருவன் என்னும் மணிவாசகத்தைக் கொள்வது பயன் என்னதரும்? பலபல வேடமாகும் பரனை ஒருவனும் அல்லன் எனின் சிவ பரத்துவம் என்னாகும்? பலவும் அல்லன் ஒருவனும் அல்லன் என்றால், சூனிய வாதிக் கன்றோ வெற்றி முரசொலிக்கும்.

'ஏகன் அநேகன்' "ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு" 'ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்' என்ற அருள் வாக்கிற்கு ஒவ்வாமல், ஒருவன் அல்லன் என்றால், சூனியவாதம் பேசுவதன்றி, வேறாகுமோ ? காஞ்சிப் புராணத்தில்,

"ஒருவனாகிய சிவபிரான்
உலகுயிர் அளிப்பக்
கருணை கூர்ந்துமுன் நவந்தரு
பேதமும் காட்டுந்
திருநிகர்ப்ப ஓர் பாலியே
வயல்வளஞ் செழிப்பப்
பெருகு தண்புனல் பற்பல
கால்களாய்ப் பிரியும்"

என்று பாடியிருப்பதையும், அதற்கு, இவ் வாதீனத்து மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேலு முதலியார் எழுதிய குறிப்புரையில், இயைத்துக் கொள்வித்த (1) தேற்றேகாரம் (2) அடை மொழி ஆகிய இரண்டன் சிறப்பையும் அறிஞர் அறிந்து கொள்ளக் கடவர்.

"ஒரு தனிப் பொருள் இருதிறனாகி
உவ் விரண்டும்
ஒருமையுற்றிடும் வியப்பும் அங்
குள்ளது விரிக்கில்
ஒருபரம் பொருள் சிவனொடு
சத்தியென் றிரண்டாம்
ஒருமையுற்றிடும் உமையவள்
கம்பரைத் தழுவி"

என்னும் விம்மிதப்படலத்துச் செய்யுள் உணர்த்துவது போன்று, உணர்த்தும் பிரமாணம் ஆயிரக் கணக்கில் காட்ட முடியும்.

'ஒருவன் ஒப்பு இறந்தோன்' என் பது காளிங்கர் உரை(திருக்குறள் *1023*).

திருப் பேரூர்ப் புராணத்திலே கச்சியப்ப முனிவர் அருளிய பாடல் இது:-

"ஏகமே எனும் இருக்கெனின் இருக்கின் உட்
[பொருள்கேள்
ஏகமே பதிபல அல எனுமது காண்டி
ஏகமே எனச் சுட்டுவான் ஒருவன் இங்குளன் அவ்
வேகன் போல் அலன் இருள்மலத்தோடுளன்
இவனே"

இதனாலும் 'ஒருவன் அல்லன்' என்று சொல்லலாகாது என்பது தெளிவாகும். சிவஞான போத வெண்பா ஒன்றில் இப் பாடற்கருத்திற்கு ஆதாரம் உளது.

" ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே
[பதி"

என்ற சிவஞான போத வெண்பாவின் விளக்கமே ஷ புராணப்பாடல்.

இவற்றை நன்குணர்ந்து நோக்கின் 'ஒருவன் அல்லன்' என்றிருப்பது பிழை என்றும் 'ஒருருவன் அல்லன்' என்றிருத் தல்வேண்டும் என்றும் அவ்வோதுவா ருக்குச் சொன்னோம். அதை அவர் எங்கும் பரவச் செய்வேன் என்று சொல்லிச் சென்றார். ❋

தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

வேளுக்கை யாளரியின் அநுபவம்

காஞ்சிக்ஷேத்திரத்திலுள்ள திருப்பதிகளை யநுபவித்துவருமடைவில் இப்போது வேளுக்கைப் பதியை யநுபவிக்க விழிகின்றோம். "மன்னு மதிட்கச்சி வேளுக்கையாளரியை" என்று பெரிய திருமடலில் திருமங்கை யாழ்வாரும், மூன்றுந் திருவந்தாதியில் "சிறந்த வென்சிந்தையும்" "அன்றிவ்வுலகம்" "விண்ணகரம் வெஃகா" என்கிற பாசுரங்களில் பேயாழ்வாரும் மங்களா சாஸனம் செய்தருளின தலம் வேளுக்கை யென்பது. இத்தலத்தெம் பெருமான் நரசிங்கவுருக் கொண்டு காட்சி தந்தருள்வதனால் 'சிங்கப் பெருமாள் கோயில்' என்றும் வழங்கப் பெறுமித்தலம். 'வேள் இருக்கை' என்னு மிரண்டு சொற்கள் சேர்ந்து வேளுக்கை யென மருவிற்று. வேள் என்று ஆசைக்குப் பெயர். ஆசையோடு எழுந்தருளி யிருக்குமிடம் என்றவாறு. இத்தலம் வடமொழியில் 'காமாஸிகா' எனப்படுகின்றது. ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார்ய ச்ரேஷ்டரான ஸ்ரீ மந்நிகமாந்த குருவரர் இத்தலத்தைப் பற்றிக் காமாஸிகாஷ்டக மென்கிற எட்டு சுலோகங்கள் கொண்ட தோத்திர மொன்று பணித்துள்ளார். காமாஸிகா என்னும் வடமொழி நாமத்தின் பொருளும் 'ஆசையோடெழுந்தருளியிருக்குமிடம்' என்பதேயாம். அந்த வடமொழித் தோத்திரத்தின் முதல் சுலோகத்தில் "காமாத் அதிவஸந்யோத் கச்சித் அத்புத கேஸரீ" என்னு முத்தரார்த்தத்தினால் தலத்தின் பெயரை வியாக் கியானித்திருப்பது காண்க.

இத்தலத்தில் எழுந்தருளியிருப்பவர் நரசிங்கப் பெருமாளாதலால் அவருடைய சரிதையை ஈண்டு விரிவும் சுருக்கமுமின்றியே பேசுகிறோம். பேசி முடித்தபின் இவ்வவதாரத்திலுள்ள பலநுட்பங்களையும் தெரிவிப்போம்.

வராஹவதாரத்தில் விறலழிந்தொழிந்த ஹிரண்யாக்ஷனுடைய உடன் பிறந்தவனான ஹிரண்யகசிபுவென்னு மசுரனை நிரசிப்பது வியாஜமாக, அவன் மகனான ப்ரஹ்லாதாழ்வானை யநுக்கிரப்பதற்காக வாயிற்று இவ்வவதாரம். இரணியன் அரிய பெரிய தவம் புரிகையில் அதற்கு உவந்து பிரமன் ப்ரத்யக்ஷமானபொழுது வேண்டியவாறெல்லாம் வரங்கள் வேண்டி அவற்றைப் பிரமன் கொடுக்கப் பெற்ற பின்னரே அவன் தவத்தினின்று மீண்டனன். பஞ்ச பூதங்களுக்கும் தனித் தனி எவ்வளவு வலிமையுண்டோ அவ்வளவும் அவன் ஒருவனே பெற்றிருந்தான். அப்படிப்பட்ட அவனது வலிமை அரனுக்கு மயனுக்கும் அளவிட்டறிந்து அழிக்க வொண்ணாததாயிருந்தது. இந்த ஓர் அண்டத்தில் மாத்திரமேயன்றி எல்லா அண்டங்களிலும் அவன் பெயர் அனைவராலும் போற்றப்பட்டு வந்தது.

உலகங்களில் அவரவர்கள் வைதிக லௌகிக சமயங்களில் ஸ்ரீ மந்நாராயண மூர்த்தியின் திருநாமங்களைக் கூறும் வழக்கத்தை அறவே யொழிக்கும்படி அச்சமுறுத்தித் தனது இரணியனென்ற பெயரையே கூறும்படி செய்து வந்தனன். அன்றியும், முனிவர் முதலியோர் யாகங்களில் மந்திர பூர்வமாகத் தேவர்களை யுத்தேசித்து இட்டு ஓமஞ் செய்கிற ஹவிர்ப்பாகங்களை யெல்லாம் தானே கைக்கொண்டு உண்பான். யோகப் பயிற்சியில் தேர்ந்த முனிவர்களும் தம் யோகபலத்தாற் பெறும் பதவிகளைக் பெறாது அவனால் இழந்து விட்டார்கள். தேவர்களும் அவனது பாதங்களையன்றி வேறொன்றைப் பூசிக்க விரும்பாதாராயினர் அவன் தான் பெற்ற வரத்தினால் பெண்களாலும் ஆண்களாலும் நபும்ஸகராலும்

மற்றுமெந்தப் பிராணிவர்க்கங்களாலும் இறக்க மாட்டான். பூமியிலும் சாகமாட்டான், ஆகா யத்திலும் சாகமாட்டான். வீட்டினுள்ளேயும் வெளியிலேயும் சாவான். அஸ்த்ர சஸ்த்ரங் களாலும் கொலையுண்ண மாட்டான். இரவிலுஞ் சாவான். பகலிலுஞ்சாவான். இங்ஙனே பல வகைகளையும் பகுத்துக் கூறிச் சாவாவரம் பெற்றிருந்தான்.

அவனுக்கு அநுஹ்லாதன், ஹ்லாதன், ப்ரஹ்லாதன், ஸம்ஹ்லாத னெனப் புதல்வர் நால்வரிருந்தனர். அவர்களுள் ப்ரஹ்லாதன் மிகச்சிறந்த அறிஞன். தூயவர்களில் தலைவ னான தூயவன். பகவத் பக்தர்களில் மேம்பட்ட மஹா பக்தன். பல சொல்லியென்? ஸகல ஸத்குண ஸம்பன்னன். இவ்வியோனை அவனைத் தந்தையாகிய இரணியன் வெகு அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்து மிக்க உவப் புடனே ஒரு நன்னாளில் கல்வி பயிலத் தொடங்குமாறு கட்டளை யிட்டனன். உடனே அசுரகுருவை வரவழைத்து 'என் அருமைக் குழந்தைக்குக் கல்வி பயில்விப் பாயாக' என்று சொல்லிக் குமாரனைக் குரு விடம் ஒப்புவித்தனன், உடனே மைந்தனைப் பள்ளிக்கு அழைத்துச்சென்று கல்வி கற்பிக்கத் தொடங்கிய ஆசிரியன் "ஹிரண்யாயநம:" என்று முந்துறச் சொல்லி ஆரம்பம் செய்கிற வழக்கப்படி ப்ரஹ்லாதனை நோக்கிக் கட்டளை யிட்டவுடனே அச்சிறுவன் தனது இரண்டு காதுகளையும் இரண்டு கைகளால் நன்றாக மூடிக்கொண்டு 'பெரியோனே! நீ சொன்னபடி சொல்வது நல்லொழுக்கமன்று, முறைக்கேடு' என்று கூறி மறுத்து, வேதாந்த விழுப் பொருளான உண்மைக் கடவுளின் திரு நாமத்தை வெளியிட்டுக் கூறினான். திருவஷ் டாக்ஷர மஹாமந்திரத்தை உரக்க உச்சரித்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம் பெலாம் கண்ணனீர் சோர நின்று முடிமீது அஞ் சலி செய்து ஸ்ரீ மந்நாராயணனைத் தியானித்து உள்ளம் பூரித்திருந்தான். அது கண்டு அந்தக் குரு உள்ளமும் உடம்பும் நடுங்கப்பெற்று 'கெடுவாய்! குருவாகிய என்னையுங் கெடுத்து மாணாக்கனாகிய உன்னையுங் கெடுத்துக் கொண்டாய்; நமது பகைவர்களான அந்தத் தேவர்களும் சொல்லத்தகாததாய் என் வாயால் அநுவாதம் செய்யவும் தகாததானவொரு வார்த்தையை நீ சொல்ல மனங் கொண்டது என்னே! இது என்ன அநியாயம்! இப்படியும் ஒரு காரியம் செய்து விட்டாயே! என்று பொடிந்தான். அதற்கு அவன் 'குரவரே! என்னை நான் ஈடேறச் செய்து கொண்டேன், எனது தந்தையையும் ஈடேற்றினேன்; எனக்குக் குருவாக அமைந்த உம்மையு மீடேற்றி இவ்வுலகத்தின் கணுள்ள எல்லா உயிர்களையு மீடேற்றத் தொடங்கி முதுவே தத்தின் ஸாரமாகிய நாராயண நாமத்தைச் சொன்னேன், இதில் என்ன குற்றம்? என்ன, [குரு] பயலே! உன் தந்தையானவர் தேவர் களனைவர்க்கும் தலைவர்களான திரிமூர்த்தி களுக்கும் தலைவர்; அவரது திருநாமத்தை மதித்திருக்கின்ற என்னிற் காட்டிலும் நீ அறிஞனோ? அடா! இப்பொழுது நீ சொன்ன பெயரை மறுபடியுஞ்சொல்லி என்னைக் கெடுக் காதேகொள். என்ன, [பிரஹ்லாதன்] முழு முதற் கடவுளாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் திருநாமமல்லது மற்றொன்று நானறியேன். அந்தத்திருமால் எப்பொழுதும் எனது உள்ளத் துள்ளே உறைகின்றார். அவரது திருநாமத்திற் காட்டிலும் சிறந்தசொல் வேறில்லை. வேத மறிந்த முனிவர்களும் உபநிஷத்துக்களும் ஒரு முகமாகக் கொண்டாடும் தெய்வத்தின் திரு நாமத்தை யன்றோ நான் சொல்வது. இதனில் மிக்கதோர் திருநாமமும் உலகில் உளதோ? வேதங்களைக்கொண்டும் மற்றுமுள்ள பல்வகைச் சாதனங்களைக்கொண்டும் சித்திபெறும் மஹாத் மாக்கள் ஜபம்செய்யும் திருமந்திரத்தையன்றோ நான் கூறினேன்; வனங்களிலும் பெரியமலை களிலும் வசித்துத் தவவேடம் பூண்டு முத்தி யடைபவர்கள் பெறும் ஆனந்தத்தை யன்றோ நான் இத்திருநாமத்தினால் பெற்றது; இத்திரு நாமத்தின் மகிமை அளவிடக் கூடியதோ? என்று இனைய பலவுங் கூறினன்.

இவ்வளவுங் கேட்ட ஆசிரியன் அச்சிறு வனுக்கு யாதொரு மறுமொழியுங் கூறமாட் டாதவனாய் மனங்கலங்கி 'இனி நான் ஈடேறும் வழிஎன்னே! எனக்கு அழிவுகாலம் வந்திட்டது போலும்' என்று சிந்தித்துக்கொண்டு ஓடிச் சென்று இரணியரிடம் சேர்ந்து கனாக் கண்டவன் அதிசயங் கூறுமாறு போலக் கூறத் தொடங்கிப் "மஹாப்ரபுவே! உனது மகன் நெஞ்சால் நினைத்தற்கும் வாயாற் சொல்லு தற்கும் தகாதவற்றைச் சொல்லிக்கொண்டு கல்வி பயிலாதிருக்கின்றனன்" என்றான்.

(தொடரும்)

அன்பின் என்பு

வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இதனையே, மேற்காட்டிய, "என்பில தனை" என்னும் திருக்குறள் விளக்கி நிற்கின்றது. இதனால், அன்பும் என்பும் மிகப்பெரிதும் ஒப்புமையுடையனவாதல் விளங்கும். அன்பும் என்பும் ஆகிய இரண்டில், அன்பே வடிவமாகிய உயிரையும், அது காரணமாக என்பே வடிவமாகிய உடம்பையும் ஒருவர் கொண்டு விளங்கி இருந்தார் எனின், அவரை, '**அன்பின் என்பு**' எனக் கூறலாம் அன்றோ!

அன்பின் என்பாயினார்

'அன்பின் என்பு' என்பது, 'அன்பினை உடைய என்பு' என்றும் 'அன்பினது என்பு' என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளக் கிடக்கும். அவற்றுள் முதலிற் காட்டிய பொருளில் என்பு என்பது முன்னர் அதனாலாகிய உடம்பையும், பின்னர் அவ்வுடம்பினை உடையவரையும் ஆகு பெயராற் குறிக்கும். பின்னர்க் காட்டிய பொருளில், அன்பாகிய உடம்பிற்கு என்பு போலச் சிறந்து நிற்பவர் என்னும் கருத்துத் தோன்றுவதாகும். அவ்விருவகையிலும் அமைந்த பெருஞ் சிறப்பினை உடையவர் ஓர் அம்மையார். அவர் அன்பினால் என்பே வடிவானது ஓர் அற்புதச் செய்தியாகும்.

அவரது தோற்றம்

தமிழகத்தில் சோழ நாட்டில் கீழைக் கடற்கரையை அடுத்துள்ளது 'காரைக்கால்' என்ற ஒரு நகரம். அதில் வாணிகஞ் செய்யும் வணிகர் பலர் வாழ்ந்தனர். அவ் வணிகர்க்குத் தலைவராகிய பெரு வணிகர் ஒருவர் இருந்தார்; அவர் பெயர் '**தனதத்தனார்**' என்பது. அவரது தவத்தின் பயனாகத் திருமகளே அவருக்கு மகளாகவந்து பிறந்தாள் என்றுசொல்லும்படி அழகிற் சிறந்த பெருமாட்டியார் ஒருவர் பிறந்தார். அவருக்குத் தனதத்தனார், '**புனிதவதியார்**' எனப் பெயரிட்டுச் சிறப்புற வளர்த்தார்.

இளமையே இறையன்பு

புனிதவதியார் தம் பெயருக்குஏற்பத் தளர் நடையிட்டு நடக்கத் தொடங்கும் பருவத்திலேயே, புனிதனாகிய சிவபெருமானிடத்தில் கொண்ட பேரன்பினை உடையவராய், பேசக் கற்கும் பொழுதே அப்பெருமானது திருப்பெயர்களையும், அருட் செயல்களையும் பேசினார். பிறந்த நாள் விழா முதலிய சிறப்புக்களைத் தந்தையார் செய்து பாராட்டி வளர்க்க, புனிதவதியார், சிவபத்தியும் அழகும் பிறந்து வளர்வதுபோல வளர்ந்தார்.

சிறுமியர்களோடு தெருவிற் சென்று சிற்றில் இழைத்துச் சிறு சோறு அட்டு விளையாடுகின்ற விளையாட்டுக்களிலும் புனிதவதியார் சிவபெருமானது சிறப்பு நாட்களைக் கொண்டாடுதல், சிவனடியார்களுக்குத் திருவமுது இடுதல் முதலிய விளையாட்டுக்களையே விளையாடினார்.

மணப் பருவம்

இவ்வாறு சிவபத்தி வளர வளர்ந்த புனிதவதியார் வளர்ச்சி மிகுந்து திருமணப் பருவத்தை அடைந்தார். அப்பொழுதும் சிவனடியார் யாரேனும் வரக்கண்டால், தோழியருடன் அவரை வணங்கித் திருவமுது படைத்துப் போற்றுதலில் அவர் மிக்க மகிழ்ச்சியுடைய வராய் இருந்தார்.

மன்றல் வினை

உடல் உறுப்பின் அமைப்பு முறைகளை நன்கு உணர்ந்தோர் மகளிர்க்கு நல்லன எனக் கூறுகின்ற எல்லா வகையான நலங்களையும் உடைய வராய்ப் பேரழகுடன் விளங்குகின்ற புனித வதியாரைத் தங்கள் மரபிற்கும் தகுதிக்கும் ஏற்றவாருய் உள்ள மணமகனுக்குக் கொடுக்க வேண்டும் என எண்ணினுர் தனதத்தர். அவ்வெண்ணத்திற்கு ஏற்றவாறு, நாகப்பட்டினத்தில் 'நிதிபதி' என்னும் வணிகன் மகன் பரமதத்தனுக்கு முறைப்படி திருமணம் உறுதி செய்யப் பெற்று, காரைக்காலிலே தனதத்தனுர் இல்லத்தில் அனைவரும் புகழ்ந்து போற்றும் வகையில் சிறப்புற நிகழ்ந்தது.

இல்லற நிகழ்ச்சி

புனிதவதியார் தம் குடிக்கு ஒரு மகளாராய் அரிதில் தவம்செய்து பெற்றெடுக்கப்பெற்றவராதலின், அவரைப் புக்ககமாகிய நாகப்பட்டினத்திற்குச் செல்ல விடுத்தற்கு மனம் இசையாதவராய், தனதத்தனுர் மகட்கொடைப் பொருளாகப் பெரும் பொருளை வழங்கிக் காரைக் காலிலேயே சிறந்ததொரு மாளிகையும் வாணிகமும் அமைத்துக் கொடுத்து, புனிதவதியாரையும் பரம தத்தனையும் இல்வாழ்க்கை நடத்தச் செய்தார். பரம தத்தனும் வாணிகத்தைத் திறம்பட நடத்திப் பொருளை ஈட்டிப் புனிதவதியாருடன் இல்லறத்தை இனிதே நடத்திச் சிறப்புற்றுத் திகழ்ந்தான்.

பத்தி நிலை

புனிதவதியார் உள்ளத்தில் சிவபக்தி மிகுந்து பெருகினும், உலகியலில் மகளிர்க்கு உரிய இல்லற ஒழுக்கத்தில் எட்டுணையும் வழுவாது பரம தத்தனுக்கு இனிய வாழ்க்கைத் துணைவியாராய் விளங்கினுர். அக்காலங்களில் அவர் சிவனடியார்கள் வருவார்களாயின் அவருக்குச் சிறந்த திருவமுது அளித்தும், பொன்மணி ஆடை முதலிய வற்றை அவர்கள் விரும்பியவாறு கொடுத்தும் தம் பத்தி நெறியையும் நன்கு கடைப்பிடித்து நின்றுர்.

அற்புத நிகழ்ச்சி

இவ்வாறு இருக்கும் நாட்களில் ஒரு நாள் ஓர் அதிசயமான-அச்சந்தரத்தக்க-நிகழ்ச்சி நிகழ்ந்தது. பரம தத்தனுல் ஆக வேண்டிய சில செயல்களின் பொருட்டு அவனை வணிக நிலையத்திற் காண வந்த சிலர், அவனுக்குக் கையுறையாக இரண்டு மாம்பழங்களைக் கொடுத்தனர். அவன் அவர்களுக்கு ஆக வேண்டுவனவற்றை முடித்து, 'இம் மாம் பழங்களை என் இல்லத்தில் கொடுத்துச் செல்லுங்கள்' எனச் சொல்லி விடுத்தான். அவர்கள் அவ்வாறே சென்று பழங்களைப் புனிதவதியாரிடம் கொடுத்துச் சென்றுர்கள். புனிதவதியார் அப்பழங்களை வாங்கிக்கருத்தாகப் போற்றி மனையகத்து வைத்தார்.

வைத்த சிறிதுநேரத்திற் கெல்லாம் வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர்

மிக்க பசியுடன் புனிதவதியாரது இல்லத்திற்கு வந்தார். அவரது பெரும் பசியைக் கண்ட அம்மையார் அவருக்குச் சிறிதும் தாழ்க்காது உணவளிக்கக் கருதினர். ஆனல், அப்பொழுது திருவமுது மாத்திரமே சமைக்கப்பட்டிருந்தது. கறியமுது சமைக்கப்படவில்லை. அடியவர் பசி அது காறும் பொறுக்கத் தக்கதாய்த் தோன்றவில்லை. அதனல், புனிதவதியார், 'பெறுதற்கரிய நல்விருந்தினர் கிடைத்திருக்கின்றார் என்றால், இவருக்குக்காலம் தாழ்க்காது உணவளித்தலைவிட நாம் பெறத்தக்க பேறு யாதுளது' என்று நினைந்து, தம்மிடம் இருந்த இரண்டு மாம்பழங்களில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்து அடியவருக்கு உணவளித்தார். நல்ல திருவமுதைச் சுவைமிக்க மாங்கனியோடு உண்டு பசி தீர்ந்த அடியவர், கறி யமுதுக்காகக் காலந் தாழ்த்தாது அம்மையார் செய்த அறிவு மிக்க செயலைப் பாராட்டி மகிழ்ச்சியுடன் சென்றார்.

பின்பு, பரம தத்தன் நண்பகற் போதில் இல்லத்தை அடைத்து குளித்து வந்து உணவு கொண்டான். புனிதவதியார்,தம்கணவனுக்கு முறைப்படி உணவு படைக்கும்பொழுது, அறுசுவைக் கறிகளுடன் அவன் கொடுப்பித்த மாங்கனிகள் இரண்டில் எஞ்சியிருந்த ஒன்றை இட்டார். பரம தத்தன் அக்கனியை உண்டு, அதன் சுவையில் ஆழ்ந்தவனய் மனம் நிறைவு பெருது, 'இது போன்ற கனி மற்றொன்று இருக்கின்றது அன்றோ? அதனையும் கொண்டுவந்து இடு' என்றான்.

பரமதத்தன் அவா மிகுதியால், உணவின் இடையே, 'மற்றொரு கனியையும் கொணர்ந்து இடுக' என ஒரு சொல்லாக அறுதியிட்டு விரும்பிக்கேட்ட சொற்கு எதிராக, அவன் பெரியதோர் ஏமாற்றத்தை அடையுமாறு 'மற்றொருகனி செலவிடப்பட்டு விட்டது' என்று கூற மாட்டாதவராய், அவ்விடத்தில் நிற்கவும் இயலாது, அக்கனியைக் கொண்டு வரச் செல்பவர்போல உள்ளே சென்றார். சென்றவர் என்செய்வார்! அதன் பின்பும் மீண்டும் வந்து நிகழ்ந்ததைக் கூற அவருக்கு இயலவில்லை. அதனல், யாதொரு துணையும் அற்ற நிலையில் அம்மையார், தமக்கு உயிர்க்குயிராய் நின்று உதவுவோராகிய இறைவரது திருவருளையே உறுதியாகப் பற்றி நினைந்தார். அங்ஙனம் நினைந்தவுடன் அவ்விறைவரது திருவருளால் அரிய சுவைமிக்க மாங்கனி யொன்று அம்மையாரது கையில்வந்து இருந்தது. அதனை மகிழ்ச்சியோடு கொண்டு வந்து அம்மையார் பரம தத்தனது பரிகலத்தில் இட்டார்.

அக்கனியை உண்ட பரம தத்தன் அது, தான் கொடுப்பித்த கனிகளில் ஒன்றன்று என்பதை அதன் தனிப்பட்ட பெருஞ்சுவையினல் அறிந்தான். அதனல் அவன் புனிதவதியாரை நோக்கி, 'இது நான் வரவிடுத்த கனியன்று; இவ்வுலகில் மட்டும் அன்று—மேல் கீழ் உலகங்களிலும் இத்தகையதொரு கனி இருக்கும் என்று நான் நினைக்கவில்லை; ஆகவே,இக்கனி உனக்கு எவ்வாறு கிடைத்தது? உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று கேட்டான்.

இறைவர், தமக்கு உற்றவிடத்து உதவுதல் வேண்டும் என்னும் பெருங் கருணையாற் செய்த அரும்பெருஞ் செயலை அதன் பெருமையை உணரமாட்டாத பிறரிடத்தில் சொல்லுதல் முறையாகாமையாலும் 'உண்மையைச் சொல்லுக' என வினவும் கணவனுக்கு வேறொன்றும் கூறுதல் கற்புடைய தமக்குக் கூடாமையாலும் அம்மையார் பேரிடர்ப்பட்ட

வராய், 'எவ்வாறாயினும், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு கூறுதலே தக்கது' எனத் துணிந்து, நிகழ்ந்தவற்றைக் கூறினர்.

அக்கனி சிவபெருமான் அளித்த கனி என்பதாக அம்மையார் கூறியதைப் பரமதத்தன் உண்மை என நினைக்கவில்லை. ஏனெனின், அஃது அத்துணை எளிதில் நிகழ்வது அன்று ஆதலின் புனிதவதியாரது உண்மை நிலையை அவன் உணர்ந்திருந்தானாயின், அந் நிகழ்ச்சி கூடுவதேயாம் என அவன் கருதியிருப்பான். அவரது நிலையை உணர்ந்திலன் ஆகையால், அவரது சொற்களில் அவன் ஐயம் உடையவன் ஆயினன். 'இக்கனி உலகத்தில் இல்லாத கனியாய்த் தோன்றுகின்றது' எனத் தான் கூறியதில், அதனை ஒரு தெய்விகக் கனியாகத் தான் கருதுகின்ற குறிப்புத் தோன்றுதலால், அதையே பற்றுகக் கொண்டு தன்னைத் தன் மனைவி மருட்ட நினைக்கின்றாளோ என அவன் எண்ணினன். இது போன்ற நிகழ்ச்சிகளில் உலகமக்கள் இந்த அளவில்தான் நிற்க இயலும் என்பது, இப்பரம தத்தன் செயலால் நன்கு புலனாகின்றது.

புனிதவதியாரது சொல்லை ஐயுற்ற பரமதத்தன் அதனைச் சோதித்து அறிய விரும்பி, 'இது சிவபெருமான் கொடுத்த கனி என்பது உண்மையாயின், மற்றொரு கனியையும் அப்பெருமானிட மிருந்து பெற்றுவருக' என்றான். எனவே, 'நாம் கொடுப்பித்த அக்கனியேதான் இவ்வளவு அரிய சுவை உடையதாய் இருந்து நம்மை மயக்கி விட்டதோ! மூன்றாவது ஒருகனி நம் இல்லத்தில் இருத்தற்கு வழியில்லை யாகையால், மற்றொரு கனியை இவள் எங்கிருந்து கொண்டு வருதல் கூடும்! எனப் பரம தத்தன் நினைத்தான் எனத் தெரிகின்றது.

ஆயினும், அம்மையார் உள்ளே சென்று தம் பெருமானை நினைந்து, 'பெருமானே, என் கணவன் கேட்கின்ற படி மற்றொரு கனியையும் இப்பொழுது அளித்தருளவேண்டும்; இல்லையேல், என் சொல் பொய்யாகி, அது காரணமாக எத் துணையோ குற்றங்கள் விளையும்' என்று வேண்டினர்.

உடனே மற்றொரு அரிய மாங்கனியும் பெருமானது திருவருளால் புனிதவதி யாரது திருக்கைகளில் வந்து நின்றது; அதை அவர் கொண்டு சென்று, பரிகலத்தில் இடாமல் பரமதத்தன் கையிற் கொடுத்தார். ஏனெனில், அக்கனியை அவன் உண்ண விரும்பிக் கேட்டானில்லை; சோதிக்க விரும்பியே கேட்டான். அதனால், அவன் கையிற் கொடுக்க, அதனை அவனும் தன்கையில் வாங்கினன். வாங்கியது தான் கண்டது; உடனே அக்கனி சென்ற இடம் தெரியாமல் மறைந்தது.

பரம தத்தன் மனங்கலங்கினன்; அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. புனிதவதியாரை அதுகாறும் தன் மனைவி எனக் கருதியிருந்த அவன் அப்பொழுது ஏதோ ஒரு பெண் தெய்வந்தான் எக்காரணத்தாலோ தன்னிடம் மனைவியாக வந்துள்ளது' என்ற முடிவுடையவனாய் அத்தெய்வத்தோடு தொடர்பு கொள்ள ஒருப்படாது அன்று முதல் தொடர்பின்றியே இல்லத்தில் ஒழுகலானான்.

புனிதவதியார் சிவபெருமானது திருவருட் செயலை இனிது விளக்கியபின், பரமதத்தன் அவ்விளக்கத்தினாலே மெய் யுணர்வு பெற்று அவரைப்போலவே அப் பெருமானது திருவருட்கு உரியவனாய், மங்கையர்க்கரசியாருடன் வாழ்ந்த நின்ற சீர் நெடுமாறரைப்போல இனிது வாழ்ந்து இறைவன் திருவடியையெய்தியிருக்கலாம்.

(தொடரும்)

ஸ்ரீ வடபழநி ஆண்டவர் தேவஸ்தானம்

ஸ்ரீ ஷண்முகநாத சுவாமி



ஸ்ரீ நடராஜர்

குணங்களையும் நெருங்கிய தொடர்பு பற்றி ஒன்ருகக் கூறும் மரபுண்டு என்பது உணர்த்தப் பட்டது. இம்முறையை ஔபசாரிகப்ரயோகம் என்றும் உபசார வழக்கு என்றும் நூல்கள் கூறும்.

ஆகவே, தமிழ் மொழியில், "கண்ணோட் டமும்," வடமொழியில், "கடாக்ஷமும்" ஒத்த பொருளுடையன என்பதும், இரண்டு சொற் களும் உபசார வழக்காக; "பயின்ருேர் சொல்லை மறுக்கமாட்டாமை" "கருணை," "தண்ணளி", "கிருபை" ஸௌலப்யம்' முதலிய சொற்களால் உணர்த்தப்படும் பொருள்களை ஒருவாறு உணர்த்தும் என்பது அறியப்பட்டதாயிற்று.

திருவள்ளுவரும், எல்லாரையும் ரக்ஷணம் செய்யும் அரசனுக்கு இக்குணம் அவசிய மானது என்பதை வற்புறுத்தற்கு இவ்வதி காரத்தை அரசியலில் கூறியிருக்கிருர். இக் குணம் கண்வழியாகப் புலப்படுவதால் கண் ணுக்கு இதுவே ஆபரணம் என்றும், இக்குண மில்லாதார் கண்ணுடையவராய் இருந்தும் கண் பெற்ற பயன் பெறவில்லை என்றும், கண் இலராயினும் இக் குணமுடையார் கண் உடையர் என்றும் இக்குணத்தின் பெருமையை

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்,
அஃதின்றேல் புண் என்று உணரப்படும்."

என்றும்,

"கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர்
கண்ணுடையார், கண்ணோட்ட மின்மையுமில்"

என்றும் கவினுறக் கூறியுள்ளார்.

இக்கண்ணோட்டமென்ற குணமே, கண் என்ற சொல்லாலும் வழங்கப் பெறும் என்பது, "கடுஞ்சொல்லன் கண்ணிலனுயினும்" "கண் ணின்று கண்ணறச் சொல்லினும்" என்ற குறள் களில் "கண்ணிலன்" "கண்ணற" என்று கண் சப்தத்தாலேயே வள்ளுவரும் வழங்கி இருத்தலால் புலனுகிறது. அருளிச் செயல் வியாக்கியானம் செய்த ஆச்சார்யர்களும் கண் ணோட்டம் இல்லாத என்ற கருத்தில் "கண் பாராத என்றும், அதிகமான அன்புடையாரை "அங்கண்ணர்" என்றும் கூறியிருப்பதாலும் மேற் கூறிய பொருளில் "கண்" சப்தம் வழக் குண்டு என்பது தெளிவு.

ஆகவே கண்ணோட்டம் என்னும் பொருள் கொண்ட 'கண்' என்ற பண்புச் சொல்மேல் 'அன்' விகுதி சேர்ந்து 'கண்ணன்' என்று ஆகுங்கால், கருணை வடிவாக விளங்குபவன் சுலபன் என்றெல்லாம் பொருள் தருவதாக ஆகி றது. இதனுல்தான் அருளிச்செயல் வ்யாக் யானங்களில் பல இடங்களில் கண்ணன் சொல் லுக்கு இவ்வாருன பொருளும் கூறப்படலாயின என்பதாம்.

இனி ஆழ்வார்களுடைய பாசுரங்களைக் கொண்டு இப் பொருளை அனுபவிப்போம்.

பகவத் விஷயத்தில் அதிகமான பக்தி உடைய ஆழ்வார், தம்முடைய பேச்சாகவும், தோழி தாயார் போன்ற பிறர் பேச்சாகவும் பாசுரங்களைப் பாடியருளினுர். ப்ரத்யக்ஷமாக பகவானைக் கிட்டி அனுபவிக்கிறதுபோல அவர் மனதில் ஒரு அனுபவம் உண்டாகும். அப் பொழுது தாமாகப் பேசுவர். அந்த அனு பவம் முதிரும் பொழுது வெளி இந்திரியங்களா லும் அதாவது மாம்ஸ கண்ணுல் கண்டும், கை முதலிய உறுப்புக்களால் அவனைத் தழுவியும் அனுபவிக்க வேணும் என்று ஆசைப்படுவர். அவ்வாசை கைகூடாதவாறே கலங்குவர். அவ் வாறு கலங்கின நிலையில் பிறர் பேச்சாகத் தமது அனுபவத்தை வெளியிடுவர். இப்படிப் பிறர் பேச்சாக வரும் திருவாய்மொழியில் ஆடி ஆடி என்ற திருவாய் மொழியும் ஒன்று.

இத் திருவாய் மொழியில் ஆழ்வார் தாய்ப் பாசுரத்தில் பேசியிருக்கிருர். ஆழ்வாராகிற தலைமகள் எம்பெருமானுகிற தலைமகனை விட்டுப் பிரிந்த சமயம். பிரிவாற்ற மாட்டாத அத் தலை மகள் மூச்சுப் பேச்சில்லாமல் கட்டை போல் கிடக்கிருள். அந்நிலையைக் கண்ட தாயார் 'நம்மகள் இப்பாடு படுகிருளே' என்று தன் மகள் நிலைக்கு நொந்து, அவள் தன் தலைவன் விஷயமாக சிரமப்படுவதை எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது இத் திருவாய்மொழி. அதில்,

உள்ளுலாவி உலர்ந்துலர்ந்து என
வள்ளலே கண்ணனே என்னும் பின்னும்
வெள்ளநீர்க் கிடந்தாய் என்னும் என
கள்விதான் பட்ட வஞ்சனையே

என்பது ஒரு பாசுரம்.

இப் பாசுரத்தில், வாய்திறந்து அதிர்ந்து ஒரு வார்த்தை பேசாத அடக்கமுடைய என் மகள் இப்பொழுது பிரிவாற்ருமையால் அடக்கம் துறந்து, தன்தலைவன் குணங்களைப் பிறரறிய வாய்விட்டுக்கூப்பிடுகிருளே. இதுஎன்ன? என்கிருள் திருத்தாயார். இங்கு, தலைவன் குணங்களை எண்ணிக் கூப்பிடுவதாக உள்ள விளிகளில் கண்ணனே! என்பதும் ஒன்று.

இதற்கு நம்பிள்ளை "கண்ணனே! இவ்வளவான ஆர்த்திகளிலே வந்து உன்னை எனக்குக் கையாளாகத் தருமவனே" என்று அருளிச் செய்த வ்யாக்யானத்தை அனுபவித்தால், இப்பொழுது நாம் விளக்கிவருகிற (கண்ணோட்டம்) கண் உடையவன் கண்ணன் என்ற பொருள் நன்கு தெளிவாகும்.

"அதாவது தலைவி, கண்ணனே! என்று கூப்பிட்டதற்கு நான் படும் இன்னலை நோக்கி தம்மைச் சேர்ந்தவள் இப்பாடு படுகிருளே என்றெண்ணி, என் நோவைப் பரிஹரிக்க வேலைக்காரனைப் போல நின்று, சொன்னதெல்லாம் செய்யும் கண்ணோட்டம் (கருணை) என்ற குணமே உருவெடுத்தாற் போல் விளங்குபவனே!" என்றிவ்வாறு பொருள் கூறி யிருத்தலால் "கண்ணோட்டம் என்ற குணத்தை உடையவன் என் நாயகன்" என்று அக்குணத்தை இட்டுக் கண்ணனே என்று தன் தலைவனைக் கூப்பிட்டிருக்கிருள் என்பதும், ஆகவே (கண்ணோட்டம்) கண் உடையவன் கண்ணன் என்பதும் நன்கு புலனுகும் அல்லவா?

"காண்பாரார்? எம் ஈசன் கண்ணனை" என்ற பாசுரத்திலும் ஆழ்வார் பகவானுடைய கண்ணோட்டம் என்ற குணத்தைத்தான் அனுபவித்திருக்கிருர். "ஸர்வேஸ்வரனுய் இருந்து க்ருஷ்ணனுய் வந்தவதரித்து எனக்குக் கையாளானவன்" என்று ஈசன் கண்ணனை என்ற பகுதிக்கு ஈட்டில் வ்யாக்யானம் செய்திருத்தல் காண்க.

மேலும் "கரியமேனியன் செய்ய தாமரைக் கண்ணன் கண்ணன் விண்ணோரிறை" என்ற இடத்திலும் இரண்டாவது கண்ணன் என்பதற்கு, "ஆச்ரிதற்குக் கையாளாயுள்ளவன்" என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது.

பாலனு யேழுலகுண்டு பரிவின்றி என்ற திருவாய்மொழியின் பல சுருதி ரூபமான பாசுரத்தில் "மெலியு நோய்தீர்க்கும் நங் கண்ணன் கழல்கள்மேல் மலிபுகழ் வண்குருகூர்ச் சடகோபன் சொல்" என்று அருளிச் செய்திருக்கிருர் ஆழ்வார்.

இங்கு கண்ணோட்ட முடையவன் என்ற பொருளையே கண்ணன் சொற்கு விளக்கம் செய்வது போல "மெலியுநோய் தீர்க்கும்" என்று அடைமொழி கொடுத்துக் கண்ணன் என்று சொல்லியிருப்பதால் ஆழ்வாரே சொற்பொருளை விரித்துணர்த்தினரோ என்னுமாறு அமைந்திருப்பது நன்கு புலனுகிறது அல்லவா? ஈட்டில் வ்யாக்யானமும் இதற்குப் பொருத்தமாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது.

திருவாய்பாடியில் ஒருசமயம் பஞ்ச லக்ஷம் கோபிகைகளுக்கும் முகம் காட்டாது கண்ணன் மறைந்திருக்கும் சந்தர்ப்பம். அப்பொழுது கண்ணன் பிரிவால் ஆற்றமாட்டாத கோபியர் மிகவும் மெலிந்து விரகநோயால் துன்பப்படுகிருர்கள். அந்த நிலையில் அவர்கள் நோவை அறிந்து பரிகரிப்பதற்காகத் திருவுளம் கொண்டான் கண்ணன். மிக்க விரகவேதனை யுடையவரான பஞ்ச லக்ஷம் கோபியருக்கும் நடுவில் புன்முறுவலோடு கூடிய தாமரை மலர் போன்ற முகத்தையும், பீதாம்பரம் வனமாலை இவற்றை அணிந்த திருமேனியையும் உடையவனுய் காமனுர் தாதை என்றபடி மன்மதனுக்கும் மன்மதனுக விளங்கும் பேரழகுடைய கிருஷ்ணன் திடீர் என்று தோன்றினுன்.

அப்பொழுது அவர்கள் மெலியும் நோய் தீர்ந்து கண்ணன் கருணையால் வாழ்ந்தார்கள் என்பது பாகவத வரலாறு. இப் பாசுரத்தில் நம் கண்ணன் என்ற பகுதிக்கு விளக்கம் செய்த ஆச்சாரியர்கள் "தாஸாம் ஆவிரபூத் சௌரி:" என்று இவ் வரலாற்றை எடுத்துக் காட்டி, "இப்படி ஆபத்துக்களிலே வந்து முகங்காட்டும் என்னும் ப்ரமாணப்ரஸித்தி" என்று 'நம்' என்ற பதத்திற்கு விளக்கம் செய்தார்கள். "மெலியுநோய் தீர்க்கும் கண்ணன்" என்பதற்கு விளக்கம் செய்யும்போது "இப்படி சிதிலையாகைக் கடியான விரஹவ்யதையைப் போக்கும் ஆச்ரித சுலபனுன கிருஷ்ணன்" என்று அருளிச் செய்திருக்கிருர்கள். இதனுல் தன்னைச் சேர்ந்தவர்க்கு ஆபத்துக் காலத்தில் சுலபனுயிருந்து கையாளனுகி, அவர்களுக்கு

வேண்டியது செய்யக்கூடியவன் என்ற குணத்தைக் காட்டும் 'கண்' எனப்படுகிற கண்ணோட்டமுடியாகப் பிறந்த கண்ணன் என்பதும் அதன் பொருளும் உணரப்பட்டதாயிற்று.

"கற்கும் கல்விஎல்லாம் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான்" என்ற பாசுரத்தில் வரும் கண்ணனென்பது, "ஆச்ரித பாரதந்தர் யத்திற்கு வாசகமான திருநாமம்" என்றும் "கிருஷ்ணனுகில் ஆச்ரித பவ்யன் என்று பரஸித்தமிறே" என்னும் நம்பிள்ளையார் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறே,

"அளவியன்ற ஏழுலகத்தவர் பெருமான்
கண்ணனை"
"கடிசேர்துழாய் முடிக்கண்ணி புனைந்தான்
தன்னைக் கண்ணனை"

என்ற பாசுரங்களிலும் "மிக மேன்மையுடையவனுய் இருந்து வைத்து இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் தன்னை எளியனுக்கி வைத்தவனை" என்று வ்யாக்யானம் செய்திருக்கிருர். இவ்வாறு இன்னும் பல இடங்கள் உண்டு. விரிவஞ்சி அமைகிருேம்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்ருல் தன்னைப் பற்றினுர் சொல்லைத் தட்டமாட்டாமை கண்ணேட்டம் என்றும், அத்தகைய குணமுடையவன் கண்ணன் என்றும் கூறி ஆழ்வார்கள் இந்தக் கருத்தில் கண்ணன் சொல்லைப் பல இடங்களில் வழங்கியிருக்கிருர்கள் என்பதற்குப் பல மேற்கோள்கள் கொண்டு அப்பொருளை விளங்க அறிந்தோம்.

கண்ணேட்ட மற்றவன் கண்ணன்

இனி கருணையற்றவன் கண்ணன் என்ற பொருளில் ஆழ்வார்கள் சுவைத்திருப்பதைக் காண்போம்.

"கண்ணன்" சொற்குக் கீழே கூறிய பொருள்கள்யாவும் ஓரோரு காரணத்தைப்பற்றி அவ்வப் பொருள் உரைக்கப்பட் டிருப்பதாக அறிந்தோம். இப்பொழுது கண்ணன் சொல்லுக்குக் கூறும் தீம்பன், குறும்பன், கருணையற்றவன் என்ற பொருள்கள். அச் சொல்லுக்குரிய நேரான பொருள் ஆகா. ஆயினும் ஒரு நிலையில் காணும்போது அச்சொல் அப்பொருள்களை உணர்த்துகின்றது.

இக்கருத்து, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச் செயலில்தான் மிக ரஸமாக அனுபவிக்க முடியுமன்றி வேறிடத்தில் காண்பதரிது. இப்படிப்பட்ட பழிப்பது போன்ற கருத்து ஆழ்வார் எம்பெருமானை விட்டுப் பிரிந்த தசையில் மிக்க ஆற்றுமை மேலிட்டுப் பேசும் பாசுரங்களில்தான் காணமுடியும். அவற்றுள் ஓரிரு இடங்களை இங்கு அனுபவிப்போம்.

ஒரு சமயம் எம்பெருமானுகிற தலைமகன், ஆழ்வார் ஆகிற தலைமகளோடு கூடிப் பிரிந்து சென்றுன். பிரிந்து சென்ற தலைவன் பல நாட்களாகியும் வரவில்லை. அப்பொழுது ஆழ்வார் ஆகிற தலைமகள் ஆற்றுமை மேலிட்டுத் தன் பக்கத்திலிருக்கும் பல பக்ஷிகளைப் பார்த்துத் தன் நாயகனிடம் தூது சென்று வரும்படி ஏவுகிருள்.

அப்படிப்பட்ட பாசுரங்களில்,

"அடிகள் கைதொழுது
அவர்மேல் அசையுமன்னங்காள்
விடிவை சங்கொலிக்கும்
திருவண் வண்டூருறையும்
கூடிய மாயன் தன்னைக்
கண்ணனை நெடுமாலைக் கண்டு
கொடிய வல்வினையேன்
திறங் கூறுமின் வேறுகொண்டே"

என்பதும் ஒன்ருகும்.

இப் பாசுரத்தில் 'கண்ணனை நெடுமாலை' என்று ஆழ்வார் கண்ணனைக் கூறியது கண்ணேட்டமில்லாதவன் என்று பொருட்படவும் கூறியிருக்கிருர்.

ஆழ்வாரோடு எம்பெருமான் கூடும்போது தன்னை மிகவும் தாழவிட்டுக் கொண்டு இரக்கம் மிக உடையவனுகக் கூடினுன். இப்பொழுது பிரிந்திருக்கும் நிலையாயிருப்பதால் காம மிக்க கழிபடர் கிளவி என்ற துறையில் சொல்லும்படி ப்ரணய ரோஷம் தலை எடுத்துப் பேசவேண்டி ஏற்பட்டிருக்கிறது. (தொடரும்)

கூட்டு வழிபாடு

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A.,B.L., கோவை.

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் விழா விற்கு ஈழ நாட்டிற்குச் சென்றிருந்தேன். அப் போது கொழும்பு நகருக்குச் சென்று கடலோரப் புறநகராகிய வெள்ளவத்தையில், பிள்ளையார் கோயிலில், பின்புற விடுதியில் தங்கியிருந் தேன். அப் புறநகரில் தமிழ் மக்கள் பெரும் பான்மையில் குடியேறி உள்ளார்கள். அது கொண்டு அதனைச் சிறுயாழ்ப் பாணம் என்பர். விசாலமான வீடுகளைக் கட்டிக் கொண்டு வசதி யுடன் தமிழர்கள் வாழுகிறார்கள். எல்லாரும் அலுவலர்களாகப் பணிசெய்து வருகின்றார்கள். கல்வி கற்றவர்களாயும் சமய அறிவில் தேர்ந் தவர்களாகவும் இருக்கிறார்கள். வாரந்தோறும் கோயில் மண்டபத்தில் ஆராதனையும் சமயப் பேச்சுக்களும் நிகழ்த்துகிறார்கள்.

நம் நாட்டைப் போல் அல்லாது படித்தவர் களும், செல்வந்தர்களும் வார வழிபாட்டு இயக் கத்தில் கலந்து கொள்ளுகிறார்கள். இதைக் கண்டு மிகவியந்தேன். நானும் அன்று அதில் கலந்து கொண்டு பேசினேன்.

நம் தமிழ்நாட்டில் இந்தக் கூட்டு வழிபாடு சிறப்பாக நடைபெறுவதில்லை. சென்னையில் சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் இந்த இயக்கத்தைத் தொடங்கினார். பல ஊர்களுக்கும் கொண்டு சென்றார்கள். ஒரு அறிக்கை நூல் இயற்றினார்கள். என்ன முறை யில் சுருக்கமாக வழிபாடு நடத்தப் பொது மக்க ளில் சமய அறிவும் ஒழுக்கமும் இயங்குவது என்று தெளிவாக எழுதி வெளியிட்டார்கள்.

சில இடங்களில்தான் வார வழிபாடுகள் நடக்கின்றன. நிரந்தரமாகத் தொடர்ந்து பணி செய்யும் இயக்கம் இல்லை. கிறித்தவர்களையும் இசுலாமியரையும் கண்டு பொறாமைப்படுவதில் பயனில்லை. செயல் முறையில் வார வழிபாடு நடத்தவேண்டும்.

பண்டைக்காலம் முதல் வழிபாடு இரண்டு விதமாகக் கொள்ளப்பட்டது. ஒன்று பரார்த்த பூசை, மற்றொன்று ஆன்மார்த்தபூசை என்பன. பரார்த்த பூசை கோயில்களில் நடைபெறுவது. ஆன்மார்த்த பூசை இல்லங்களில் மக்கள் செய் வது. இரண்டிற்கும் விதிகள் இயற்றப்பட்டுள் ளன. அவை வடமொழியில் உள்ளன. தமிழில் சில மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் இவைகளைப் பொதுப்பட நடத்து வதை மக்கள் விட்டுவிட்டார்கள். சில குடும் பங்களும் சில இனங்களுமே இன்னமும் கைக் கொண்டிருக்கின்றன. கோயில் விழாக்களில் பாமர மக்கள் மிகுதியாக ஈடுபட்டுக் கலந்து கொள்ளுகிறார்கள். கற்றோர்களும் செல்வ வான்களும் அவைகளில் கலந்து கொள்ள இசைவது இல்லை. சில குட முழுக்கு விழாக் களில் பெருமைக்காக மட்டும் கலந்து கொள்ள இசைகிறார்கள். இல்லங்களில் அதுவும் இல்லை. இந்தத் தாழ்ந்த நிலை மேல்நாட்டு உறவினால் ஏற்பட்டது என்று கூறலாமோ?

சமய சம்பந்தமான கோயில் விழாக்களும் இன்ப மயமான பொது மக்கள் விழாக்களும் பண்டைக்காலம் முதற்கொண்டு இருந்து வரு கின்றன. சங்க, நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிலும் இவைகள் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. கோயில்களில் இவ் விழாக்கள் எவ்வாறு நடந் தன என்று விவரமாக அறியச் சான்றுகளில்லை. ஆனால் பொது மக்கள் நிரம்பச் சென்று வழி பட்டார்கள் என்று சிலப்பதிகாரத்திலும், கொங்குவேள் மாக்கதையிலும் படிக்கின்றோம். ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, கொற்றவை வரி, (சிலம்பு) தெய்வச் சிறப்பு-(6), இலாவாண காண்டம்-(2), வனத்தில் திருவிழா-மகத காண் டம் (பெருங்கதை) முதலிய பகுதிகளால் மக்கள் இவ் விழாக்களில் பெரும்பங்கு எடுத்துக்கொண்

டார்கள் என்று கூறிக்கலாம். அரண்மனை மக்களும், ஊர்ப்பெரு மக்களும், மகளிரும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்பு கெழுமிய துதிப் பாடல்களும் பாடப்பட்டன. ஆய்ச்சியர் குரவையில் "வடவரையை மத்தாக்கி" "கன்று குணிலாக்கனி" முதலிய பாக்கள் ஆழ்ந்த அன்பும் கருத்தும் கொண்டவைகள் எனலாம்.

பல்லவர்கள் ஆளத் தொடங்கிய நாளில் கோயில்கள் சிறியவைகளாயும் மண்ணினால் ஆக்கப்பட்டனவாயும் இருந்தன. சமண பௌத்த ஆதிக்கத்தினால் அவைகளில் விழாக்களும் வழிபாடுகளும் குறைந்து இருந்தன. மகேந்திரவர்மனுக்குப் பிறகு ஆட்சி வலுத்தும் அப்பர், சம்பந்தர் ஆகிய பெருமக்களால் மறுமலர்ச்சி ஏற்பட்டும் கோயில் வழிபாடு சிறக்கத் தொடங்கியது. தேவார அருட்பாக்கள் தோன்றிப் பொதுமக்களின் நல்லுணர்ச்சியும், கடவுள் வணக்கமும் வலுக்கத் தொடங்கியன. கோயில் பெரியதாயும் வழிபாட்டிற் கேற்றதாகவும் ஆக்கப்பட்டன. குடைக் கோயில்; கற்கோயில்; கட்டுக் கோயில்கள் எழும்பின. கோயிற் படிமானம், அருட்பா ஓதுதல், இன்னிசைக்கலப்பு, கருத்துச் செறிவு முதலிய பண்புகளால் நாட்டில் சைவ, வைணவ மறுமலர்ச்சியும், அன்பு மேம்பாடும் மேலோங்கின.

பல்லவர்களுக்குப் பின்னர் சோழப் பேரரசும் பாண்டியப் பேரரசும் சில நூற்றாண்டுகள் வரை சமய மேம்பாட்டிற் குதவின. சைவத்தில் பன்னிரு திருமுறைகளும், வைணவத்தில் திவ்வியப் பிரபந்தங்களும் தோன்றி மக்களிடைக் கடவுட் கொள்கையை நிலைநிறுத்திப் பெருகின. பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு நூற்றாண்டுகளில் தத்துவஞான நூல்கள் தோன்றின. சைவத்தில் மெய்கண்ட சாத்திரங்களும், வைணவத்தில் ஆசாரிய பரம்பரையினர் அருளிய தத்துவார்த்தங்களும் போதிக்கப்பட்டன. ஆனால் தமிழர்களுடைய அரசியல் தன்னுரிமை மறைந்தது. பிற மதத்தினர்களும் பிற ஆட்சிகளும் தோன்றிச் சமய மேம்பாட்டைக் குறைத்தன. அப்பொழுது சைவ வைணவ மடாலயங்களும் குரு பரம்பரையினரும் தோன்றிச் சமயங்களை அழியாமல் காத்தன. ஆனால் பொது மக்களிடையே வழிபாட்டு மேன்மை குறைந்தது. செல்வர்கள் வழிபாட்டை மறந்தனர்.

கருநாடக நவாப்புக்கள் காலங்களிலும், மைசூர் சுல்தான்கள் காலங்களிலும் இந்து சமயத்தினர் வெளிப்படையாக வழிபாடு செய்ய அஞ்சினார்கள். ஆங்கில ஆட்சியில் ஒருவாறு அச்சம் நீங்கினாலும், வழிபாட்டிற்கு ஆதரவு இல்லாமல் இருந்தது. தற்போது, தன்னுரிமை தோன்றின பிறகு சமய வளர்ச்சிக்கு ஆதரவு தரப்பட்டு வருகின்றது.

மக்களும் கடவுள் வணக்கத்தில் உயரத் தொடங்குகிறார்கள். கோயில்கள் பழுது பார்க்கப் படுகின்றன விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. ஆலய ஆராதனைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. வீண் விரயங்கள் தடுக்கப்பட்டு வழிபாட்டு நிகழ்ச்சிகள் செவ்வைப் படுத்தப்படுகின்றன. கோயில்களில் சோழர்கள் காலத்தில் சமய மேம்பாடு உற்றது போலத் தற்போது சமயச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. ஆனால் இன்னும் கற்றோர்களும் செல்வந்தர்களும் கோயில் தொழுவதை மேற்கொள்ளக் கூசுகிறார்கள்.

கோயில் வழிபாடு இவ்வாறிருக்க, இரண்டாவதான ஆன்மார்த்த வழிபாடு சில குடும்பங்களைத் தவிரப் பெரும்பாலும் மறைந்துவிட்டது. தனி மனிதர்களும், தனிக் குடும்பங்களும் சில சிறப்புக்களை முன்னிட்டுக் கோயில்களுக்குச் சென்று தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள ஈடுபடுவது இதில் அடங்கும். மேலும் மற்றொன்று: வீடுகளில் தனிப் பூசையறை ஏற்படுத்திக் குடும்பத்தாரோடு, குடும்பத் தலைவனே அப் பூசையினை நடத்துவது ஆகும். சில வைதீகக் குடும்பங்களில் இப்பூசை நடப்பது உண்டு. சில நடுத்தரக் குடும்பங்களிலும் உண்டு. ஆனால் பெரும்பான்மையாகச் செல்வர் வீடுகளிலும், அலுவலர் வீடுகளிலும், ஏழையரின் வீடுகளிலும், பின்தங்கிய குலத்தார் வீடுகளிலும் இது நடப்பது இல்லை. பூசை அறை இல்லாமலே வீடுகளும் கட்டப்படுகின்றன. ஆகவே அக்குடும்பங்களில் இளைஞர்கள் சமய அறிவு இல்லாமலேயே வளர்க்கப்படுகின்றார்கள். அவர்கள் நாத்திகர்களாக வளர்கிறார்கள்.

முன்காலத்தில் சில குறிப்பிட்ட நாட்களில் குடும்ப ஆராதனைகள் நடத்திச் சமய அறிவைப் புகட்டினார்கள். இக்காலத்திலோ சமய அறிவென்பதே இல்லாமலே போய்விட்டது. குடும்

பங்களில் கூட்டுப் பிரார்த்தனை என்பதே மறைந்து விட்டது. குடும்பத் தலைவன் செய்தால்தானே இளைஞர்கள் செய்வார்கள்? வர்த்தகர்களுக்கு நேரமில்லை. அரசியல் அலுவலாளர்களுக்கோ எதுவும் இல்லை. பள்ளி ஆசிரியர்களுக்கோ, குடும்பப் பெருக்கும் ஊதியக் குறைவும் உணவுக் குறைபாடும் வாட்டும்போது சமயத்தில் சிறிதும் கவனம் உண்டாவதில்லை. ஆகவே இந்துக்களில் குடும்ப வழிபாடு மிகவும் நின்று விட்டது. அதே நிலையில் இருக்கும் கிறித்துவனும், இசுலாமியனும் பிரார்த்தனை செய்கிறான். முன்னேற்றம் அடைகிறான்.

சைவ வைணவ மறுமலர்ச்சிக் காலங்களில் தேவாரப் பிரபந்தங்களினால் சமயாச்சாரியர்கள் மக்களிடம் கூட்டு வழிபாட்டைப் போதித்தார்கள். பிறகு வந்த சோழ பாண்டியர்கள் அவைகளைத் தொடர்ந்து செயல் முறையில் நிறுத்தினார்கள். ஆலயங்களைப் பெரிதாக்கிச் சமய போதனை செய்யப் பெரிய மண்டபங்களை நிறுவினார்கள். ஓதுவார் மூலமாகச் சமயப் பரப்புச் செய்தார்கள். தேவாரங்கள், பிரபந்தங்கள், திருவெம்பாவை, திருப்பாவை முதலிய அருட்பாக்களை நாள்தோறும் ஓதுவதற்குச் சகல வசதிகளும் செய்தார்கள். புராணங்கள் இதிகாசங்கள் ஓதுதற்கும் ஏற்பாடுகள் செய்தார்கள். இதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் தமிழரசு மறைந்த பிறகு இவைகள் அடியோடு நின்று விட்டன. தற்போது அவைகளை மீண்டும் வைக்க முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. ஆகவே வேறு வகையாகப் பிரசாரம் செய்யவேண்டும்.

ஆங்கிலப் படிப்பும் மேல்நாட்டு நாகரிகமும் வந்த பிறகு மக்கள் பழைய முறைகளை விரும்ப வில்லை. கிறித்தவர்களைப் போல உபதேசங்களையும் பிரார்த்தனைகளையும் விரும்பினார்கள். வங்காளத்தில் பிரம்ம சமாசம் தோன்றி ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை வைத்துக் கொண்டார்கள். பம்பாயில் பிரார்த்தனை சமாசம் தோன்றிற்று. பஞ்சாபில் ஆரிய சமாசம் தோன்றிற்று. இராமகிருஷ்ண சமாசம் வெகு நன்றாக வேலை செய்கிறது. தென்னாட்டில் சன்மார்க்க சங்கம் வேலை செய்கிறது. மக்களுடைய மனப்போக்கு இதனால் நன்கு புலப்படுகிறது. அப்படிப்பட்ட சமயக் கூட்டங்களுக்கே கற்றவர்கள் செல்கிறார்கள். ஆகவே கோயில் விழாக்களுக்கு நடுத்தரத்தாரும், பாமரர்களும் சென்றுவரச் சமயக் கூட்டு வழிபாட்டிற்குப் படித்தவர்களும் செல்வந்தர்களுமே செல்கிறார்கள்.

இனி பொதுமக்களுடைய மனப்போக்கை ஒட்டித்தான் நாம் சமயப் பிரசாரம் செய்ய வேண்டும். ஆலயங்களை ஒட்டியோ, தனியாகவோ பிரசார மண்டபங்களைக்கட்டி அவைகளில் வார வழிபாடு செய்யவேண்டும். இலங்கைக் கொழும்புநகர் வெள்ளவத்தையில் நடைபெறும் கூட்டு வழிபாட்டைப்போல நமது ஊர்களிலும் நடைபெற வேண்டும். ஒரு குறித்த கிழமையில் காலையோ, மாலையோ ஒரு மணி நேரம் வழிபாட்டுக் கூட்டம் நடத்த வேண்டும். கடவுள் வணக்கப் பாடல்கள், தியானம், சொற்பொழிவு, உரையாடல், ஆராதனை இவைகள் நடத்த வேண்டும். கற்றறிந்த பிரசாரகர் அம் மண்டபங்களில் வேலை செய்ய வேண்டும். ஊரார் இவற்றைப் பரிபாலிக்க வேண்டும். இம் முறையே நமது சமயங்களுக்கு ஏற்ற போற்றுதல் முறையாகும்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

கோயிலின் பெயர்	நடைபெற்ற விழாக்கள்
ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சுவாமி கோயில், திருவெண்காடு.	நவராத்திரி உற்சவம்.
,, மாயூர நாத சுவாமி கோயில், மாயூரம்.	துலா உற்சவம்.
,, சொக்கநாத சுவாமி கோயில், விருதுநகர்.	நவராத்திரி விழா.
,, பாதாள பொன்னியம்மன் கோயில், சென்னை.	,,
,, வைத்திய நாத சுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில்.	,,
,, ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோயில், திருவானைக்கா.	,,
,, அருணாசலேஸ்வரர் வரதராஜப் பெருமாள் கோயில், சென்னை.	,,

திருக்கோயில் வழிபாட்டு முறை-2

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்,
சிறுதையூர், லால்குடி.

சிவசொரூப பாவனை :

சிவாலய வழிபாட்டிற் குரிய காலக் கணக்குகளை முன்னர் அறிந்தோம். இனி பாவனை—மந்திரம்—கிரியை, என்ற மூன்றினாலும் வழிபாடு செய்ய வேண்டும், பாவனை என்பது மனத்தில் உருவகமான தூய எண்ணங்கள். மந்திரம் வாக்கினால் உச்சரித்தற்குரியது. கிரியை (செயல்)களைச் சரீரத்தால் செய்ய வேண்டும். எனவே மனம், மொழி, மெய் ஆகிய இம்மூன்றும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்கு மூறையே, பாவனை—மந்திரம்—கிரியை இம்மூன்றும் அவசியம் வேண்டுவனவாம். "மனத்திற்கு சலம்—அசலம் என இருவகை நிலையுண்டு" என்று சுப்ரபேதாகமம் சொல்லும். மனம் பொறிபுலன்களின் வழியே சஞ்சரித்து வெளித்தோற்றங்களை மனத்தில்பதித்துக்கொள்ளும்போது "சலம்" என்று பெயர் பெறும். அறிவோடு ஒன்றி அசையாது நிற்கும் மனநிலை "அசலம்" என்பதாம். மனம் இந்திரியங்களின் புறத்தோற்றங்களை ஆராய்ந்து தெளிவதற்கும்—மலை போல் அசையாமல் இருப்பதற்கும் ஆகிய இரண்டிற்குமே லக்ஷியமாக உருவம் அவசியம். மனம் உருவத்தைப்பற்றி நிற்கும். அதனால் சிந்தனை வளரும். தொல்காப்பியப் பாயிரம் உரையில் "உருவென்றது மனனுணர்வாய் நிற்குங்கருத்துப் பொருள்" என்றார் நச்சினார்க்கினியர். மனோவாசாமகோசரமான இறைவனை மனத்தால் உருவகப் படுத்திக் கொண்டால்தான் மந்திரம்—மூத்திரை — கிரியைகளினால் வழிபாடு செய்ய இயலும். ஆதலால் தான் ஸர்வவியாபியான சிவபெருமானுக்கு இப்பரந்த உலகத்தையே திருமேனியாகக்கற்பித்து அத்திருமேனியையே மனத்திற்கொண்டு ஆலய வழிபாடு செய்ய வேண்டும் என்று ஆகமம் விதித்துள்ளது.

"தத்துவம் பதம்ஸ மந்திரஞ்ச வர்ணஞ்ச
[புவனம்ததா||
அத்வாமார்கம்ஸமாக்யாதோ வ்யாபகத் வாத்
[சிவஸ்யது||
தஸ்மாதத் வாசிவஸ்யைவசரீரமிதிகல்ப்யதே||

இவ்வுலகத்தை சொல்லுலகு — பொருளுலகு என இருவகையாகக் கூறலாம். சொல்லுலகை சப்தப்பிரபஞ்சம் என்றும், பொருளுலகை அர்த்தப்பிரபஞ்சம் எனவும் வடமொழியில் கூறுவதுண்டு, சொல்லுலகம் ஒலி வடிவமாகவும், பொருளுலகம் புறக்கண்களுக்குக் காணப்படும் வண்ணம் ஒளி அல்லது ஸ்தூல உருவவடிவமாகவும் விளங்குகின்றன. சிவாகமங்கள் சொல்லுலகை வர்ணம்—பதம்—மந்திரம், என்ற மூன்றும் கூடியதாயும், பொருளுலகம், புவனம்—தத்துவம் — கலை ஆகிய இம் மூன்றும் கூடினவாகவும் சொல்லுகின்றன. ஐம்பத்தொரு எழுத்துக்களை வர்ணம் என்றும், எண்பத்தொரு பதங்களைப் பதம் எனவும், பஞ்சபிர்ம ஷடங்க மந்திரம் என்ற பதினொரு மந்திரங்களை மந்திரம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இதே போல் பொருளுலகம் 224 புவனங்களையும் முப்பத்தாறு தத்துவங்களையும், ஐந்து கலைகளையும் குறிப்பாகச் சொல்லப் பட்டுள்ளன. வர்ணங்கள் பதங்களிலும், வர்ணமும் பதமும் மந்திரங்களிலும், வர்ணம் பதம்—மந்திரம் இம்மூன்றும் புவனங்களிலும், வர்ணம் முதல் புவனம் முடிய நான்கும் தத்துவங்களிலும், வர்ணம் முதலியவற்றை உள்ளடக்கியதத்துவங்கள், ஐந்து கலைகளிலும் அடங்குவனவாம். இவ்வாறு 1. வர்ணம் 2. பதம் 3. மந்திரம் 4. புவனம், 5. தத்துவம் 6. கலை ஆகிய ஆறும் ஒன்றாகக்கூடிய உலகமே முழு உலகமாகும் என்பது சைவ சித்தாந்த நூற்றுணிபு. இம் முழு உலகில் நிறைந்துள்ள உயிர்கள் வர்ணம் முதல் கலை இறுதியாக உள்ள

வற்றை வழியாகக் கொண்டு சென்ருல் பேரறிவுப் பிழம் பாகிய இறைவனேடு இரண்டறக் கலக்கலாம் என்பது ஆகமங்களின் கருத்தாகும். ஆதலினுல்தான் வர்ணம் முதலிய ஆறும் அத்துவா (வழி) என்ற சொல்லால் வழங்கப்படுகின்றது. இவ்வாறு சொல்லுலகும்—பொருளுலகும் ஆன ஆறு அத்துவாவும் சிவ பெருமானின் அங்க அவயவங்களாக ஆகம நூல்கள் உருவகப் படுத்தியுள்ளன. அவ்வுருவகமாவது :—இவ்வாறு அத்வா மூர்த்தியாக (உலகமே உடலாக) சிவபெருமானுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திற்கு ஆதாரமான ஆகமம் அடியில் எழுதப் படுகின்றது.

"அத்வோத் தாங்கம் கலாபூர்யபுவனுத்துவா [ரோமதிருக்||
வர்ணுத்வேவத் வசோபே தோமந் திராத்வாரு [திராந்விதः||
சிரோமாம் ஸபதாத்வாது சுக்லமஜ்ஜாஸ்தி [தத்வதः|
சதாசிவஷ் ஷடத்வாத்மாதஸ்யபிராணச் [சிவஸ்மிருதः||

இவ்வாகமப் பொருளைத் தமிழில்,

"அவயவம் கலைகளாகுமாகிய புவன ரோமஞ்
சுவையுறு துவக்கு வண்ணமுதிரமந்திரமதாகுந்
தவமுறு பதநரம்புதத்துவந்தாதுவாகுஞ்
சிவமுயர் சதாசிவர்க்குச் சிறந்த ஆறுருப்புந் [தானே"

என்ற பாடலிற் காண்க.

சிவாலய பூஜையில் சதாசிவ மூர்த்தியை இச்சொருபமுடையவராக பாவனை செய்தல் வேண்டும். இன்னுமொரு வகையில் சிவாலயத்தையும் ஆறு அத்துவாக்களாகிய முழு உலகமாகவே பாவனை செய்யலாம். உயிர்கள் நிறைந்த உலகத்தை 1.நிவிர்த்திகலை 2.பிரதிஷ்டாகலை 3. வித்யாகலை 4. சாந்திகலை 5. சாந்தியதீதகலை என ஐம்பெரும் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன ஆகமங்களில். திருக்கோயிலின் முக்கிய பிராகாரங்களும் ஐ ந் து. அவை யாவன :—

"அந்தர்மண்டபமாத்யம் ஸ்யாத் அந்தர் துவாரம் [த்விதீயகம்|
மத்யஹாரம் த்ரிதீயந்து பச்சாத் மரியாதி [பித்திகம்||
மஹாமரியாதி பித்திஸ்துபஞ்சமப்பரிகீர்த்திதா:||"

இதன் பொருள் :—"1. அந்தர்மண்டபம் 2. அந்தர்துவாரம், 3. மத்யஹாரம், 4. மரியாதிபித்தி 5. மஹாமரியாதி பித்தி என்ற இவ்வைந்தும் பஞ்சப்பிராகாரம் என்று சொல்லப் படுகிறது."

கர்பகிரஹத்திற்கு முன்னுல் உள்ள மண்டபம் அந்தர்மண்டபமாகும். இதை அர்த்தமண்டபம் என்றும் கூறலாம். இதற்கடுத்து உள்ள வாயிலுடன் கூடிய மண்டபம் அந்தர் துவாரம் என்பதாம். இது மஹாமண்டபம். 1. கர்பகிரகம் 2. அந்தர் மண்டபம் 3. அந்தர் துவாரம் இம் மூன்றையும் சூழ்ந்துள்ள இடம் மத்தியஹாரம் எனப்படும். அர்த்தமண்டபம், மஹாமண்டபம் இவற்றிற்கும், நாற்புறமும் சுற்றுமதில்களுடன் கூடிய இரண்டு பிராகாரங்களுக்கும் நடுவே மாலை (ஹாரம்) போன்று அமைந்துள்ளதால் நடுப்பிரகாரத்திற்கு "மத்யஹாரம்" என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. இம் மத்யஹாரத்திற்கு வெளியே நாற்புறமும் சுற்றுச்சுவற்றுடன் கூடிய பிராகாரம் "மரியாதிபித்தி" என்று கூறப் படுகிறது. இதற்கு வெளியே சுற்று மதில்களுடன் கூடிய ஐந்தாவது வெளிப்பிராகாரம் 'மஹாமரியாதி பித்தி' என்பதாம். இவ்வாறு பஞ்சப்பிராகாரங்களுடன் கூடிய திருக்கோயிலில் 1. மஹாமரியாதிபித்தி என்ற பெரிய பிராகாரம் நிவிர்த்திகலையையும், 2. மரியாதிபித்தி என்ற உட்சுற்று பிரதிஷ்டா கலையையும், 3. மத்தியஹாரம் என்ற நடுசுற்று வித்தியாகலையையும், 4. அந்தர்துவாரம் என்ற மஹாமண்டபம் சாந்திகலையையும், 5. அந்தர் மண்டபம் என்ற அர்த்த மண்டபம் சாந்தியாதீத கலையையும் குறிக்கின்றன. சாந்தியதீத கலைக்கும் அப்பாலும் சிவபெருமான் கலாதீதராக — தத்துவாதீதராக இருக்கின்ருர் என்பதை எடுத்துக்காட்டுவது போல "சக்திபவனம்" என்ற கருவறையினுள் அல்லது கர்ப்பகிரஹம் என்ற ஸ்தூல தேகத்தினுள் சிவலிங்கவடிவம் உள்ளதாக சிவாலயங்கள் அமைந்துள்ளன. உயர்ந்த தத்துவ உண்மைகளை எடுத்துக் காட்டும் இடமாக "திருக்கோயில்" திகழ்கின்றது. இறைவன் அத்துவாதீதராக இம் முழு உலகத்திற்கு அப்பாலும் விளங்குகின்ருர் என்பதை இது காட்டுகின்றது. அத்துவாமூர்த்தியாக சிவபிரான் கூறப்படுவதால் அவ்விறைவனின் வியாபகத்

திற்கு ஓர் அளவு உண்டு என்று கருதிவிட லாகாது. ஆசனம்—மூர்த்தி — மூலம் ஆகிய இவற்றைக்கொண்டு சிவபெருமானை அர்ச்சிக்க வேண்டும் என்று சிவாகமங்களில் வற்புறுத்தப் பட்டுள்ளன. "க்ஷித்தியாதி குடிலாப்ராந்தம்—மண்முதல் நாதத்துவம்முடிய உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் சிவனுக்குரிய ஆசன (இட)மாகும். வித்தியாதேகமே (அழிவற்ற அறிவு வடிவமே) சிவபெருமானின் திருமேனியாகும். மனம் வார்த்தைகளினால் எளிதில் அறிய இயலாத சிவமே மூலமாகும். ஆறு அத்துவாக்களும் தோன்றுவதற்கு மூலமான குடிலைக்கும் அப்பாலுள்ள சிவபெருமானை அத்துவாக்களைச் சாதனமாகக்கொண்ட உயிர்கள் முப்பத்தாறு தத்துவங்களையும் படிமுறையாகக் கொண்டு இப்படிகளை ஒவ்வொன்றாகக் கடந்து சென்று அடைய வேண்டும் என்பதே ஆகமங்களின் ஆதாரக் கருத்தாகும்.

"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை
[ஏறத்தாமும்
பேணுதத்துவங்களென்னும் பெருகுசோபனம் ஏறி
ஆணையாம் சிவத்தைச்சார அணைபவர் போல
[ஐயர்
நீள்நிலைமலையை ஏறி"

என்ற பெரிய புராணப் பாடலினும் தெய்வச் சேக்கிழார் பெருமான் "தத்துவங்களென்னும் நீண்ட படிகளில் ஏறிச் சிவத்தையடைபவர் போல" கண்ணப்பநாயனார் திருக்காளத்தி நாதரைக்காண நீள்நிலைமலையை ஏறுவதாகக் குறித்தார்கள். இதனாலும் சிவபெருமான் தத்துவாதீதர் என்பதும், தத்துவங்களைச் சாதனமாகக் கொண்டே உயிர்கள் கடவுளைக்காண விழையும் என்பதும் விளக்கமாகின்றது. முழு உலகத்தின் தனிப்பகுதிகளாகிய அத்துவாக்களைச் சிவபெருமானுக்கு மூர்த்தியாக (உடலாக)க் கூறுவது உபசாரமேயாகும். சிவபிரான் நாம் வாழும் உலகெங்கும் தோன்றாத் துணையாகப் பரவியுள்ளார் என்பதையே இவ்வாறு எடுத்துக்காட்டப் பெறுகிறது. ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாரின் "அத்துவா மூர்த்தியாக" என்று தொடங்கும் பாடலின் முடிவில் வரும் "வைத்ததாம் அத்துவாவும் வடிவென" என்ற பதங்கட்கு ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் "அத்துவாவு மென்னும் மும்மை உபசார வடிவென்பது உணர்த்தி நின்றது" என்ற பொழிப்புரையை வழங்கியுள்ளார். இதனாலும் அத்துவாமூர்த்தியாக (உலகமே உடலாக) இறைவனைப் பாவனை செய்வது மனத்தின் கற்பனையே என்பது தெரிய வரும். தியான பூஜைகளின் நிமித்தமாகவே கடவுளுக்கு உருவங்களைக் கற்பிக்கவேண்டுவதாகிறது. உருவக் கற்பனை மனத்தில் தெளிவாக—உறுதியாக, இடம் பெற்றால்தான் மக்களின் சிந்தனை—பேச்சு—செயல் இவைகள் வளர்ச்சியடைந்து உலகத்தில் அறிவு பரவ இயலும். சித்தத்தைச் சிவன் பாலே வைத்த சிவனடியார்களாகிய திருமூலரடிகள், ஞான சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் போன்ற சிவஞானிகள் தம் உயரிய சிந்தனைகளாலாகிய திருமந்திரங்களை — தேவார திருவாசகங்களை இனிய இசைப்பாடல்களாகத் திருவாய் மலர்ந்தருளாவிடின் இப்பெரியோர்களின் ஞான மொழிகளை நாம் இன்று எவ்வாறு உணர இயலும்? சோமாஸ்கந்தர்—நடராஜர் முதலிய மகேஸ்வர மூர்த்திகளின் திருஉருவ அமைப்புகளைக் கூறும் தியானங்களைப் பண்டைக்காலச் சிற்பிகள் மனதிற்கொண்டு கருங்கற்களிலும் — உலோகங்களிலும் திருவுருவச் சிலைகளாக அமைத்துத் தராவிடின் அச் சிற்பிகளின் மனோபாவனைகளை இன்றுள்ள நாம் எவ்வாறு அறிய இயலும்? பேரறிவுப் பிழம்பாகிய பரம் பொருளின் பேராற்றலையும்—பெருங்கருணையையும் நன்குணர்ந்து சிவபெருமானிடம் பற்றுள்ளம் கொண்ட நன்மக்கள் தமது சிற்றறிவை அப்பேரறிவோடு தொடர்பு கொள்ளும் முறையில் சிவபெருமானின் உயரிய அருள்வடிவங்களை மனதால் சொரூப பாவனை செய்யவும், அப்பாவனைகளை வாயினால் மொழிந்தும், முத்திரைகளினால் (சைகைகளினால்) வெளியிட்டும் வழிபாடு செய்யவேண்டுவது அவசியமேயாகும். அத்துவாக்களை, தோல், நரம்பு, தாதுக்கள், கை கால் முதலிய அங்க அவயவ அமைப்புகளை இறைவனுக்கேற்றிக் கூறுவது நம் மனத்தில் சொருபபாவனை தோன்றுவதற்கேயாகும். ஆலய வழிபாடுகளைச் செய்யும் சிவார்ச்சகர் பூஜையைத் தொடங்குவதற்கு முன்னர் "சகளீகரணம்" செய்ய ஆகமம் விதித்துள்ளது. சகளீகரணம் என்பதற்கு 'உருவமாகச் செய்தல்' என்று பொருள். தமது சரீரத்தை ஆசாரியர் பஞ்சபிர்மஷடங்க மந்திரங்களால் மந்திர வடிவமாகவும், சிவதேஹத்தை பாவிப்பவராகவும் இருத்தற்கு 'கர

நியாசம் — அங்கநியாஸங்களும் கூறப்பட்டுள்ளன. சகளீகரணம் செய்யும் ஆசாரியர், 1. ஆத்மசுத்தி 2. ஸ்தானசுத்தி 3. திரவிய சுத்தி 4. மந்திர சுத்தி 5. லிங்க சுத்தி ஆகிய ஐந்து சுத்திகளையும் செய்துகொள்ளவேண்டும் என்பது ஆகமவிதி.

"யோவேத்தி பஞ்சசுத்திஸ்து ஸபூஜாம் கர்த்து மர்ஹதி॥"

"எவர் ஐவகை சுத்திகளையும் அறிந்திருப்பார்களோ அவரே பூஜை செய்வதற்கு உரிமையுடையவர்" என்று ஆகமம் அருளுகின்றது.

"பஞ்ச சுத்தி செய்து நின்னைப்
பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே."

என்று ஸ்ரீதாயுமானவ சுவாமிகளும் இதையே அருளினர். சிவசொரூப பாவனைக்கு மனத்தின் பரிசுத்தம் மிக முக்கியமானது. சிவாலய வழிபாடு செய்பவர்களின் மனத்தில் சொரூப பாவனை ஏற்பட வேண்டும் என்பதைச் சிவாகமங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன. நன்கு சிந்தித்துப் பார்த்தாலும் "பாவனையின் அவசியம் விளங்கும். பாவனைகள் உள்ளத்தில்எழுவதற்குச் சித்தாந்தக் கருத்துக்களை யுட்கொண்ட சகளீகரணம்—பஞ்சசுத்தி செய்யு முறை—பிராசாத லக்ஷணங்கள், திருவுருவங்களின் ரூபத்தியானங்கள், ஆகியவற்றை ஆலய பூஜை செய்பவர்கள் அறிந்திருப்பதோடல்லாமல் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடும் போதே உள்ளத்தை அவ்வழியே பழக்கவேண்டும். இதனுல் கோயில் வழிபாடு சிறப் பெய்தும்.

"ஆசார்யோமன ஸாத்யாத்வாசித்ருஸாபரமேஸ்[வரம்॥
சிலாமிருத்தாருசித்ரேஷு தேவதாயத்ரகல்பிதே॥
ஆகல்பிதஸ்வயம் ஜோதி: ஆத்மனே தேவ[தாஹிஸா॥
காஷ்டாதுக்னி கடேசந்திர: ஸ்வயமாவாஹயேத்[ந்த:॥
யத்தேவமர்ச்சயித்வாது தத்தேவமாத்ம[பாவனம்॥"

"ஆசாரியன் அறிவுக்கண்ணினுல் பரமேஸ்வரனைக்கண்டு மனத்தால் தியானித்துக்கொள்ளவேண்டும். கற்சிலை, மண், மரம் சித்திரங்கள் இவைகளாலாகிய உருவங்களில் கடவுளை எந்த இடத்தில் கற்பிக்கின்ருர்களோ, இவ்வாறுகற்பிக்கப்பட்ட வடிவங்களில் ஸ்வயம் ஜ்யோதியான பரமேஸ்வரன் அறிவுக்குத் தோன்றுவார். அரணிக்கட்டையைக் கடையும் போது நெருப்பு உண்டாவது போலவும்—குடத்தின் உள்ளே இருக்கும் தெளிந்த தண்ணீரில் பூர்ணசந்திரனின் பிரதி பிம்பத்தைக் காண்பது போலவும் எங்கும் நிறைந்த இறைவன் தாமாகவே எழுந்தருளுவதைக் காணலாம். "எப்பொருளில் வழிபாடு செய்தாலும் அப்பொருளில் சிவபெருமானை அறிவால் — மனஸால் பாவனை செய்யவேண்டும்" என்று காரணுகமம் அருளுகின்றது.

சிவாலய பூஜையில் ஆவாஹநம் செய்யும் போதும் இந்த பாவனை கூறப்படுகிறது. ஆவாகனம் என்பதே அழைப்பதுதான். உருவத்தோற்றங்கட்கு ஆதாரமான மனத்தைப் பிரதானமாகக் கொண்ட மக்கள் "எல்லா இடங்களிலும் வியாபித்துள்ள இறைவனை இவ்வுருவத்தின் மூலமாக எழுந்தருளிக் கருணை புரிவீராக!" என உளங்கனிந்து வேண்டுவதே ஆவாகனமாம்.

வழிபாடு செய்வோர் மணமிகு மலருடன் கூடிய கூப்பிய கரங்களை இருதயஸ்தானத்தில் வைத்துக்கொண்டும் பிராஸாத மந்திரங்களைப் படித்துக்கொண்டும், அன்பின் வளர்ச்சியான பக்தியினுல் அருவ நிலையினின்றும் இறங்கி அருள் வடிவமான சிவபிரானை நோக்கி "என் உயிர் புறக்கண்களுக்குத் தோன்ருதிருப்பது போல நீரும் அருவத் தொடர்புள்ளவராக இருந்து இப் பரந்த உலகை இயக்குகின்றீர்" என்று சமரஸ பாவனை செய்து ஸ்தூல தேகமான சக்தி பவனத்தில் நாத தத்துவத்தில் அப்படியே விந்து தத்துவத்திலும் அளவிட முடியாத ஆற்றல் நிறைந்த இறைவனைத் தியானம் செய்து அவ்வாறு முறையே சக்தி பவனத்தில் இறைவன் ஆவிர்பவித்ததாக பாவனை செய்வதே ஆவாகனமாகும்.

கிருத்வாஹ் ருத்கதமஞ்சலிஞ்ச குஸுமம்
ப்ராஸாதமந்திரம் படந்
பக்த்யா நிஷ்களகோசரஸ் ஸமரஸிபாவம்
கதஸ்ஸாதக:॥

தியாயேத் விக்ரமதஸ்து சக்திபவனே நாதேந்துர பிந்துகே
நிஷ்க்ராந்த கிரமதஸ்து சக்திபவனே ஸ்வாதேவ மாவாஹனம் ॥

எனவே இறைவனை அருவம்—அருவுருவம்—உருவம் என்ற மூன்று திருவேனி கொண்டவராகப் பாவனை செய்யவேண்டும். அருவம் என்ற நிஷ்கள ரூபத்தில் 1. சிவம், 2. சக்தி, 3. நாதம், 4. விந்து ஆகிய நான்கையும் பாவனை செய்ய வேண்டும். சகளநிஷ்களம் என்ற அருவுருவத்தில் ஆறு அத்துவாவையும் சரீரமாகக் கொண்ட சதாசிவ மூர்த்தியைச் சிவலிங்கத்தில் பாவனை செய்யவேண்டும். சோமாஸ் கந்தர்—சந்திரசேகரர்—நடராஜர் முதலிய தெய்வத்திருமேனிகளை சகளம் என்ற உருவத் தோற்றத்தில் மகேஸ்வர மூர்த்தங்களாகப் பாவனை செய்ய வேண்டும், திருக்கோயிலிலுள்ள எல்லாப் பரிவார தேவர்களும் ரூபலக்ஷணங்கள். அவர்களது நிறம், அவரவர்க்குரிய ஆயுதங்கள்—கோயிலினுள் அப் பரிவாரங்களில் அவரவர்க்குரிய இடங்கள் முதலியவைகளை ஆகமங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆதார சக்தி முதல் குடிலை முடிய உள்ள எல்லாத் தத்துவங்களின் நிறம், வடிவம், வியாப்தி முதலியனவும் தத்துவங்களில் வைகும் தத்வேஸ்வர—தத்வேஸ்வரிகளின் ஸ்வரூப லக்ஷணங்களும் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் மனத்திற் கொண்டால் பாவனை விரிவடையும். எனவே இறைவன் திருவுருவங்களையும், உயர்ந்த தத்துவ ஞானக் கருத்துக்களையும், மனத்திற் பதிந்து அடிக்கடி பாவனை செய்து சிவபெருமானை வழிபடுவோமாக!

திருக்கோயில் வழிபாடுகள் பாவனை—மந்திரம்—கிரியை என்ற மூன்றுடும் செய்யப்படுவன. இதுவரை பாவனைபற்றி அறிந்தோம். இதன்மேல் மந்திரம்பற்றி அறிவோமாக!

> "தாபரசங்கமங்க ளென்றிரண்டு
> உருவினின்று
> மாபரன்பூசை கொண்டு மன்னுயிர்க்
> கருளை வைப்பன்
> நீபரன்றன்னை நெஞ்சில் நினைவையேல்
> நிறைந்தபூசை
> ஆய் பரம்பொருளை நாளுமர்ச்சிநீ
> அன்புசெய்தே"

—சிவஞான சித்தியார்.

நிர்வாக அதிகாரிகள் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. டி. உதயராஜ்	ஸ்ரீ கூடலழகர் கோயில், மதுரை.	ஸ்ரீ கிருபாசமுத்திரப் பெருமான் கோயில், சிறுபுலியூர் மற்றும் அதைச்சேர்ந்த கோயில்களும்.
திரு. டி. ராமகிருஷ்ணன்	ஸ்ரீ நெமிலி ஆளவந்தார் அறக்கட்டளை, நெமிலி.	ஸ்ரீ பாலீஸ்வரர் கோயில், திருப்பாலைவனம், முதலியன.
திரு. ஏ. கே. ஜெகந்நாதன்	ஸ்ரீ பாலீஸ்வரர் கோயில், திருப்பாலைவனம் முதலியன.	ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், ஆண்டார் குப்பம், பொன்னேரிதாலுகா.
திரு. டி. சொக்கலிங்கம்	ஸ்ரீ பெரிய மாரியம்மன் கோயில், ஸ்ரீ வில்லி புத்தூர்.	ஸ்ரீ ராமநாத சுவாமி கோயில், திருராமேஸ்வரம், ஸ்ரீ வண்டுறைநாத சுவாமி கோயில், திருவண்டுறை மன்னார்குடி தாலுகா.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இங்ஙனம் உடையவர் கோயிலுக்கு எழுந்தருளினது முதல் பெருமாள் நியமனம் பெற்று கோவில் கார்யாதிகளிலே தலையிட்டு சீர்திருத்தம் செய்து வந்தார் என்பதைப் பார்த்தோம். சீர்கேடான எந்த நிர்வாகமும் ஒருவரால் சீர் செய்யப்படும்போது சீர்கெட்டிருந்த காலத்தில் நிர்வாகம் செய்து வந்து அதனுல் இலாபம் அடைந்த நிர்வாகஸ்தர்களுக்குச் சீர்படுத்துமவர்மீது கோபமும், பகைமையும் ஏற்படுவது இயல்பே யன்றே! அதே போன்று இங்கு உடையவர் மீதும் கோயில் பழைய நிர்வாகிகள் பலருக்குப் பகைமை ஏற்பட்டது. இதனுல் மனம் நொந்த உடையவர் திருவரங்கத்தை விட்டுத் திருவெள்ளறை ஏறப்போனுர். அங்கே இரண்டாண்டுகள் தங்கி அங்கே அழகிய மணவாளப் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஏரியும் கட்டி பங்கயச்செல்வி ஸ்ரீகார்யத்தையும் தர்சந நிர்வாகத்தையும் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். உடையவர் இழந்த கோயில் பரிஜனங்கள் மிகவும் மனம் நொந்து பெரிய பெருமாள் நியமனம் பெற்று திருவரங்கப் பெருமாள் அரையரை முன்னிட்டு உடையவரை மீண்டும் கோயிலுக்கு எழுந்தருளப் பண்ணினர். (இவ் வரலாறு ஸ்ரீரங்கம் கோயிலொழுகு என்னும் நூலில் கண்டது)

எம்பெருமானுர் திருவெள்ளறையில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் பிள்ளையுறங்காவில்லி தாசரும் அவர் மூலமாக அகளங்கநாட்டாழ்வானும் அவர் திருவடியை ஆச்ரயித்து அந்தரங்க சீடராயினர். உடையவர் மீண்டும் கோயில் நிர்வாகத்தை ஏற்றதும் சீடனுகும் முன் அரசனுக இருந்த அகளங்கநாட்டாழ்வானை நோக்கி "ஆழ்வானே! நீர் அரசனுகையாலே தர்மா தர்ம நுணுக்கங்களை அறியும் விவேகியாயும் இருப்பீர், ஆகையால் இனி நீர் நம்பெருமாளுடைய கார்யங்களில் எவ்விதக் குறையும் நேரிடாதபடி மேற்பார்வை வைத்து நடத்த வேணும்" என்று நியமித்தார். அகளங்கநாட்டாழ்வாரும் அந் நியமனத்தை ஏற்றுக் கோயில் கார்யங்களை மேற் பார்த்து வந்தார். (பிள்ளையுறங்காவில்லி தாசர், அகளங்கநாட்டாழ்வான் இவர்கள் உடையவரை ஆச்ரயித்த சுவைமிக்க வரலாறு பின்னர் அனுபந்தமாக எழுதப் பெறும்.)

ஒருநாள் உடையவர் பெரிய நம்பிகள் திருவடிகளிலே தண்டம் சமர்ப்பித்து நின்று "சுவாமீ! அடியேன் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே சேவிக்கப் பெருத இழவு தீரத் தேவரீர் திருவடிகளில் ஆச்ரயிக்கப் பெற்றேன். தேவரீர் கிருபையால் ஸ்ரீரங்கநாதன் சேவையும், அவனது கோயில் நிர்வாக கைங்கர்யமும் பெருப்பேருக அடியேனுக்குக் கிட்டியது. எனினும் தேவரீர் திருவுள்ளத்தில் உண்டான அர்த்த விசேஷங்கள் இன்னும் பிரஸாதிக்கப் பெற்றேனில்லை. தேவரீர் கிருபை கூர்ந்து அவற்றை அடியேனுக்கு அருள வேணும் என்று பிரார்த்தித்தார். பெரிய நம்பியும் அவருக்கு த்வயார்த்தத்தை விரிவாகக் கூறியருளி அதற்குரிய பிரமாணங்களையும் விளக்கிக் கூறியருளினுர். பின்னர் பெரிய நம்பிகள் தமது புத்திரனை உடையவருக்கு சிஷ்யனுகச் செய்தார். மீண்டும் பெரிய நம்பி உடையவரை நோக்கி "இராமாநுஜா! ஸ்ரீ ஆளவந்தார் உனக்கென்று சில அர்த்த விசேஷங்களை, திருக்கோஷ்டியூர் நம்பிகளிடத்திலும், பெரிய திருமலை நம்பிகளிடத்திலும், திருமலை யாண்டானிடத்திலும், திருவரங்

கப் பெருமாளரையரிடத்திலும் வைத்துப் போயி ருக்கிறார். தம் அந்திம காலத்தில் அவற்றை உனக்கு உபதேசிக்கும்படி நியமனமும் செய் திருக்கிறார். இவ்வுலகம் உய்ய நீ அவற்றை எல்லாம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்" என்று கூறினார். இம்மொழிகளை அமுதமென செவிமடுத்த உடையவர் மிகவும் உளம் மகிழ்ந்த வராய் பெரிய நம்பிகளிடம் அனுமதி பெற்று வெகு விரைவிலே திருக்கோட்டியூர் பயண மாகத் தீர்மானித்தார்.

அதன்படி உடையவரும் தம் சிஷ்ய கோடி களுடன் புடைசூழப் பொற்பல்லக்கின் மீதேறி

**"திருவரங்க நகர்நீங்கித் திருக்கோட்டி யூர்நம்பி
மருவுதிருக் கோட்டியூர் வளநகரின் திசைநோக்கி
பொருவறுஞ்சீர்ப் பாகவதர் புடைசூழ
அடையலர்கள்
கருவழியத் திருச்சின்னம் காளங்கள்
கலந்திசைப்ப"**

சென்று திருக்கோட்டியூரை அடைந்தார். அடைந்தவர் தமக்கு எதிர்ப்பட்ட "மாற்றிலி சோறிட்டுத் தேச வார்த்தை படைக்கு" மவர் களான ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்து நம்பிகள் திருமாளிகை எங்கே? என வினவினார். அவர் களும் எட்டித்தோன்றிய ஒரு கூரையைக் காட்டி "அதுவே நம்பி திருமாளிகை" என் றனர். உடையவர் அவ்விடம் தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தண்டனிட்டுக்கொண்டே சென்று அத் திருமாளிகையை அடைந்து நம்பி களை தண்டனிட்டு "அடியேனைக் கடாக்ஷித்து அறிய வேண்டிய ரஹஸ்யார்த்தங்களை அறி வித்து உய்விக்க வேண்டும் என்று பிரார்த்தித்து நின்றார். நம்பிகளும் இவருடைய ஆர்வ மிகுதியை நன்றாக அறியத் திருவுள்ளம் பற்றி,

**"சீரியன் இவனாநிற்பத்திருக் கோட்டி நம்பி
யென்னும்
தாரியல் மார்பர்நின்ற தலைவரை முகத்தை
நோக்கார்
ஆரிவர் என்னார் எவ்வூர் அமர்வது நம்பால்வந்த
காரியம் என்கொலென்னார் கண்டுகண் கண்டிலார்
போல்"
"இருந்துதந் திருவோலக்கத்து இருந்தமெய்த்
தொண்டரோடும்
திருந்துநன் மொழிகள் கூறிசிலபல கடிகைவைகிப்
பொருந்து நம்மனையுட் போனார்"**

இப்படி பல நாழிகை நின்றும் தன்னை முகம் கொடுத்தும் பாராமல் யாரென்றும்கூட வினவா மல் நம்பிகள் போக உடையவர் உள்ளம் நைந் தது. அவர் தன் செயலழிந்தவராய் மற்றோ ரிடத்தில் அன்றைய பொழுதை மிகவும் மன மறுக்கத்தோடு கழித்து மற்றைநாள் மீண்டும் போய் நம்பிகளைத் தண்டனிட்டார். அன்றும்,

**"ஒன்றும் அணுவின் துணையளவும்
மதியாதிருந்த உத்தமனும்
சென்று செறிந்த தொண்டரோடும்
திருமாளிகையில் போய்ப் புகுந்தான்"**

உடையவர் மீண்டும் மனமொடிந்தவராய்த் தம் மிடம் திரும்பினார். இப்படியே சில நாட்கள் நிகழ திருக்கோட்டி நம்பி இவரை ஏறெடுத்தும் பாராமல் கழியவே உடையவர் தொண்டர்க ளோடு மீண்டு,

**"வண்டினமுரலும் சோலைமதிள் திருவரங்கம்
[புக்கார்"
"தெருளு மிளையாழ்வார்க்கு முனந்திருமால்
[பார்த்தன் திருச்செவியில்
அருளுஞ் சரமச்சுலோகத்துக் கதிகாரம் போதா
[தென்னப்
பொருளின் தொகைசேர் திருக்கோட்டி நம்பி
[யிகழப் போந்தனன் போய்
இருள்சேரு லகத்ததிகாரத்தெல்லை காண்பார்
[இனியெவரே!"**

என்று அங்கலாய்க்கிறார் வடிவழகிய நம்பிதாசர்.

திருவரங்கம் சேர்ந்த உடையவர் திரு வுள்ளம் அமைதியின்றித் தத்தளித்தது. நம்பி களின் பராமுகத்துக்கு நொந்து தாம் திரும்பி யது சரிதானா என்கிற ஐயமும் அவர் மனத்தே நிகழ்ந்தது. அவ்வையத்தோடே "வித்துவக் கோட்டம்மா நீ வேண்டாயே யாயிடினும் மற் றாரும் பற்றிலேன்" என்ற குலசேகரர் பாசுரம் அவர் உள்ளத்தே ஓடியது. அதுவே அவர் ஐயத்துக்கும் விடையளித்தது. எனவே அவர் பலதடவை திருக்கோட்டியூர்சென்று நம்பியை சேவித்து வந்து கொண்டிருந்தார். ஒருக்கால் அரங்கன் திருநாள் சேவிக்க நம்பிகள், திரு வரங்கம் எழுந்தருளினார்.

(தொடரும்)

பன்னிரண்டாந் திருமுறையில் எங்கும் இன்பம்

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஒரு கணப்பொழுதேனும் புலனொன் றித் தன்வயமிழந்து மகிழ்வது யாது— அது இன்பமெனத் தகும். அவ் வின்பம் பலவகையான் எய்தற் பாலது. தனது நெடுநாளைய விருப்பம் அரிது முயன்று பெறற்பாலது; இறுதிவரை கிடைக்கா மலே அது போயினும் போகும். அப் பொருள் தனது முயற்சி சிறிது மின்றியே கைவரப் பெறுவானாயின் அவன் மனத் தில் நிகழ்வது ஓர் இன்பம். அணியிலக் கணமுடையார் இன்ப அணிக்குக் கூறும் இலக்கணமும் இது வே. வள்ளுவனார் அதனை உடற்கின்பம், செவிக்கின்பம், அறத்தான்வரும் இன்பம், இன்னாமை யாகிய இன்பம், விழையத் தகாத இன் பம் எனப் பலவகைப் படுத்துக் கூறுவர்.

அவ்வின்பம் பற்றிப் பலரும் பல கூறு வர். அவற்றை யெல்லாம் விட்டு நமது மணிவாசகத் பெருமானார் கூறும் துறைக்கு வருவோம். அவர் கூறுவது : இன்பத்தின் தரங் குறித்தால் பல ஏணிப் படிகளாக அதனின் மற்றது மிக்க இன் பம். மற்றதிற் பிறிதொன்று மிக மிக இன்பம் என இப்படியே பலதரத்தில் உயர்ந்து கொண்டே போகும். அத் தகைய பல நிலைமைகளையெலாம் கடந்து உயர்ந்த இன்பம்; ஈறிலாத இன்பம் — அவ்வின்ப வடிவே இறைவனின் வடிவம் என்பார் "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே" என்கிறார். இனி அவ் வின்பத் துறையை யடைதற்கு வழி "அன்புநெறி" யொன்றே யென்பார் "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே யென்னுடை யன்பே" என்றுங் கூறினர். ஆகவே அன்பு, அதனால் அடையலாகும் இன்பு, அவ்வின்ப மய மான இறை இம் முப்பொருளும் ஒன்றி னொன்று பிரிக்கப்படாத பொருள்களாம். இதனையே நாம் எடுத்துக்கொண்ட பன் னிரண்டாம் திருமுறையிற் காண்கின் றோம். 'இறவாத இன்ப அன்பு வேண் டிப் பின் வேண்டுகின்றார்—உன்னை மற வாமை வேண்டும்' (காரைக்காலம்மை யார் புராணம்) என்பதாம்.

இங்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு, பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் நாயனார் திருக்கடைக் காப்புப் போலத் திருவாய் மலர்ந்தருளிய பாசுரத்தில்,

"என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"

என்பதில் உள்ளது. இங்கே '**என்று மின்பம்**' என்பது "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பம்" என்ற தோடும்; 'இறவாத இன்பம்' என்ப தோடும் ஒப்பு நோக்கத் தக்கது. மன்று ளார் அடியார் அன்பர்கள் என்று மின்பம் பெருகுமியல்பினோடு ஒன்று காதலித்துள் ளமும் ஓங்கும் வண்ணம் வான்புகழ் பெற் றவர்கள். அவர்கள் புகழ் உலகெலாம் நிலவி எங்கும் நின்றது. பன்னிரண்டாம் திருமுறையில் எங்கும் இன்பம் அன்பரா கிய அடியார் புகழோடு இணைந்து கிடக் கிறது.

இன்னது நேருமென் றெதிர்பாராத நிலையில் எய்துவது பெரிய இன்பமாம்.

திருவெண்ணெய் நல்லூர்க்கு வேண்டா வெறுப்பாய் ஐயரைத் தொடர்ந்துசென்ற நம்பியாரூரர்,

'என்றெழும் ஓசை கேளா ஈன்றஆன்
கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர
ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை
தலைமேல் ஆக
மன்றுளீர் செயலோ வந்து வலியஆட்
கொண்ட தென்றார்'

(தடுத்தாட்கொண்ட புராணம் செய்யுள் 68)

இங்கே அன்பு, அதன் வழித்தாகிய இன்பம், அவ்வின்பவடிவான இறைவன் மூன்றும் ஒரே மயமாகத் தோன்றுவதைக் காண்மின்.

அவ்வாறே இன்னது நேருமென்றறியாது திருவதிகையில் வைகறையில் தமக்கையாரைத் தொடர்ந்து சென்ற நாவரசர் "முன்னின்ற தெருட்சி மருட்சியினால் முதல்வன் கருணைக் கடல் மூழ்கிய போது" எய்தியதும் பெரிய இன்பம்.

இவ்வாறே தந்தையாரோடு பிரமதீர்த்தக்கரை யடைந்த திருஞான சம்பந்தப் பெருமான் இன்னது நேருமென்றறியாது,

'எண்ணரிய சிவஞானத் தின்னமுதங்
குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை
எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற்
கிண்ணமளித்
தண்ணலைஅங் கழுகைதீர்த் தங்கணனார்
அருள்புரிந்த' பொழுது,

(திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம் செய்யுள் 63)

அடைந்தது பெரும் பேரின்பமே யாகும். இதுபோலப் பன்னிரண்டாந் திருமுறையில் எதிர்பாராத வகையில் எய்தக் காண்பது எங்கும் இன்பமே.

1. இளமுலைமாதர் வளமை துறந்த போதும் (திருநீலகண்டர்)
2. பெற்ற அடைக்கலப் பொருளைக் காணாத இடத்தும் (அமர்நீதியார்)
3. மணமகள் கூந்தல் களைந்த இடத்தும் (மானக்கஞ்சாறர்)
4. தந்தை தாளைத் தடிந்த இடத்தும் (சண்டேசுர நாயனார்)
5. பூக்கொளும் மாதர் மூக்கினையும் கையையும் அரிந்த இடத்தும் (செருத்துணையார்)
6. கண்ணைத் தோண்டிய இடத்தும் (கண்ணப்ப நாயனார்)
7. குலத்துக்கு ஒருமகன் என்பதறிந்தும் அவனைக் கொலை செய்த இடத்தும் (திருவாரூர்ச்சிறப்பு)
8. பச்சிளங் குழவியை யறுத்துக் கறி செய்த இடத்தும் (சிறுத்தொண்ட நாயனார்)
9. சிவனைத் தூதுபோக்கினவன் முகத்தில் விழிப்பதா? என்று தற்கொலை செய்த விடத்தும் (ஏயர்கோன் கலிக்காமர்)
10. பாலகன் பாம்பால் உயிர் துறந்த இடத்தும் (அப்பூதியடிகளார்)

இன்னும் பிற இடங்களிலும் இவையெல்லாம் துன்பம் காணற் குரிய இடமன்றோ? இவ்விடத்தும் இன்பமேகாணப் படுகிறது. அவ்வின்ப அன்பின் பெருக்கால் விளையும் இன்பம், இன்ப வடிவினனாகிய இறைவனோடு எழும் இன்பம்.

ஆகவே பன்னிரண்டாந் திருமுறையில் எங்கும் இன்பம் என்பது, இன்பம் விளையும் நிலத்தன்றித் துன்பம் விளையும் நிலத்தினும் ஆகிய எல்லா இடங்களிலும் இன்ப நிகழ்ச்சி காண்கின்றோமாகலின் எங்கும் இன்பமே. அவ் வின்பமும் மறுகணத்து அழிவதாகிய இன்பம் அன்று. என்றும் நிலைப்பது மட்டும் அன்று. பெருகுவது. ஆகவே முடிவாகக் கூறுவது என்னிரண்டாந் திருமுறையில் காண்பது எங்கும் இன்பம். அதுமட்டுமல்ல அது என்றும் பெருகி வளரும் இன்பம் என்பது சேக்கிழார் பெருமான் கண்ட முடிவு. ✻

ஸ்ரீ வடபழநி ஆண்டவர் தேவஸ்தானம்

ஸ்ரீ பழநியாண்டவர், உற்சவர்

செய்யூர்க் கல்வெட்டுக்கள் 3

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனூர், M.A., M.O.L., Ph.D.

சிறப்புச் செய்திகள் :

(1) **அரசியல் அலுவலர் :** குறிப்பிட்ட ஓர் அரசனிடம் பணி செய்த உயர் அலுவலர் அவன் பெயரையோ அவன் முன்னோன் பெயரையோ தம் பெயருடன் சேர்த்து வைத்துக் கொள்ளுதல் மரபு. இந்த உண்மையைப் பல கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. முதலாம் இராசராசனின் சிறிய தந்தையான உத்தம சோழனுக்கு **மதுராந்தகன்** என்று ஒரு பெயர் வழங்கியது. அப் பெயரால் ஏற்பட்டதே மதுராந்தகம் என்னும் ஊர். அப் பெயரை வீர ராசேந்திர சோழன் காலத்துச் சேனதிபதி நயபாலன் என்பவன் வைத்துக் கொண்டான். அவனுக்கு இராசராசன் என்ற பெயரும் இருந்தது. (430-1902) விக்கிரம சோழன் காலத்தில் இராசாதிராச வளவதரையன் என்ற அதிகாரி செய்யூரில் இருந்தான் (438-1902). இரண்டாம் இராசராசன் காலத்தில் செம்பியன் வளவதரையன் என்ற அரசியலதிகாரி செய்யூரில் இருந்தான் (439-1902). இராஜகம்பீரன் என்ற விருதுப் பெயர் வீர ராசேந்திரனுக்கு வழங்கியது. இரண்டாம் இராசராசன் காலத்தில் செய்யூரிலிருந்தஅதிகாரி திரையன் மதுராந்தக தேவனை இராஜ கம்பீர வளவதரையன் எனப் பெயர் பெற்றவன்; மற்றொருவன் கங்கை கொண்டானை கரிகால சோழன் வீரையன் என்பவன். கங்கை கொண்டான் என்பது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். செம்பியன் என்பது சோழர்க்குரிய பொதுப் பெயர்; மற்றொருவன் உத்தம சோழ வளவத்தரையன் என்பவன். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இராசாதிராசன் வளவதரையன், விக்கிரம சோழ வளவதரையன் என்ற அதிகாரிகள் இருவர் செய்யூரில் இருந்தனர் (444-1902).

(2) **மதுராந்தக விண்ணகர் :** செய்யூரிலிருந்த பெருமாள் கோயில் மதுராந்தக விண்ணகர் எனப்பட்டது (445-1902). மதுராந்தகன் என்ற பெயர் மேலே கூறப்பட்ட உத்தம சோழனுக்குச் சிறப்பாக வழங்கியது. எனவே, அப்பெருமாள் கோவில் அவனுல் எடுப்பிக்கப் பட்டது என்று கொள்வது பொருத்தமாகும்.

(3) **மாராயன் :** சேனபதி மாராயன் நயபாலன் எனவரும் தொடரிலுள்ள 'மாராயன்' என்பது தமிழ் வேந்தர் வீரர்க்கு வழங்கி வந்த சிறப்புப்பட்டமாகும்.

" மாராயம் பெற்ற நெடு மொழியாலும் " என்பது தொல்காப்பியம். மிகச் சிறந்த போர் வீரனுக்கே இப்பட்டம் வழங்கப்பட்டது. மாராயம் என்ற பட்டம் பெற்றவன் மாராயன் எனப் பட்டான். அரசன் மனைவி அரசி எனப்பட்டாற் போல மாராயன் மனைவி மாராசி எனப் பட்டாள். இச் சொல் வழக்கு இன்னும் தமிழகத்தில் இருந்து வருகிறது.

(4) **நாய்ச்சி, உடைச்சி :** பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் சிவபெருமானுக்கு நாயனர் என்ற பெயர் வழக்கில் இருந்தமை கல்வெட்டுக்களால் அறியலாம். நாயன்+ஆர் நாயனர். 'ஆர்' என்பது மரியாதைப் பன்மை விகுதி. நாயன் மனைவி நாய்ச்சி. நாய்ச்சி+ஆர். நாய்ச்சியார். நாய்ச்சியார் என்பது காலப் போக்கில் 'நாச்சியார்' என வழங்கலாயிற்று (431-1902). குடந்தைக்கு அருகில் 'நாய்ச்சியார் கோயில்' என்னும் ஊர் இருத்தல் இங்கு நினைக்கத்தகும். நெற்குப்பை உடைச்சி அருந்தவம் செய்தாள் என்பது ஒருத்தியின் பெயர் (436-1902). நாயன் மனைவி நாய்ச்சி எனப் பட்டாற் போல உடையான் மனைவி உடைச்சி எனப்பட்டாள். 'உடையார்' என்பது சிவபெருமானுக்கு வழங்கி வந்த பெயர்களுள் ஒன்று.

(5) **வெள்ளாளன் :** வன்மீக நாதர் கோயிலுக்கு அறம் செய்தவருள் செய்யூரைச் சேர்ந்த

வெள்ளாளன் ஒருவன் (437-1902). வெள் ளத்தை ஆள்பவன் வெள்ளாளன் எனப்பெயர் பெற்றான். வெள்ளம்—நீர். மழைநீரைக் குளங் களிலும் ஏரிகளிலும் அடக்கி வேண்டும் போது வாய்க்கால் வழியே வயல்களுக்குப் பாய்ச்சி வந்தவன் (வெள்ளத்தை அடக்கி ஆண்டவன்) வெள்ளாளன் எனப் பட்டான். இவனுக்கே காராளன், கார்காத்தான், கொண்டல் கட்டி என்னும் வேறு பெயர்களும் இதே பொருளில் காலப்போக்கில் வழங்கலாயின' (6) திரையன்: திரையன் என்பது சங்ககாலத்தில் தொண்டை நாட்டை ஆண்டுவந்த அரசமரபினரைக் குறித்தது. அக்காலத்தில் கூடூரை அடுத்த பவத்திரி என்னும் நகரைத் திரையன் என் பவனும் காஞ்சியை இளந்திரையன் என் பவனும் ஆண்டு வந்தனர் என்பது சங்க நூல் களால் தெரிகிறது. அந்த அரச மரபு சங்க காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் ஆண்ட தாகத் தெரியவில்லை. ஆயின், செய்யூரில் மட்டும் திரையன் என்ற பட்டம் பெற்ற பலர் சோழர் காலத்தில் இருந்தனர் என்பதைச் செய்யூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திரையன் தாங்கி மாந்துறை நம்பி திரையன் மாதேவடிகள், திரையன் செம்பியன் வளவதரையன், திரையன் மதுராந்தக தேவனுன இராஜ கம்பீர வளவதரையன், திரையன் உத்தமசோழ வளவதரையன் என் பவர் அவ்வதிகாரிகளாவர். இவர் அனைவரும் சோழ அரசாங்கத்தின் உயர் அலுவலராவர். பல்லவர் மரபைச் சேர்ந்த பலர் சோழ அரசாங் கத்தில் பணியாற்றியது போலவே சங்ககாலத் திரையர் மரபினரும் சோழர் அரசாங்கத்தில் பணியாற்றினர் என்பதை இப்பெயர்கள் உணர்த்துகின்றன. கல்வெட்டுகள் உணர்த் தும் இப்பெயர்கள் ஆராய்ச்சியாளர்க்குச் சுவை தருவனவாகும்.

(7) ஒற்றி: கொண்டான், ஒற்றி கொண் டாள் என்ற பெயர்கள் கல்வெட்டில் காணப் படுகின்றன (438, 440-1902). ஒற்றி என்னும் சொல்லே இக்காலத்தில் 'ஒத்தி' என்று வழங்கு கிறது. நிலம் ஒத்தி வாங்கினுன், வீடு ஒத்தி வாங்கினுன் என்னும் இக்கால வழக்கினை நோக்குக ஒற்றி கொண்டான், ஒற்றி கொண் டாள் என்ற பெயர்கள்' அவர்கள் நிலத்தையோ வீட்டையோ அளத்தையோ ஒற்றிக் கொண்ட தால் வந்த பெயர்களாகும். ஒற்றியூர் என்னும் பெயருண்மையும் நோக்கத் தக்கது.

(8) சீயாறு: சீயாறு பட்டன் என்பது ஓர் அர்ச்சகனின் பெயர் (441-1902). ஐயாறு என்பது திருவையாறு என்னும் தலத்தின் பெய ராகும் (அங்குள்ள சிவபெருமானுக்கு ஐயா றப்பன் என்பது பெயராகும்). அத்தகைய பெயராகச் சீயாறு என்பது இருக்கலாம். செய்யூர் பகுதியில் பிறந்தவர் இன்றும் சீயாழன் என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். இது 'சீயாறன்' என்னும் பெயரின் திரிபெனக் கொள்ளலாம்.

(9) அளங்கள்: தொண்டை நாட்டில் இப்பொழுது கோவளம் பகுதியிலும் செய்யூர் சூணாம்பேடு ஆகிய பகுதிகளிலும் உப்பெடுக் கப்படுகிறது. ஆயின், சோழர் காலத்தில் செய்யூரைச் சேர்ந்த கடற்கரைப் பகுதியில் மட்டுமே உப்பு எடுக்கப்பட்டது என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அங்கு உப்பளங்கள் 90 இருந்தன. அவற்றில் சில வற்றின் பெயர்கள் மட்டுமே கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. அவை பெரும்பாடி அளம், தேவகள் சுந்தரப் பேரளம், ஒற்றி கொண்டாள் அளம், வேளூர் அளம், வடமுட் டைக்காவளம், தென்முட்டைக்காவளம், வடக் கில் அளம், தெற்கில் தாங்குவான் அளம், கங்கைகொண்ட சோழப் பேரளம் என்பன (439, 440, 445-1902).

(10) அருமொழி ஈசுவரம்: அருள் மொழித்தேவன் என்பது முதலாம் இராசராச சோழனது இயற்பெயர். 'அருள் மொழி' என்பது காலப்போக்கில் 'அருமொழி' என்று குறைந்து வழங்கப்பட்டது. அருள் மொழி என்பனவனுல் எடுப்பிக்கப்பட்ட சிவன் கோவில் அருமொழி ஈசுவரம் எனப்பட்டது.

அர்ச்சகர் பெயர்கள்

செய்யூர்ச் சிவன் கோவில்களில் பணி யாற்றிய அர்ச்சகர் பெயர்கள் கவனிக்கத் தக்கவை. அவை—கூத்தப்பட்டன், கம்பன் திண்டி, தாங்கினுன் பட்டன், கங்காதர பட்டன், பன்மாகேசுவர பட்டன், சீயாறு தேவ பட்டன், மனவாசகம் கடந்தான், கடம்பாந் தாங்குவான் பட்டன், தழுவக் குழைந்தான் செல்வ பட்டன், ஆழ்வார் செல்வமாமுனி, சூரியன் கம்பன், மாதவன் கம்பன் சடையன் சிவகதி, கம்பன் தேவன், கம்பன் உய்ய வந்தான், குனிக்கும் பிரான் என்பன.

அழகு வழிபாடு

பேராசிரியர். திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A.,B.L.,M.O.L., அண்ணுமலைப் பல்கலைக் கழகம்*

ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கின்ருன். உள்ள பொருள்களுக்குள் எல்லாம் உள்ளே ஒளிர்கின்ருன். உள்ளது எல்லாம் அவனே; என்றும் அழியாதவன் அவனே. அப்படியானுல் மாறுபாடு ஒன்றும் தோன்ருமல் எல்லாப் பொருள்களின் இடையேயும் முரண்பாடோ, சீர்கேடோ இருப்பதற்கு இல்லை. ஓர் ஒருமைப்பாடு எங்கும் தோன்றவேண்டும். அதனைக் காண ஒரு ஞானக்கண் வேண்டும்; அறிவின் அமைதி அது. ஆண்டவன் அதனுல் எல்லையில்லா அறிவாகவும் விளங்குகின்ருன். இந்த அறிவும் அழியாமையும் ஒரு சீர் அமைப்பின் முழு நிலையாகத் தோன்றும் பொழுது "துன்பம் இல்லை இன்பமே எந்நாளும்" ஆதலின் ஆண்டவன் இன்ப வடிவாகவும் இருக்கின்ருன். இப்படி அனைத்தையும் ஒன்று ஆக்கி அவற்றிடையேயும் சீர்கேடு இல்லாமல் அறிவு விளக்காகவும், இன்பக் காட்சியாகவும் தோன்றுகின்ற நிலையினையே அழகு என்று பாவாணர்களும், பிறகலைஞர்களும் உணர்ந்து, நம்மையும் உணரச் செய்கிருர்கள். கடவுளுக்கு முருகு என்ற தமிழ்ப் பெயர் அதனுலேயே எழுந்தது.

அப்பாலுக்கு அப்பால் கடந்து நிற்கின்ற அப்பொருள் அதனுல் கடவுளாய் இருத்தலோடு நமக்குள்ளேயும் மட்டுமன்றி ஒவ்வொரு பொருள்களுக்குள்ளேயும் இயங்கிக் கொண்டிருக்கும் இயவுளாகவும் விளங்குகின்ற இன்ப அன்பின் அழியா அறிவு விளக்கமே அழகெனும் முருகு ஆகும். இது நல்லது ஆகும். நல்லதற்கு எல்லாம் ஊற்று இதுவே ஆகும். சத்து சித்து ஆனந்தம் என்றும், சத்தியம் ஞானம் சிவம் என்றும் விளங்குகிற சுந்தரமாகவும் விளங்குகிறது. ஆண்டவனைச் சொக்கன் என்றும், முருகன் என்றும், சுந்தரன் என்றும், அழகன் என்றும், அழகப்பன் என்றும்; சௌந்தரராஜன் என்றும் பெயர் இட்டு அழைப்பது இதனுலே ஆம். அழகின் உண்மையையும் நுண்மையையும் அறிந்தால் அழகின் காட்சி ஆண்டவன்காட்சியாக விளங்கும்.

பிற இடத்தே குவியாத மனம் எல்லாம் அழகின் இடத்தே குவிந்து விடுகிறது. எங்கும் இல்லாத கவர்ச்சி அழகில் உண்டு. அதனுல் ஆண்டவனை அழகு வடிவமாக வழிபடுவது சிறந்தது என்றே பலவகையான அழகிய திருமேனிகளைச் சிற்பப் பெருங்காட்சியாளர் கண்டு அமைக்க அவற்றைப் பல திருமேனிகளாகக் கண்டு மனம் உருகி நிற்கிருேம்; வழிபடுகிருேம்; வாழ்த்துகிருேம்; வணங்குகிருேம். கூத்தப் பெருமான் கோலத்தைக் கண்டு மேனுட்டாரும் கருத்தைப் பறிகொடுத்துத் தம்மை மறந்து அதன் எதிரே நிற்கக் காண்கிருேம். ஆண்டவன் இவ்வாறு அழகின் இடையே அவதாரம் செய்கின்ருன் என்று உண்மையை

செய்யூர்க் கல்வெட்டுக்கள்-3 ... ...

இவற்றுள் கம்பன் என்பது கவனிக்கத் தக்கது. அது 'ஏகம்பன் என்பதன் மரூஉ ஆக இருக்கலாம். இப்பெயர்கள் இக்கால அருச்சகருக்கு இல்லை என்பது கவனிக்கத்தகும்

மக்கட்பெயர்கள்

நயபாலன், அமுதவல்லி, அருந்தவம் செய்தாள், கோதை, உய்யவந்தாள், தேவர் கண்டன், கங்காதரன், பன்மாகேசுவரன், திருச்சிற்றம்பலம் உடையான், வீரையன், ஆதிச்சதேவன், தில்லைநாயகன், அரிந்தமன், திருநீலகண்டன், சடையன் முதலியன. ★

ஆழ்வார்களின் வழியே வந்த இராமாநுசர் நன்கு உணர்ந்தார். திருமேனிகளின் அழகிலே ஆண்டவன் எளிதில் காட்சி தருகிறான். இதனைக் கண்டு தம்மை மறந்து ஆழ்வார்கள் போற்றினார்கள். இதனை அர்ச்சையில் அவதாரம், அதாவது அர்ச்சாவதாரம் என்று விளக்குவார்கள். எங்கும் நிறைந்திருக்கின்ற ஆண்டவனை அந்த அழகிலேயும் கண்டு களிக்கலாம். ஆனால் அழகு என்று நம் மனம் உருகுவதில் கண்டு களிப்பது எளிது. அங்கு எங்கும் நிறைந்த நிலைமட்டும் தோன்றாமல் கடவுளின் நுட்பமான அழகும் அங்கு தோன்றுவதால், அக்காட்சி கடவுள் காட்சியாகவே முழுவதும் சிறக்கின்றது. கண்ணிற்கு எட்டாத பொருள் இவ்வாறு நம்மைக் காண, நம் கண் காண, கண்டு அருள் தர, எங்கும் அழகாய் விளங்குகிறது. இதுவே அதன் அருளின் பெருமை ஆகும். இவ்வாறு நம்மை நல்வழிப்படுத்துவது என்பதே நோக்கமாக கொண்டு, நம் தாயைவிட இனிய ஆண்டவன் இவ்வாறு அருள் புரிவதற்கு ஒரு சிறந்த வழியைக் கண்டு விடுகின்றான்.

எனவே அழகில் அருமையின் அருமையும், இனிமையின் இனிமையும் உண்டு. இந்த அழகுப் பொருள்கள் எடுப்பார் கைப்பிள்ளை ஆக அமைகின்றன அன்றோ! அப்பாலுக்கு அப்பாலான அந்த அழகு நம்மை நாடி நம்மை நம்பி வாழ்கிற இந்த நிலைமையை என்னென்பது: கண்டால் அழகு; காணாதுபோனால் அழகு ஏது? எனவே கண்டாரையும் நாடி இருக்கின்றது காட்சி. 'என் கையில் கிண்ணம் என்று அல்லாது கருதேன்' என இதனாலேயே அடியார்கள் வீறுப்புடன் பாடுகின்றார்கள் இந்த அழகின் எளிமையை அறிந்த திருமங்கை மன்னன் இந்த அழகு வழிபாட்டினைவிட்டு வானத்தைக் கீறிக் கதிரவனைத் துளைத்துக் கொண்டு மேல் உலகம் சென்று அழியா வாழ்வு பெறுகின்ற அருமையிலும் அருமையான வழிபாட்டை எண்ணுவானேன் என்று பாடுகிறார். ஆரா அமுதம், என்றும் இன்பம் தர எதிரே அழகாய் விளங்க அதைவிட்டுக் கண்ணாலோ மனத்தாலோ காணவோ அறியவோ முடியாததைப் பற்றி, எண்ணுவதோ அழகு என்கிறார்!

இதனைக் கலைஞர்களும் உணர்ந்துள்ளார்கள். எங்கும் இந்த அழகு விளங்குவதனைச் சிற்சில கோணங்களிலிருந்து பார்க்கும் பொழுது எல்லோருக்கும் மிக எளிதாக அந்த அழகு தோன்றுவதனை உணர்கிறார்கள். அந்தக் கோணத்திலிருந்து கண்டு தாமும் அனுபவித்து அந்தக் கோணத்திலே நம்மையும் நிறுத்தி அதனை அனுபவிக்கச்செய்கின்றார்கள் கலைஞர்கள். எனவே, கலையனுபவம் முடிவில் கடவுள் அனுபவமாகவே இருத்தல்கூடும். "ரசானுபவம், பிரம்மானுபவம்" என்று விளக்கும் ஆனந்தவர்த்தரும் இந்த உண்மையைத்தான் விளக்குகிறார். தமிழ் நாட்டில் ஆழ்வார்களின் பாடல்களிலும், சைவ அடியார்களின் பாடல்களிலும், தமிழரது நல்லகாலம், இந்த உண்மையை எளிதில் அறிய முடிகிறது. நம்முடைய கோபுரங்களைக்கண்டு மகிழ்ந்து நிற்கின்ற போதும், திருமேனிக் கோலங்களை வணங்கி நிற்கும்போதும், கோயில் ஓவியங்களையோ அணிக்கோலம், உடைக் கோலம் முதலியவற்றையோ கண்டு வியக்கும் போதும், அங்கு அடியாருக்கு வழங்கப்பெறும் இன்பப் பொருள்களை உண்டு சுவைக்கும் போதும், இந்தக் கடவுள்-இன்பம் நம்முடைய ஐம்புலப் பேரின்பம் ஆகி மனத்தையும் தூய்மை ஆக்கி ஞானக் கடவுட் காட்சியில் போய் நாம் மூழ்த்தக் காண்கிறோம்.

எனவே பெண்ணின் அழகைப் பாடும்போதும் பெரும் பாவாணர்கள் கடவுளின் அழகுக் காட்சி அனுபவத்தையே பாடுகின்றார்கள் என்று உணர்தல் வேண்டும். அழகு என்ற கடவுள் வழிபாடு, பாவாணர்களின் சமயம் ஆகும். இந்தக் கண்கொண்டு நாம் பாவாணரது அழகுப் படைப்புக்களையே அழகின் திருக்கோயிலாகக் கொண்டு அங்கு வீற்றிருக்கும் அழகுக் கடவுளை வழிபடுவதும் ஒரு சிறந்த கடவுள் வழிபாடே ஆம். சங்க காலத்திலிருந்து வளர்ந்துவரும் இந்த வழிபாட்டை ஆராய்வது இன்பந்தருவது ஆகும். ❋

சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T., காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

எட்டாஞ் சூத்திரம், நான்காம் அதிகரணம்.

முன்னுரை :

பிறப்பு நிலையில் ஆன்மா இந்திரியம் முதலிய தத்துவங்களைச் சார்ந்து உலகப் பொருள்களை அறிந்து வருதலின், அவற்றின் இயல்பையே தன்னியல்பு என மயங்கி உணர்ந்து வரும்; தத்துவங்களின் இயல்பு இது, இது எனக்கண்டு, தன்னை அவற்றின் வேறு என உணரும்போது அவ்வான்மா அவ்வுணர்வு வாயிலாகப் பாசங்களின் நீங்கப் பெறுதலின், அந்நிலையில் அது முதற் பொருளின் அருளாற் றலின் வயப்பட்டு முதல் வனுக்கு அடிமை ஆகும்—என்னும் கருத்து முன் அதிகரணத்து இறுதியில் தெரிவிக்கப்பட்டது.

அவ்விடத்துப் பேதவாதசைவர் முதலாயினோர் பின்வருமாறு தடை நிகழ்த்துவர் :—"பொருள் அல்லவற்றைப் பொருளென் றுணரும்—மருளான் ஆம் மாணாப் பிறப்பு" எனத் திருவள்ளுவர் கூறுதலின், ஆன்மாத் தன்னைத் தத்துவங்களின் வேறு எனக் காண்டலே மெய்யுணர்வு நிலை; தத்துவங்களின் நீங்கிய நிலையில் ஆன்மாவிற்குச் செயல் ஒன்றும் இன்மையின், அங்கு முதல்வனுக்கு அடிமையாம் என்றது பொருந்தாது என்பர். இத்தடைக்கு விடை கூற எழுவது நான்காம் அதிகரணம் :

1. சூத்திரப் பகுதி :—"விட்டு—அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே."(ஆன்மாத் தத்துவங்களின் நீங்கி முதல்வன் திருவடியை ஒன்றுந் தன்மையின் அணையும்—என்றபடி).

2. வார்த்திகம்

"இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல்வன் சீபாதத்தை அணையும் என்றது, ஊசல் கயிற்றுல் தாய்தரையே ஆம் துணையான்."

விளக்கம் :

ஊசற்பலகையில் இருந்து ஆடுவோன் அப் பலகையினையும், அதை இணைத்து நிற்கும் கயிற்றினையுமே தனக்கு ஆதாரம் எனக் கொள்வான். ஆயினும், உண்மையால் நோக்கும்போது, ஆடுவோனுக்கும் ஊசற் பலகைக்கும், கயிற்றிற்கும் பரம ஆதாரமாய் நிலைத்துள்ளது நிலமே ஆகும். ஆதலால், ஊசலின் கயிறு அற்றபோது, ஆடினோனுக்கு அங்கு நிலைத்துள்ள சார்பாய் உடன் நின்று உதவுவது தரையேயாம். இவ்வுவமையின் வைத்து மெய்யுணர்வுநிலைக்கண் நிகழும்நிகழ்ச்சியை உணர்தல் வேண்டும். பிறப்பு வீடு என்னும் இரு நிலையினும் ஆன்மாக்களுக்கு முடிநிலைச் சார்பாய் (பரமதாரகமாய்) நிலைத்துள்ள பொருள் முதல்வனே ஆவன். ஆன்மா தத்துவங்களைத் தனக்கு வேறு எனக்கண்டு, அவற்றைப் புணராமையே பாசநீக்கம் எனப் படும். இது ஊசற்கயிறு அறுவது போல்வது. கயிறற்றபோது பலகையும் பலகை மேல் இருந்து ஆடினவனும் தரையைச் சார்தல் போல, பாசத்தின் நீங்கிய ஆன்மாவும் முதல்வன் சார்பையே சார்பாகப் பெறும் எனக் கொள்க என்றபடி. இதனுல் மெய்யுணர்வின் பயன் பாச நீக்கம் மட்டும் அன்றிச் சிவப் பேறும் ஆம் எனப் பேதவாத சைவர் முதலாயினுரை மறுத்ததாயிற்று.

இவ்விளக்கத்தால் இவ்வதிகரணத்தின் மேற்கோளும், ஐயமும், பிறர் கூறும் பக்கமும், சித்தாந்தத் துணிபும் எளிதின் விளங்கும். இனி இது பற்றி மேலும் எழும் தடைகளும்

விடைகளும் பின் தரப்படுகின்றன. தடை: ஆன்மாத் தத்துவங்களின் நீங்கும்போது தனித்து வேறுநில்லாது முதல்வனைத் தலைப் படும் என்றீர்; பிறப்பு நிலையில், கருவிகளின் நீங்கிக் கனவு, உறக்கம், பேருறக்கம் எனக் கேவலநிலையைத் தலைப்பட்ட உயிர் அக்கேவலத்தின் நீங்கிச் சகலமாகிய கருவிகளோடு புணர்ந்துறு நிலைக்கு மீளுதலைக் காண் கின்றோம். அதுபோல, கருவிகளின் நீங்கிச் சிவத்தைத் தலைப்பட்ட உயிரும் சகலத்திற்கு மீளுதல் உண்டோ? உண்டெனின், மீட்சியில்லை, மீட்சியில்லை'' எனவும், ''பேரா இயற்கை'' எனவும் வீட்டு நிலை பற்றிக் கூறும் மறைகளோடு முரணும் அன்றோ?

விடை:—அணையால் தடுக்கப்பட்டுத் தேங்கி நிற்கும் நீர்த்தேக்கம் போல, ஆன்மாவின் வியாபக உணர்வு தத்துவங்களால் வரும் பாசஞானத்தால் தடைப் பட்டு ஏகதேசமாய் அடங்கிநிற்கும் நிலையே சகலநிலை; அணை முறித்த போது தடை தீர்ந்த பெருவெள்ளம் கடலின்கண் முடுகிச் சென்று, அதன் நீரேயாய் மறித்துவாராது. அதுபோல, பாச ஞானத் தடை நீங்கியபோது குறைவில் ஆற்றலுடைய முதல்வன் திருவருள் நிறைவேயாய் அடங்கும் ஆன்மாப் பின்பு மீளாது எனக் கொள்க. சகலத்தின் நீங்கி மலசத்தியின் வயப் படுதலே கேவலம் எனப்படும்; அதனின் நீங்கி அருட் சத்தி வயப் படுதல் சுத்தம் எனப்படும் வீடு. மலசத்திக்குக் கேடு உண்டு; ஆதலால், கேவலத்தைத் தலைப்பட்ட உயிர் சகலத்திற்கு மீளும். திருவருட் சத்திக்குக் கேடு இல்லை; ஆதலால், திருவடியைத் தலைப் பட்ட ஆன்மாச் சகலத்திற்கு மீளாது. கடலைச் சார்ந்து நிற்றல் வெள்ளத்திற்கு இயற்கை; அணையால் தடுக்கப்பட்டுத் தேங்குதல் செயற்கை. அங்ஙனமே, முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு அடங்கி நிற்கும் இன்புறு நிலையே ஆன்மாவிற்கு இயற்கை; தத்துவக் கூட்டுறவால் ஏகதேசப்பட்டு நிற்றல் செயற்கை என உணர்ந்து கொள்க. முத்திநிலையைப் பேரா இயற்கை எனவும், பிறப்பு நிலையை ''மருளான் ஆம் மாணாப்பிறப்பு'' என ஆக்கச் சொற்புணர்த்தும் உணர்த்தும் பொதுமறையின் நுணுக்கத்தை நுழை புலன் கொண்டு உய்த்து உணர்க. பின்வரும் வெண்பாவில் மெய் கண்ட தேவர் அரன் பாதத்தை '**உலைவில் அரன் பாதம்**' என்பதும் உளங் கொளத்தக்கது.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலனுணர்வின் நீர்ந்து—சிறைவிட்(டு)
அலைகடலில் சென்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவில்அரன் பாதத்தை உற்று.

தடை: ''எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி'' என்பது திருமுறை. ''மருவு பசு கரணங்கள் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரமதனில் துரியாதீதம் தோன்றமுயல்'' என்பது சாத்திரம். இவற்றால், உயிருணர்வுபோலத் தத்துவ உணர்வும் சிவஞானமே ஆம் என்பது பெறப்படுதலின், வீடு பேறு எய்தினார் புலனுணர்வில் மீளினும் இழுக்கில்லை. ஆதலின், அரன்பாதத்தை உற்ற ஆன்மாப் பின் புலன் உணர்வில் மீளாது என வலியுறுத்துதலால் வரும் பயன் யாது? (இங்ஙனம் வினவுவோர் சிவாத்துவித சைவர் முதலாயினோர்).

விடை: பசுபாசம் என்னும் எவற்றது பெற்றியும் சிவமே என அபேதம் கூறின், பிறப்பு நிலையே வீட்டு நிலை எனப்பட்டுத் திருவடி கூடுவார் ஒருவரும் இல்லை எனத் தவறாய் முடியும்; இனி, முதல்வனைப் பசுபாசங்களின் முற்றிலும் வேறே எனக் கூறின், எப்பொருளிலும் தங்கி நிற்போன் என்னும் கருத்தில் அவனை இறை எனக் கூறும் மெய்யுரைகள் பொருளிலவாய் முடியும். ஆதலின், முதல்வனை, இரண்டாம் சூத்திரத்துக் கூறியபடி உடலின் உயிர்போல, பசுபாசங்களில் கலந்து வேறின்றி நிற்பன் எனக் கோடல் வேண்டும். அங்ஙனம் கொள்ளும் போது, அவன் பசுபாசங்களில் நிற்றலின் கண் உள்ள வேறுபாடு அறியத் தக்கது. நம் உடம்பில் உள்ள ஐம்பொறிகளும் உயிருணர்வால்தான் தொழிற்பட்டுப் பொருள்களை நமக்கு விளக்குகின்றன. ஆயினும், கண்ணைப்போலப் பிற நான்கு பொறிகளும் பொருள்களின் முழுப்பெற்றியைக் காட்டமாட்டா. கண்ணின் இம் மேம்பாடு கண்காணாத ஒருவன், அதனைப் பெறும்போது எய்தும் பயன்பற்றி உணரப்படும். அதுபோல, பாசவுணர்வும் பசுவுணர்வும் சிவஞானத்தால் விளங்குவனவாயினும், பாசஞானம் வரம்புபட்டு ஏகதேசமாயே விளங்குவது; பசுஞானம் வியாபகமாக விளங்குவது. இவ்வேறுபாடு பிறப்பு நிலையில் விளங்காதாயினும் மெய்யுணர்ந்தார் மாட்டுவிளங்கும். ஆதலால், மெய்யுணர்ந்தார்க்குப் புலன் உணர்வில் மீளுதல் விரும்பப்படாததே ஆகும். ''மனிதப்

பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே" என்னும் அருண்மொழியில் உள்ள இழிவு சிறப்பும்மை கருதற்பாலது.

எவ்வுருவும் தானென்னின் எய்துவார் இல்லைதான் இவ்வுருவின் வேறேல் இறையல்லன்-எவ்வுருவும் கண்போல் அவயவங்கள் காணுஅக் கண்ணில்லார் கண்பேறே காண்அக் கழல்.

குறிப்பு : முன் உள்ள உரு இரண்டும் பொருட்பெற்றி என்னும் பொருளில் வந்துள்ளன; மூன்றுவது உரு அவயவம் எனப் பொருள்படும்; 'எவ்வுருவும் ஆன்ம உணர்வால் அதிட்டிக்கப்பட்டு நின்றே, பொருள்களை அறிவன ஆயினும், அவை எல்லாம் கண்போல் காணு என இசை யெச்சம் பற்றி வேண்டிய சொற்களை வருவித்து உரைத்துக் கொள்க.

தடை : அரன் பாதத்தை உற்றுர்க்கு ஒரோவழி மீட்சியும் உண்டென்பது திருவாக்குக்களால் உணரப்படுதலின் "மீளாது" என வரையறுத்தல் செல்லாது அன்றோ?

விடை : ஐம்பொறிகளைப்போல ஏகதேச விளக்கம் உடையை அல்லை என்னும் வேதாந்தத்தின் மேம்பட்ட தாய சித்தாந்தப் பெருமொழியைப் பெற்றுள்ள மாணுக்கனே, பாச ஞானத்திற்றீர்ந்து முதல்வன் மீள நோக்குவான் அல்லன்; நீர்ப்பரப்பின் மீது பரவிமூடும். அது போல, முதல்வன் திருவடியை அணைந்தார்க்கு நீங்கிய மலமாயை கன்மங்கள் பண்டைப் பழக்கம் காரணமாகச் சோர்வு பற்றி வந்து கூடும்; கூடும்போது, அப்பெரியோன் பாச ஞானத்தில் மீளாமல் தன்னை விட்டு நீங்காத முதல்வனைச் சிந்தித்து உணர்ந்து அவற்றை நீக்கிக் கொள்ளும். அங்ஙனம் நினைந்து நீங்கும் உபாயங்கள் பின்னர் உணர்த்தப்படும்.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்ததர சிவனை ஐம்பொறியை விட்டங்(கு) அணைசகலன்—
[ஐம்பொறியின்
நீங்கான்; நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின் நீங்கானை நீங்கும் நினைந்து.

இது வருஞ் சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்தது.

(எட்டாஞ் சூத்திரம் முடிந்தது).

நிர்வாக அதிகாரிகள் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. எம். சந்திரசேகரன்	ஸ்ரீ ஆலந்துறையூர் முதலிய கோயில்கள், அரியலூர் உடையார் பாளையம் தாலுகா.	ஸ்ரீமுல்லைவன நாதசுவாமி முதலிய கோயில்கள், திருக்கருகாவூர், பாபநாசம் தாலுகா.
திரு. எஸ். ராமையா	ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி கோயில்கள், திருக்கருகாவூர், பாபநாசம் தாலுகா.	ஸ்ரீ ஆலந்துறையூர் முதலிய கோயில்கள், அரியலூர், உடையார்பாளையம் தாலுகா.
திரு. எஸ். நடராஜன்	ஸ்ரீதிருவாலீஸ்வரர் கோயில், பாடி, ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் கோயில், திருமுல்லைவாயில்.	ஸ்ரீ மகுடேஸ்வரர், ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள் கோயில், கொடுமுடி.

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

ஸ்ரீ சுகவனம் சுப்பிரமணிய சுவாமி கோயில், சேலம்.	கந்தர்சஷ்டி.
,, ஜனகநாராயண பெருமாள் கோயில், சோழவந்தான்.	நவராத்திரி.
,, பாண்புரீஸ்வர சுவாமி கோயில், பாணுதுறை, கும்பகோணம்.	மகாகும்பாபிஷேகம்.

சிறப்புடைய புராணங்கள்

முன்னுரை

சமயச் சார்பான பலவகை இலக்கியங்களுள், புராணங்கள் என்பனவும் ஒருவகையாகும். சமயத்துறையிற் புராணங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஒரு சிலர் 'புராணம்' என்னும் சொற்கேட்ட மாத்திரத்திலேயே, அவற்றை மிக எளியவாக எண்ணி இகழ்ந்துரைத்து ஒதுக்கி விடுவதுண்டு. இறையனார் களவியல் என்னும் நூலில், ஆசிரியர் நக்கீரனார் "களவு என்னும் சொற்கேட்ட துணையானே, களவு தீயது என்று இகழ்ந்து விடுதல் கூடாது. களவும் நன்றாமாறு உண்டு" எனக் கூறுமாறு போல, புராணங்கள் என்னும் சொல்லைக் கேட்ட அளவிலேயே, அவற்றையெல்லாம் இழிந்தனவாகவே துணிந்து கொண்டு, இகழ்ந்து ஒதுக்குதல் முறையன்று எனலாம்.

'அழகென்பது பொருளில் இல்லை. அதனைக் காணும் கண்ணைப் பொறுத்தேயுள்ளது' (Beauty lies in the eyes of the beholder) என்று அறிஞர்கள் கூறுவது போல, புராணங்களின் சிறப்பும் பிறவும் அவற்றை ஆய்ந்துணர்ந்து பயன்கொள்ளும் நம் அறிவின் திறனுக்கும் நலனுக்கும் ஏற்பவே அமைவன ஆகின்றன.

பதினெண் புராணங்கள்

'புராணம்' என்பது புராதனம் (பழைமை) என்னும் சொல்லின் அடியாக அமைந்தது என்பர் அறிஞர். எனவே, பழைய காலந்தொட்டு வழங்கிவரும் வரலாறு (தொல்கதை)களே புராணங்கள் எனப் பெயர் பெற்றன எனக் கொள்ளுதல் பொருந்தும். புராணங்கள் பதினெட்டு என அறிஞர்கள் புகலுவர்.

அவற்றுள், சைவம் பவிடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மச்சம் கூர்மம் பிரமாண்டம் என்னும் பத்தும் சிவபிரானுக் குரிய புராணங்கள் ஆகும்; பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமதேவனுக்குரிய புராணங்கள்; கருடம் நாரதம் பாகவதம் விஷ்ணு என்னும் புராணங்கள் நான்கும் திருமாலுக்கு உரியவை; ஆக்கினேயம் என்பது அக்கினி தேவனுக்கு உரியது; பிரமகைவர்த்தம் என்பதோ சூரியனுக்கு உரிய புராணம் எனப்படும்.

எதிரில் சைவமே பவிடியம்
மார்க்கண்டம் இலிங்கம்
மதிகொள் காந்தம் நல் வராகமே
வாமனம் மற்சம்
புதிய கூர்மமே பிரமாண்டம்
இவை சிவ புராணம்;
பதும மேலவன் புராணமாம்
பிரமமே பதுமம்;

கருது காருடம் நாரதம்
விண்டு பாகவதம்
அரிக தைப்பெயர்; ஆக்கி
னேயம் அழற்காதையாம்;
இரவி தன்கதை பிரம
கைவர்த்தமாம்; இவைதாம்
தெரியும் ஒன்பதிற் றிருவகைப்
புராணமாம் திறனே

—கச்சியப்ப சிவாசாரியர்.

சூதன் ஒலிமாலை

இறைவன் தான் அருளிச் செய்த வேதாகமங்களை ஓதி யுணரும் அறிவாற்றல் பெறாத எளிய மக்கள் ஈடேறுதல் கருதி, அவற்றின் சாரத்தினை யுட்கொண்ட சரிதம் ஆகிய புராணங்களை நந்திதேவர் வாயிலாக அகத்தியர்

முதலிய முனிவர் பெருமக்களுக்கு உபதேசித்தருளினுன். அம்முனிவர்களுள் ஒருவராகிய சனற்குமாரர் என்பவர், பின்னர் அவற்றை வேதவியாசர்க்கு உபதேசித்தார். வியாசர் அவற்றைத் தம் மாணவர் ஆகிய சூதமுனிவர்க்கு உபதேசித்தருள, சூதமுனிவர் நைமிசாரண்யத்தில் வதிந்த முனிவர்களுக்கு எடுத்துக்கூறி, அறிவுறுத்தி யருளினுர்.

நாதனுர் அருள்பெறு நந்தி தந்திடக்
கோதிலா துணர்சனற் குமரன் கூறிட
வாதரா யணமுனி வகுப்ப ஓர்ந்துணர்
சூதன்ஓ தியதுமு வாறு தொல்கதை
—கச்சியப்ப சிவாசாரியர்.

இங்ஙனம் சூதமுனிவரால் அருளிச் செய்யப் பெற்றமை பற்றிப் புராணங்கள் "சூதன் ஒலிமாலை" எனவும் வழங்கப்பெறும். அவைகள் இறைவனது பெருமையினையும், இறையருளின் திறனையும் விளக்குவதோடு, மக்கள் ஒழுக்கநெறி தவறுதல் ஆகிய குற்றம் எய்தாதபடி, உயரிய பல நீதிகளையும் செய்திகளையும், சுவைஒளிர உரிய முறையில் நம் உளங்கொளப் புகட்டுகின்றன. புராணங்களின் இவ்வியல்பினை இற்றைக்குச் சற்றேறக்குறைய 1300 ஆண்டுகட்கு முன்பே, திருஞான சம்பந்தப் பெருமான், சிறந்தெடுத்து மொழிந்துள்ளார்.

வேத முதல்வன் முதலாக
விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்
தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே
முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே
கலிக்கோவை சொல்லே

'திருப்பாசுரம்' எனச் சிறப்பித்து ஓதப் பெறும் திருப்பதிகத்தின்கண் வரும் இப்பாடலில், 'சூதன் ஒலிமாலை' என்றும் 'கலிக்கோவை' என்றும் புராணங்களைத் திருஞான சம்பந்தர் சிறப்பித் தருளி யிருத்தல் காணலாம்.

சேக்கிழார் விளக்கம் :

பதினெண் புராணங்களும் இறைவனின் எல்லையில்லாப் பெருமைகளை இனிது விளக்குவன; திருவருளின் சிறப்பைச் செவ்விதின் விரித்துத் தெளிவிப்பன; நமக்கு ஏற்படும் இடர்கள் பலவற்றையும் நீக்கி நலம் விளைவிப்பன; ஆதலின் சிவபிரானுல் அருளிச் செய்யப் பெற்ற புராணங்களை ஏற்றபெற்றி ஓதியுணர்ந்து பயன் கொண்டு போற்றுதல் உலக மக்களின் கடமை! மேற்குறித்த திருஞான சம்பந்தர் தேவாரப் பாடலின் பொருள் இதுவே என்று, சேக்கிழார் பெருமான் பின்வருமாறு அதனை விளக்கியருள்கின்ருர்.

'வேத முதல்வன்' எனும்பெயர்த்
திருப்பாட் டினில்நேர் :
ஆதி உலகோர் இடர்
நீங்கிட, ஏத்த, ஆடும்
பாதம் முதலாம் பதினெண்
புராணங்கள் என்றே,
ஓது என்று உரைசெய்தனர்;
யாவும் ஓதாது உணர்ந்தார்!

எனவே, சமயச் சான்ருேர்களின் செந்நெறியையே பின்பற்றி ஒழுகி, இறையருளைத் தலைப்பட்டுய்ய விரும்பி நின்று, இன்ருேரனைய திருமொழிகளை யெல்லாம் ஓரளவேனும் ஆராய்ந்துணர வல்லார், புராணங்களை மிக எளிதில் இகழ்ந்துரைக்க முற்பட்டு விடார். கொள்வோன் கொள்வகைக் கேற்பவே, ஒவ்வொரு பொருளும் அமைந்து தத்தம் பயனை ஒருவனுக்கு அளிக்கும்!

சைவத்தின் படிநிலைகள் :

சிறந்த சமய தத்துவ உணர்வும், நிறைந்த அருளனுபவமும் பெறுதற்குப் புறச்சமய நெறி நிற்றல்—அகச்சமயம் புகுதல்—மிருதிவழி யுழலுதல்—ஆச்சிரம அறத் துறைகள் அடைதல்—அருந்தவங்கள் புரிதல்—அருங்கலைகள் பல தெரிதல்—ஆரணங்கள் படித்தல்—வேத சிரப் பொருளை மிகத் தெளிதல் எனப் படிப்படியே செல்லும் பலவகை நிலைகளுள், சிறப்புடைய புராணங்களை யுணர்தலும் ஒன்ருகச் சைவ சித்தாந்த சாத்திரங்கள், பதினுன்கனுள் தலைசிறந்ததாகத் திகழும் சிவஞான சித்தியார் (சுபக்கம் : செய்யுள் 263) கூறுதல் காணலாம்.

'சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்,
வேத சிரப் பொருளை
மிகத் தெளிந்தும் சென்றால்
சைவத் திறத்து அடைவர் ....'

எனவரும் இச் செய்யுட் பகுதியில், புராணங்களைச் "சிறப்புடைய புராணங்கள்" என அடைமொழி கொடுத்துப் புகழ்ந்துரைத் திருப்பது, ஈண்டு நாம் எண்ணியுணர்தற் குரியது.

அடைமொழித் தொடர் :

ஒரு கவிஞனின் அறிவு அனுபவ நலங்களை உணர்தற்கு, அவன் வழங்கும் அடைமொழிகள் பெரிதும் துணைசெய்யும். (The choice of adjectives is a fine test of a poet's originality). நீ பயன் படுத்தும் அடைமொழிகளைப் பொறுத்தே உன்னைக் குறித்து உலகம் ஒரு முடிவு கொள்ளும் (By your adjectives shall you be judged) என மேலைநாட்டு அறிஞர்கள் கூறுவது உண்டு. "திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும் பொருளும் அதனின் ஊங்கு இல்" என ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலும் காணலாம்.

அடைமொழிகள் பொதுவாக இரு திறப்படும். ஒருசில அடைமொழிகள், ஒரு பொருளை அதன் இனமாகிய பிற பொருள்களினின்றும் பிரித்துக் காட்டும்; செந்தாமரை என்பது போல. வேறு சில அடைமொழிகளோ, அங்ஙனம் ஒரு பொருளைப் பிறவற்றினின்று பிரித்துக் காட்டாமல், தாம் அடுத்துவரும் பொருளின் இயல்பு இத் தன்மைத்து என்பதை மட்டுமே விளக்கி நிற்கும்; வெண்திங்கள் என்பதுபோல. இவ் விருவகை அடைமொழிகளையும் முறையே பிறிதின் இயைபு நீக்குதல் (அந்நிய யோக வியவச் சேதம்) எனவும், இயைபின்மை நீக்குதல் (அயோக வியவச் சேதம்) எனவும் பெயரிட்டுச் செந்தமிழ்ச் சான்றோர்களாகிய சேனாவரையர், சிவஞான சுவாமிகள், 'பிரயோக விவேகம்' இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் என்னும் சான்றோர்கள் விளக்கியுள்ளனர்.

"சிறப்புடைய புராணங்கள்" என்னும் அடைமொழித் தொடர், பிறிதின் இயைபு நீக்குதலாக வேனும், அன்றி இயைபின்மை நீக்குதலாகவேனும் ஏற்றவாறு நாம் பொருள் கொள்ளும் வகையில், அமைந்துள்ளது. இஃது அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளை யுணர்த்த வல்ல சான்றுகளுள் ஒன்றாகும். அருள்நந்தி சிவாசாரியர் ஒப்புயர்வற்ற சமய நெறிச் சான்றோர் (Spiritualist) மட்டும் அல்லர்; ஒரு சிறந்த பகுத்தறிவு நெறிப் பண்பாளரும் (Rationalist) ஆவர் என்னும் அரும் பெறல் உண்மையினை இச் சிறந்த அடைமொழித் தொடர், நமக்குத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது.

புராணங்களின் சிறப்பு :

புராணங்களுக்குச் சிறப்பாவது, மிக நுண்மைத் தன்மை (சூக்குமம்) வாய்ந்த கருத்துக்களை யாவரும் உணரும்படி, பருமை மிக்க (ஸ்தூல) வடிவில்வைத்து விளக்குதலும்; அருவமும் கடினமுமான செய்திகளை விளக்க அவற்றிற்கு ஓர் உருவம் கொடுத்து எளிய இனிய கதைகளாக்கிக் கூறுதலும்; மனித வாழ்வியல் உண்மைகளையும் அனுபவங்களையும் சுவைமிக்க அழகிய கவிதைகளில் அரிய முறையில் அறிவுறுத்துதலும் ஆகும்.

இச் சிறப்பியல்பில் இந்தியப் புராணங்கள் மிகவும் தலை சிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழகுடனும், நிறைந்த பொருள் வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணர உணர அவற்றின் ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும் நம்மனோர்க்கு வியப்பும் விம்மிதமும் விளைவித்து, அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த நம் முன்னோர்களின் நுண்மாண் நுழைபுலத்தினை வெளிப்படுத்துகின்றன. *

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் :

வேதம் எஜமானன் கட்டளை இடுவது போல்வது. "சத்தியம்வதா தர்மம் சரா" (உண்மையே பேசுக; அறநெறியிலே நடக்க!) எனவேதம் கட்டளையிடும். மனிதர்கள் செய்யத்தக்கனவற்றை விதித்தும், செய்யத் தகாதன

* "Indian mythology is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them".

—Sri Jawaharlal Nehru,
The Discovery of India, p. 66.

வற்றை விலக்கியும் "விதி-நிஷேத-ரூபம்" ஆகக் கட்டளை இடும் முறையில் வேதங்கள் அமைந்துள்ளன. ஆதலின் அவற்றை அலங்கார நூலார் "ப்ரபு சம்ஹிதை" என்பர். அன்பிற் சிறந்த நண்பர்கள் தமக்குள் அகங்கலந்து நின்று அளவளாவி மகிழ்ந்து உரையாடுவது போல்வன, இதிகாசங்கள். ஆதலின் அவற்றைச் "சஹ்ருத் சம்ஹிதை" என வழங்குவர். மனைவி கணவன்பால் இனிமை பெருகக் களித்துரையாடி, அவனைத் தன் கருத்திற்கு இணங்கச் செய்யும் கனிவுரை போல, வேதங் கூறும் விதி நிஷேதங்களைச் சுவைபெருகச் சொல்லி இன்பம் பயந்து, அவற்றை யாவரும் அகமகிழ்ந்து கடைப்பிடிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தவை, புராணங்களேயாம். ஆதலினால் புராணங்களைக் "காந்தா சம்ஹிதை" என அறிஞர்கள் புகலுவர். கசப்பு மருந்தை உண்ண மறுப்பவனுக்கு, அவன் விரும்பி யுண்ணும்படி அதன் மீது தேனும் சருக்கரையும் தீற்றித் தருதல் (குளஜிஹ்வா நியாயம்) போல, இனிமை பயவாத பொருள்களையும் இன்பம் பெருக நன்கினிது இயம்ப வல்லன, புராணங்களே எனலாம்.

வேதப் பொருளை உள்ளபடி அறிவது மிகவும் கடினம். மழைத்துளி சிப்பியின் வயிற்றில் விழுந்தால் முத்தாகின்றது; நெருப்பில் விழுந்தாற் சுவறிப் போகின்றது; பிற இடங்களில் விழுந்தால் அவ்வவற்றிற்கேற்ப அமைகின்றது. அது போல, வன் சொற்களினாற் புணர்க்கப் பட்ட வேதங்கள் கன்மானு சாரமாகப் பலர்க்கும் பலவகைப்பொருள் கொள்ளக் கிடக்கும். எனவே, புராணங்களின் துணை இன்றியமையாத தாகின்றது. இவ்வாற்றாலும், புராணங்களின் சிறப்புடைமையை நாம் இனிதறிந்து கொள்ளலாம். இங்ஙன மெல்லாம் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், புராணங்களின் இயல்பினை அவ்வப்போது விளக்கி மகிழ்விப்பது உண்டு.

எனவே, நாம் புராணங்களை ஏற்ற பெற்றியிற் படிக்கவும், கேட்டின்புறவும் வேண்டும். "எனைத்தானும் நல்லவை கேட்க. அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என வரும் திருக்குறள் மொழிகள் ஈண்டைக்கும் பொருந்தும்.

கதையும் கருத்தும் :

புராணங்களைப் பயிலுங்காலும் கேட்குங்காலும், அவற்றின் நுட்பங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வெறும் கதையை (Exoteric) மட்டுமே நோக்காது, அவற்றின் உட்கருத்தையே (Esoteric) நாம் பெரிதும் ஊன்றி நோக்கி யுணர்தல் வேண்டும். கருத்தை விளக்குதற்கே கதை போந்தது. சிலர் கதையை மட்டுமே பிடித்துக் கொண்டு, கருத்தை விட்டு விடுவர். அவர்தம் செய்கை "நெய்யரி" போல்வதே எனலாம். நுட்பமான அரும்பெருந் தத்துவக் கருத்துக்களை (Abstract ideas) யாவரும் இனிது உணர்ந்து கொள்ளும் பொருட்டுப் பண்டைப் பெரியோர்கள் பருவடிவில் (Concrete form) அழகுற அமைத்து விளக்கி யுதவி யிருப்பனவே, புராண கதைகள் ஆகும். சிவபிரான் திரிபுர தகனம் செய்தருளினன் எனக் கூறும் புராண கதையின் நுண்பொருள், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அவன் அழித்தொழித்தான் என்பதேயாம்! இதனை ஆசிரியர் திருமூலர் தமது திருமந்திர நூலில்,

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே

என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். இதனால், கலைத்திறம் மிக்குக் கவிதைநலம் பெற்றுத் திகழும் புராணகதைகளின் கருத்து நுட்பங்களை ஆய்ந்துணர்ந்து கொள்ளுதல் நம்மனோர்க்கு இன்றியமையாத கடமை என்பது பெறப்படும்.

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு

என்பன போன்ற திருக்குறள்களில், ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், புராணகதைகளைப் போற்றி எடுத்துக் கையாண்டிருத்தல் காணலாம்.

வழிகாட்டும் வான் பொருள்கள்

தாளாண்மை (முயற்சி) இல்லாதவர்கள் வேளாண்மை (பிறர்க்குதவி, உழவுதொழில்) செய்வதும், வேளாண்மை (வாள்கொண்டு போர்செய்யும் வீரம்) இல்லாதவர்கள் போரில் வெற்றி பெறுதலை விரும்பிப் போர்க்களத்திற்குச் செல்லுவதும், புராணங்களைப் படித்தும் கேட்டும் அறியாதவர்கள் அறம் பொருள் இன்பங்களின் முடிந்த பயனாகிய வீடுபேற்றை அடைய விழை

வதும், கண்ணில்லாத குருடர்கள் வழியறிந்து நடந்து செல்ல இயலாது இடர்ப்படுதல் போல, இடர் விளைக்கும் பயனில் செயல்களேயாகும்.

தாளாண்மை இல்லாதார் வேளாண்மை
செய்குவதும், தரைமேல் என்றும்

வேளாண்மை இல்லாதார் மனைவாழ்க்கை
செலுத்துவதும், விசயம் வேட்டு

வாளாண்மை இல்லாதார் மண்டுசமர்க்கு
ஏறுவதும், வளர்புராணம்

கேளாதார் கதி விழைவும், விழியில்லார்
வழிநடக்கும் கிரமம் ஆமால் !

—திருக்குற்றாலத் தலபுராணம்.

இதனால், மக்கள் தம் வாழ்க்கையில் சமய உணர்வு எய்தி இறையருள் நெறியில் நின்று, வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வதற்கு வழிகாட்டும் வான்பொருள்களாக வயங்குவன, நம்முடைய பெரியவர்கள் வகுத்தளித்துப் போந்த சிறந்த புராணங்களே எனத் தெளியலாம்.

அரிச்சந்திர புராணம் :

புராணங்கள் தம்மைப் போற்றிப் பயிலும் மனிதர்களுக்கு, எத்துணைப் புனிதமான உணர்ச்சிகளை இக்காலத்திலும் விளைவிக்கின்றன என்பதற்கு, வேறொரு சான்று ஏதும் விளம்புதல் வேண்டா. உலகப் பெருஞ் சான்றோர் எனப் பெரிதும் உடன்பட்டுப் போற்றி அனைத்துலகும் புகழாநிற்கும் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை யொன்றே, நமக்குப் போதிய சான்றாகும். *

* "This play-**Harishchandra**-captured my heart. I could never be tired of seeing it. It haunted me and I must have acted Harishchandra to myself times without number. 'Why should not all be truthful like Harishchandra?' was the question I asked myself day and night. To follow truth and to go through all the ordeals Harishchandra went through was the one ideal it inspired in me. **I literally believed in the story of Harishchandra. The thought of it all often made me weep.** My commonsense tells me today that Harishchandra could not have been a historical character. Still both Harishchandra and **Shravana are living realities for me,** and I am sure I should be moved as before if I were to read those plays again today.

—**Mahatma Gandhiji**,
My Experiments with Truth, p. 6.

தாம் தம் இளஞ்சிறு பருவத்தில் பார்க்க நேர்ந்த அரிச்சந்திர புராண நாடகம் தம் உள்ளத்தை எங்ஙனமெல்லாம் கொள்ளை கொண்டு விட்டதென்றும், அளப்பரும் தொல்லைகள் அடைய நேரிடினும் சத்தியத்தையே கடைப்பிடித்தல் வேண்டும் என்னும் உணர்வைத் தம் வாழ்க்கையின் அடிப்படையாக வகுத்துக் கொடுத்தது அரிச்சந்திர புராணக் கதையே என்றும், தமது "சத்திய சோதனை" என்னும் நூலில், அண்ணல் காந்தியடிகள் நமக்கு அறிவுறுத்தி யருளியிருக்கின்றார்.

முடிவுரை :

காந்தியடிகளைப் போலவே, அவ்வக் காலந்தோறும் பற்பல சான்றோர்கள் புராண நூல்களை ஓதிப் புனித உணர்ச்சிகளைப் பெற்றுச் சிறந்து விளங்கி யிருப்பர் என்பது, சொல்லாமலே எளிதிற் தெளிவாம். வேறு பிற காரணங்கள் ஒருபுறம் இருப்ப, லார்ட் மெக்காலே என்னும் ஆங்கில நாட்டுப் பேரறிஞர் தம் நாட்டுக் கதைகள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடுதல் போல *, வழிவழியே வாழையடி வாழையாக வந்த நம்முன்னோர்கள் பலரும், தொன்றுதொட்டு எத்துணையோ பல நூற்றாண்டுகளாகப் படித்தும் கேட்டும் பயன் கொண்டு மகிழ்ந்த மானதக் கலைப்பெருஞ் செல்வங்களே (Mental heritage) புராணங்கள் என உணர்ந்து, நாம் அனைவரும் அக்கலைச் செல்வங்களைத் திறனறிந்து ஏற்றபெற்றி பயன் கொண்டு போற்றிச் சிறப்புறுவோமாக!.

[தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் சீலத்திரு சிவஞான தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில், 28-10-63 திங்கள் அன்று, காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் நிகழ்ந்த கந்தபுராண விரிவுரை நிறைவுவிழாவிற் பேசியதனைத் தழுவியது. —ஆசிரியர்]

* "In these anecdotes there is doubtless a large mixture of fable; but they are not on that account unworthy of being recorded; for **it is both an authentic and an important fact that such tales,** whether false or true, **were heard by our ancestors with eagerness and faith.**"

—**Lord Macaulay**,
in The History of England.



திரிபுவனம் கும்பாபிஷேகப் பெருவிழாவிற் சிறப்புற அமைக்கப் பெற்றிருந்த அழகிய வேள்விச்சாலையும், அங்கு நமது அறநிலைய ஆணையர் அவர்கள் உரை நிகழ்த்துதலும்.

திரிபுவனம் கும்பாபிஷேகப் பெருவிழாவிற் கலந்து கொண்டு மகிழ்ந்த பெருமக்கள் திரளில், ஒரு பகுதி.



திரிபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவர சுவாமி கோயில் விமானம்





சோளிங்கபுரம் ஸ்ரீ பக்த உசித சுவாமி கோயிலின் அழகிய கோபுரக் காட்சிகள்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.